# கிறிஸ்து இஸ்லாமில்



அப்துல் ஃபாதி

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

**WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599**

**Email: wordofgod@wordofgod.in**

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

**WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599**

**Email: wordofgod@wordofgod.in**

# கிறிஸ்து இஸ்லாமில்

அப்துல் ஃபாதி

**THE PERSON OF CHRIST**
In Islam of Christianity
*(Tamil)*

*by*
**ABDUL FADI**

1st Edition 1992

All rights reserved. No part of this Publication may be translated, or transmitted on any form or by any means elctronic or mechanical, including photo-copy, recording or any information storage and retrieval system without permission in writing from the publisher.

*Published by*
**Markaz Ul Bisharah**
Manjeri - 676 121
S. India

Price Rs. 4-50

No. of Copies: 5,000

*Printed at*
**Ebenezer Printers**
Trichur - 12
Ph: 22892, 40892

# கிறிஸ்து இஸ்லாமில்

குர்ஆனில் காணப்படும் 15 வசனங்களில் 93 முறை கிறிஸ்துவைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் ஆள் தத்துவம் விவாதத்திற்கு வரும்போதெல்லாம் முஸ் லீம்களின் சிந்தனை இவ்வசனங்ளுக்கு எதிரிடையாக மாறுகின்றன. பலகாலங்களாக இந்த வசனங்களுக்கு விளக்கங் காணும் போதெல்லாம் கிறிஸ்தவ ஏடுகளையே முஸ்லீம் வேதாந்திகள் அணுகினார்கள்.

தாங்கள் எழுதியவைகளை கணிக்கும்போது அவர்கள் முஸ்லீம் சிந்தனையோடு ஒன்றிணைந்து போகக் கூடிய வைகளை மாத்திரமே ஏற்றுக் கொண்டு வேதாகமம் (பைபிள்) குர்ஆன் இரண்டுக்கும் மத்தியிலே ஒருமைப் பாட்டைக் காணும் முயற்சிகளை மேற்கொள்ளாது. இவ்வி ரண்டிலும் காணப்படும் அடிப்படை நம்பிக்கைகள் பாரம்ப ரியக் கதைகளின் வேற்றுமைகளினிமித்தம், முஸ்லீம் சிந்தனைக்கு ஒன்றிணைந்துபோகக் கூடிய இயல்புவாய்ந்த கருத்துக்களை மட்டுமே ஏற்றுக் கொண்டார்கள். குர்ஆ னின் நன்மதிப்பை உயர்த்த வேண்டுமென்ற தங்கள் பெருமுயற்சியில் குர்ஆனில் வசனங்கள் மாறுபாடாகக் காணும்போதெல்லாம் வேதாகமத்தில் குறைபாடுள்ளதாக குற்றஞ்சுமத்துகிறார்கள்.

இந்த உரையாடலிலே கிறிஸ்தவக் கோட்பாடுகளை எதிர்க்கும்போது, குர்ஆனைக் குறித்த சிந்தனை எவ்வாறு படிப்படியாக வளர்ச்சியடைந்தது என்பதனை எடுத்துக் காட்ட முனைகின்றேன். குர்ஆனைப் பொருத்து ஆராய்ச்சி செய்யும் எவரும், குர்ஆனுடைய ஆரம்ப வசனங்கள்

முதலாக மெக்கா காலம் வரையிலுமுள்ளவை கிறிஸ்தவத்திற்கு அனுதாபமும், கிறிஸ்துவுக்கும் அவரை பின்தொடர்பவர்களுக்கும், குருமார்கள், துறவிகளானவர்களுக்கும் அனுகூலமாக சார்ந்திருப்பதைக் காணலாம். மதீனாவிலே முஹம்மதுவின் இறுதி காலகட்டம் முதலாக வசனங்கள் கடினமாகத் தோன்ற ஆரம்பித்து, கிறிஸ்தவர்களுக்கு பகைமையுள்ளதாய், கிறிஸ்துவின் இறைத்தன்மையை முற்றிலும் நிராகரிக்கலாயிற்று. இதற்கு மதக் கொள்கையே முற்றும் காரணமென்பதில் ஐயமில்லை. இஸ்லாம் அறிவிக்கும் இறைவனின் ஒருமைப் பாட்டிற்கும் அதன் செய்திகள் அமைந்திருக்கும் அடிப்படைத் தத்துவங்களுக்கும் எதிரிடையாக திரித்துவத்தின் கொள்கையில் முரண்பாடுள்ளதை முஹம்மது கண்டதே காரணமாகும். இக்காரியத்திற்கு எவ்வித சகிப்புத் தன்மையுமில்லாது மறுத்து, திரித்துவக் கொள்கையையும், கிறிஸ்தவர்களின் பண்டை இறைவணக்கத்தையும் இறைவனோடு பங்காளிகளாக உறவாடுதலையும், மதத்தின் மிகைப்படக் கூறுதலையும் வன்மையாய்க் குறைகூறும் அநேக வசனங்கள் குர்ஆனில் உண்டு.

அரேபியா தீபகற்பமெங்கும் சிதறிக் காணப்பட்ட மாறுபட்ட கிறிஸ்தவப் பிரிவினர்கள் மேற்கொண்டிருந்த திரித்துவக் கருத்தும், தேவன், அவருடைய பங்காளி மேரி, அவளுடைய குமாரன் ஈஸா உள்ளடங்கிய இவர்களுடைய திரித்துவம் என்பதால் முஹம்மது கலக்கமடைந்திருக்கலாம். உண்மை கிறிஸ்தவர்கள் இத்தகைய கருத்தை ஒருபோதும் கூறவில்லையென்றாலும், சகல சந்தர்ப்பங்களிலும் கிறிஸ்தவர்கள் எல்லாவித விளக்கங்களைக் கொடுத்திருந்தும் முஸ்லீம்கள் இதை ஒருபோதும் கைவிடாமல் பெரும் பிரச்சினையாகக் கையாண்டுள்ளனர்.

ஆழமாக வேரூன்றிய மற்றும் ஒரு பிரச்சினை இருக்கிறது. குர்ஆனில் காணப்படும் ஒரு வசனமே இதற்கு காரணம்.

وَإِذْ قَالَ عِيسَى ٱبْنُ مَرْيَمَ يَٰبَنِىٓ إِسْرَٰٓءِيلَ إِنِّى رَسُولُ ٱللَّهِ إِلَيْكُم مُّصَدِّقًا لِّمَا بَيْنَ يَدَىَّ مِنَ ٱلتَّوْرَىٰةِ وَمُبَشِّرًۢا بِرَسُولٍ يَأْتِى مِنۢ بَعْدِى ٱسْمُهُۥٓ أَحْمَدُ فَلَمَّا جَآءَهُم بِٱلْبَيِّنَٰتِ قَالُوا۟ هَٰذَا سِحْرٌ مُّبِينٌ ٦

மேலும், மர்யமின் குமாரர் ஈஸா : ''இஸ்ராயீல் மக்களே! நான் தவ்றாத்திலிருந்து, எனக்கு முன்னருள்ளதை மெய்ப்பிப்பவனாகவும்; எனக்குப் பின்னர் வரவிருக்கும் அஹ்மது என்னும் பெயருடைய தூதரைப் ப்ற்றி நன்மராயம் கூறுபவனாகவும் இருக்கும் நிலையில் அல்லாஹ்வின் தூதனாக உங்களிடம் வந்துள்ளேன்'' தெளிவான அத்தாட்சிகளை அவர் கொண்டுவந்த போது, அவர்கள் ''இது தெளிவான சூனியமாகும்'' என்று கூறினார்கள். (61:6)

ஒரு கலந்துரையாடலில் அபு ஜாஃபர் அத்தபாரியான வர் முவாவியே பின் சாலீஹ்லிருந்தும் சையத் பின் சுவாயீதிலிருந்தும் அல் அலாபின் ஹிலால் அல் சுலாமிலிருந்தும், இர்பாள்பின் சாரியாவிலிருந்தும் எடுத்துரைத்ததாவது.

''அல்லாஹ்வின் தூதுவர் கூறுவதைக் கேட்டேன்'' தீர்க்கதரிசிகளின் முத்திரையாக நான் இறைவனோடு பூர்வத்தில் நியமிக்கப்பட்டேன். உண்மையாகவே ஆதாம் மண்ணோடு கலந்தவன். எனது தகப்பன் ஆபிரகாம்

ஜெபித்தான் என்பதை உங்களுக்கு முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். ஈஸாவும் என்னைப் பற்றி அறிக்கை செய்தார். எனது தாயாரும் கண்ட ஒரு தரிசனமும் உண்டு. அதுபோல் தீர்க்கதரிசிகளின் தாய்மார்களும் எனது தாயா னவள் என்னை பிரசவித்தபோது அவளிடமிருந்து ஒரு பேரொளி பிரகாசிக்கக் கண்டனர். அந்த ஒளி தமஸ்குவின் அரண்மனைகளை பிரகாசிக்கப் போதுமானதாக இருந்தது.

முஸ்லீம்கள் இவ்வசனங்களை அதன் சொற்களின்படி ஏற்றுக்கொள்ளுகிறார்கள். வேதாகமத்தில் முஹம்மதுவைக் குறித்து தீர்க்கதரிசனமோ, வேறு குறியீடுகளோ இல்லாதி ருப்பதாலும், அவரைக் குறித்து இயேசு ஒரு விபரமும் கூறாதிருப்பதாலும் இஞ்ஜீல் குற்றமுள்ளது என்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

மூன்றாவது சங்கடமும் ஒன்றிருக்கிறது. கிறிஸ்துவர்க ளின் மத அடிப்படையின் உண்மை வேதாகமத்திலே காணப்படும் இயேசுவின் பாடுகளும் அவர் சிலுவையில் அறையப்படுவதிலும் உள்ள நம்பிக்கையே காரணமாக இருக்கிறது.

குர்ஆன் சிலுவையின் பாடுகளை மறுக்கின்றது. ஏனென் றால் யூதர்களைக் குறித்து பின்வருமாறு கூறுகிறது. அவர்கள் கூறியதன் காரணமாக ''மேசியாவை மேரியின் மைந்தன் ஈஸாவைக் கொலை செய்தோம். அவரை அவர்கள் கொலை செய்யவோ சிலுவைக்கு ஒப்புக்கொடுக் கவோ இல்லை. அப்படிச் செய்யப்பட்டதாக ஒரு தோற்றம ளித்தது. அந்தோ! அவரைக் குறித்து ஒற்றுப் போகாதவர்க ளும் தாங்களே அவரைப் பற்றி சந்தேகிக்கிறார்கள். பின்வரும் கருத்தைத் தவிர அவரைக் குறித்து அவர்கள்

வேறொன்றும் அறிந்திருக்கவில்லை. அவர்கள் அவரை திட்டமாக கொலை செய்ய கிடையாது. அல்லாஹ் அவர் தம்மோடு எடுத்துக் கொண்டார். அல்லாஹ் எக்காலும் வல்லவர் ஞானமுள்ளவர்'' (4:157)

நான்காவது சங்கடமும் ஒன்று உண்டு.

கிறிஸ்து இறைவனுடைய குமாரனென்று கிறிஸ்தவர்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையே காரணம். இந்த நம்பிக் கையை அநேக தொடர் வசனங்களைக் கொண்டு குர்ஆன் கண்டனம் செய்திருக்கிறது. இவைகளை இச்சிறு வெளியீட் டிலே விளக்கங்களோடு தகுந்த இடங்களிலே குறிப்பிடக் காணலாம்.

## குர்ஆனில் கிறிஸ்துவின் தெளிவான குணநலன்கள்

அடிப்படையான கிறிஸ்தவ மதக் கொள்கைகளுக்கு இஸ்லாமின் எதிர்ப்பு இருந்தாலும் மனிதர்களுக்கு மேலான மலையில் உயர்த்தும் கிறிஸ்துவின் சிறப்பியல்புக ளையும் கௌரவத்தையும் குர்ஆன் ஏற்றுக் கொள்கிறது. இத்தகைய சிறந்த இலட்சண மேன்மை அவருடைய வாழ்க்கை முறையிலும் நடத்தையிலும், அவருடைய செய்திகளிலும், அவர் உருவத்திலும் மிளிர்ந்தன. குர்ஆன் கூறுகின்ற தீர்க்கதரிசிகள் அப்போஸ்தலர்களோடு இவ்வு யர்ந்த பண்பாடுகளை நாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அவர்கள் எவருக்குமே ஒப்பிடாததை, ஏன் முஹம்மது தமக்கே உரிமை கூறாததை கிறிஸ்துவுக்கு உரித்தான விசேஷித்த சிறப்பியல்புகளை வெளிப்படுத்துகிறது.

# 1. அவருடைய அதிசய உற்பத்தி

وَمَرْيَمَ ٱبْنَتَ عِمْرَٰنَ ٱلَّتِىٓ أَحْصَنَتْ فَرْجَهَا
فَنَفَخْنَا فِيهِ مِن رُّوحِنَا وَصَدَّقَتْ
بِكَلِمَٰتِ رَبِّهَا وَكُتُبِهِۦ وَكَانَتْ مِنَ ٱلْقَٰنِتِينَ

மேலும், இம்ரானின் புதல்வியான மர்யம், தம் கற்பைக் காத்துக் கொண்டார். நாம் நம் ரூஹிலிருந்து மரியமில் ஊதினோம். மேலும், அவர் தம் இறைவனின் வார்த்தைகளையும், அவனுடைய கட்டளைகளையும் வேதங்களையும் மெய்ப்பித்தார்; இன்னும் அவர் வழிபட்டவர்களில் ஒருவராகவும் இருந்தார். (66:12) (ஒ.பா 21:91)

இமாம் ராசீ கூறுகிறார் ''எமது ஆவியை அங்கே ஊதினோம்'' என்றால் ''ஈஸாவிற்குள்'' என்று அர்த்தம். ஏனென்றால் ஈஸா அவளுடைய கற்பத்திலிருந்தார். யார் சுவாசத்தை ஊதினார்கள் என்பதில் கருத்து வேறுபாடு நிலவுகிறது. ஒரு சிலர் சுவாசம் அல்லாஹ்விடமிருந்து வந்ததென்று கூறுகிறார்கள். ''நாம் நமது ஆவியை அங்கே ஊதினோம்'' (லீ அஹபீலகி) என்று அல்லாஹ் கூறுகிறார். இதனால் சுவாசித்தவர் அல்லாஹ் ஒருவரே என்பது தெரிகிறது, மற்றவர்கள் சுவாசத்தை ஊதியது காபிரியேல் என்று சொல்கிறார்கள். ஏனென்றால் காபிரியேலைக் குறிக்கும் ஒரு வசனத்திலே'' ''உனக்கு நான் அருள்கிறேன் '' என்று கூறப்படுகிறது.

சுவாசத்தை ஊதிய தின் நடைமுறையைக் குறித்து கருத்துவேறுபாடு நிலவுகிறது. (1) காபிரியேல் அவளது மார்பகத்திலே ஊதினான் அது அவளுடைய கர்ப்பத்தை சென்றடைந்தது என்று வஹாப் சொல்கிறார்.

2. அவளுடைய வஸ்திரத்தின் ஓரத்தில் சுவாசித்தான் அவள் கர்பவதியானாள் என்று மற்றொரு கூற்று உண்டு.

3. அல் சாதி கூறுகிறதாவது ''அவளுடைய ஆடையின் கையைப் பிடித்து அவள் பக்கத்திலே சுவாசித்தான், அது அவள் மார்பகத்தை அடைந்து கர்ப்பவதியானாள். பின்பு சகரியாவின் மனைவியும் மேரியின் சகோதரியுமானவள் அவளுக்குப் பணிவிடை செய்வதற்கு அவளிடம் வந்தாள். அப்பொழுது ''என்னுடைய கர்ப்பத்திலிருக்கும் குழந்தை யாகப்பட்டது உன் கர்பத்திலிருப்பதை வணங்குகிறது'' என்று சகரியாவின் மனைவி கூறினாள்.

(அல்லாஹ்வின் வார்த்தையில் நம்பிக்கையுள்ள வசனம்)

4. அவள் வாய்வழியாக ஊதப்பட்ட சுவாசமானது அவள் கர்ப்பத்தை சென்றடைந்த மாத்திரத்தில் கர்ப்பவதி யானாள்.

''காபிரியேல் தன் விரல்களால் அவளது உள் வஸ்திரத் தைத் திறந்து (ஆடைகிழிப்புக்கு ஃபர்ஜ் என்று கூறப்படுவ துண்டு) உள்ளே ஊதினார்'' என்று இபின் அப்பாஸ் சொன்னார்.

அவளுடைய சரீரம் (அஹ்ஸனத்) கற்புடையதாய் இருந்தது என்ற வாக்கியம் அவள் தன்னுடைய கற்பின்

கன்னித்தன்மையைப் (முஹ்ஸினத்) பேணிக் காத்து வந்தாள் என்று பொருள் விளங்குகின்றது. ''அங்கே எமது ஆவியை ஊதினோம்'' என்பது அவளுடைய ஆடையின் திறப்பு வாயிலாக ஊதப்பட்டது என்பதே விளக்கம். (ஸதகத்து பிகலிமாத்திரப்பிஹா) ''நாம் (அதாவது அல்லாஹ்) அங்கே தோன்றியதை (மேரியின் கர்ப்பத்திலே) சிருஷ்டித்தார்'' என்று மேலும் கூறப்படுகிறது.

''ஆண்டவருடைய வார்த்தைகளில் அவள் நம்பிக்கை வைத்தாள்'' எனப்படும் வார்த்தைகளுக்கு விளக்கம் கூறும் போது முக்ஃஃகாதில் கூறுவது யாதென்றால் ''ஈஸாவுக்குள்'' என்று பொருள்படுகிறது என்கிறார். அல் ஹசன் கூற்று யாதெனில் குர்ஆன் வாசிக்கும்போது ''வார்த்தைகள்'' என்பதற்கு பதிலாக ''அவளுடைய ஆண்டவரின் வார்த்தை'' என்றும் ஈஸா (கலிமத்துல்லாஹ்) ''அல்லாஹ்வின் வார்த்தையானவர்'' என்றும் குர்ஆனிலே அநேக இடங்களில் அழைக்கப்பட்டிருக்கிறது.

## 2. அவருடைய அற்புதப் பிறப்பு

கிறிஸ்துவின் பிறப்பை அறிவிப்பதற்கு இறைத்தூதன் வந்தபொழுது கன்னிமரியாள் தூதன் இருவருக்கும் மத்தியிலே நிகழ்ந்த உரையாடலை குர்ஆன் குறிப்பிடுகிறது.

قَالَتْ إِنِّىٓ أَعُوذُ بِٱلرَّحْمَٰنِ مِنكَ

إِن كُنتَ تَقِيًّا ١٨ قَالَ إِنَّمَآ أَنَا۠ رَسُولُ

رَبِّكِ لِأَهَبَ لَكِ غُلَٰمًا زَكِيًّا ١٩ قَالَتْ أَنَّىٰ يَكُونُ لِي
غُلَٰمٌ وَلَمْ يَمْسَسْنِي بَشَرٌ وَلَمْ أَكُ بَغِيًّا ٢٠

''அதறகவர் நான் உம்முடைய ரப்பின் தூதன்; பரிசுத்த மான புதல்வர்'' உமக்கு அளிக்கப்படுவார் எனும் நற்செய் தியை தெரிவிக்க வந்துள்ளேன் என்று கூறினார். அதற்கு அவர் எந்த ஆடவனும் என்னைத் தீண்டாமலும், நான் நடத்தை பிசகியவளாக இல்லாதிருக்கும் நிலையில் எனக்கு எவ்வாறு புதல்வன் உண்டாக முடியும்'' என்று கூறினார். அவ்வாறேயாகும்; இது எனக்கு மிகவும் சுலபமானதே; (19: 18-20)

இயேசுவின் அற்புதப் பிறப்பைக் குறிப்பிடுகையில் ''அந்தத் தனித்தன்மை கிறிஸ்துவை மற்றெல்லா மனிதர்க ளிலும், தூதுவர்களிலும் வேறுபடுத்திக் காட்டுகிறது. ஏனென்றால் அவர் மனித உடல் உறவோ கலவியோ இல்லாது பிறந்தவராவார்''.

இக்காரியத்தை அல்ஃபக்கிர் அல் ராசி குறிப்பிட்டுச் சொல்லும்பொழுது (அ) (லீ அஹபிலகி ஹுலாமன் ஸகிய்ய) குற்றமற்ற ஆண்பிள்ளையை உன்னிடத்தில் அனுக் கிரகம் செய்கிறேன்'' என்று சொன்ன வார்த்தைகள் சம்மந்தப் பட்ட வரையில் அவை குறிப்பிடுவதாவது"ஸகிய்ய"''குற்ற மற்ற என்பது மூன்று காரியங்களைக் குறிக்கிறது. முதலாவது அவர் பாவம் இல்லாதவர். இரண்டாவது அவர் நேர்மையில் வளர்ந்தார், (பாவமற்றவர் பரிசுத்தராகும். வளரும் பயிரிலே பரிசுத்தம் உண்டு.) மூன்றாவது அவர் தூயவராகவும் கண்ட னத்திற்கு அப்பாற்பட்டவராகவும் இருந்தார்.

(ஆ)''நாம் அவரை மனிதகுலத்திற்கு ஒரு வெளிப்பா டாக அமைக்கிறோம்'' என்பது மனித குலத்திற்கு அவரு டைய பிறப்பை ஒரு அடையாளமாக்குகிறோம் என்பதே பொருள். எம்மிடமிருந்து ஒரு காருண்யம்'' என்பது இந்த அடையாளங்களின் வெளிப்பாடுகளால் மானிட வர்க்கம் ஆசீர்வதிக்கப்படும். அவரது நேர்மையின் வாகை சூடும் தோற்றங்களாக அவை இருக்கும். அவரது வார்த்தைகளை மேலும் அதிகமாய் விரும்பி ஏற்றுக் கொள்ளக் கூடியவைக ளாய் அமைந்திருக்கும்.

''குற்றமற்ற ஆண்பிள்ளை'' என்னும் வார்த்தைகளை இமாம் அபு ஜாஃபர் அல் தபாரி தெளிவுபடுத்தும் வேளையில் அபு அமர் கூறியதின் அடிப்படையிலே'' குற்றமற்ற ஆண்பிள்ளை பாவமில்லாது பரிசுத்தமாயிருக்கி றது என்றார். ஆகவே ''பரிசுத்தமும் நேர்மையும், பிரபல மும் கீர்ததியுமிக்க ஒரு இளைஞன் என்று அராபியர்கள் சொல்லுகிறார்கள்.

## 3. இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தார்.

وَجَعَلَنِي مُبَارَكًا أَيْنَ مَا كُنتُ وَأَوْصَانِي بِالصَّلَاةِ
وَالزَّكَاةِ مَا دُمْتُ حَيًّا ٣١

கிறிஸ்து கூறிய வார்த்தைகளை குர் ஆனில் மர்யம் சூராவில் பின்வருமாறு வாசிக்கிறோம். ''இன்னும், நான் எங்கிருந்தாலும், அவன் என்னை முபாரக்கானவனாகவும், நற்பாக்கியமுடையவனாகவும் ஆக்கியிருக்கின்றான்'' நான்

உயிருடன் இருக்கும் காலமெல்லாம் தொழுகையையும், ஜக்காத்தையும் எனக்கு கட்டளையிட்டு இருக்கின்றான். (19:31)

தபாரியிலே யூனுஸ் பின் அப்துல் அலாவிலும் சுஃபி யான் குறிப்பிட்டு விளக்கம் கூறும்போது ''என்னைச் சிருஷ்டித்தவர் ஆசீர்வாதித்திருக்கிறார்'' என்பது நன்மை யைப் போதிக்கும் ஆசிரியனாக அவர் என்னை சிருஷ்டித் திருக்கிறார்.

முஹம்மது பின் யாசித் பின் ஹுனையஸ் அல்ஸுமிலி ருந்து சுலைமான் பின் அப்துல் ஜப்பார் குறிப்பிட்டுக் கூறும் வேளையில் ''பாணி மக்ஜுமின் அடிமையாகிய இபின் அல் வர்து கூறக் கேட்டேன். ஒரு பண்டிதன் தன்னிலும் அதிகம் கற்றுணர்ந்த பண்டிதனோடு தர்க்கம் செய்ய நேர்ந்தபோது, அவரை வரவேற்ற பின்பு ''என்னு டைய அறிவாற்றலிலிருந்து வெளிப்பட வேண்டியது யாது?'' என்று கேட்டார். ''தடை செய்யப்பட்டவைகளிலி ருந்து விலகி நின்று நன்மையைச் செய்வதுமே தன்னுடைய தீர்க்க தரிசிகளின் வாயிலாக மனித குலத்திற்கு அல்லாஹ் அனுப்பி வைத்த வேதம்.''

அவர் என்னை சிருஷ்டித்தவர் (அதாவது ஈஸா) நான் எங்கே இருந்தாலும் என்னை ஆசீர்வதிக்கிறார்'' என்ற அல்லாஹ்வின் சொற்களை அறிஞர்கள் ஏற்றுக் கொண்டி ருக்கிறார்கள்.

## 4. பரிசுத்த ஆவியிலிருந்து அவர் தாங்கப்பட்டார்.

تِلْكَ الرُّسُلُ فَضَّلْنَا بَعْضَهُمْ عَلَىٰ بَعْضٍ مِّنْهُم مَّن كَلَّمَ اللَّهُ
وَرَفَعَ بَعْضَهُمْ دَرَجَٰتٍ وَءَاتَيْنَا عِيسَى ابْنَ مَرْيَمَ الْبَيِّنَٰتِ
وَأَيَّدْنَٰهُ بِرُوحِ الْقُدُسِ وَلَوْ شَآءَ اللَّهُ مَا اقْتَتَلَ الَّذِينَ
مِنۢ بَعْدِهِم مِّنۢ بَعْدِ مَا جَآءَتْهُمُ الْبَيِّنَٰتُ وَلَٰكِنِ اخْتَلَفُوا۟
فَمِنْهُم مَّنْ ءَامَنَ وَمِنْهُم مَّن كَفَرَ وَلَوْ شَآءَ اللَّهُ مَا اقْتَتَلُوا۟
وَلَٰكِنَّ اللَّهَ يَفْعَلُ مَا يُرِيدُ ٢٥٣

அத்தூதர்கள் - அவர்களில் சிலரைச் சிலரை விட மேன்மையாக்கி இருக்கின்றோம்; அவர்களில் சிலருடன் அல்லாஹ் பேசியிருக்கின்றான்; அவர்களில் சிலரை உயர்த்தியும் இருக்கின்றான்; தவிர மர்யமுடைய மகன் ஈஸாவுக்கு நாம் தெளிவான அத்தாட்சிகளைக் கொடுத்தோம்; இன்னும், ரூஹுல் குத்ஸு எனும் பரிசுத்த ஆவியைக் கொண்டு அவரை பெலப்படுத்தினோம். அல்லாஹ் நாடியிருந்தால், தங்களிடம் தெளிவான அத்தாட்சிகள் வந்த பின்னரும், பின் வந்த மக்கள் தங்களுக்குள் சண்டை செய்து கொண்டிருக்க மாட்டார்கள்; ஆனால் அவர்கள் வேறுபாடுகள் கொண்டனர்; அவர்களில் ஈமான் கொண்டோரும் உள்ளனர். அல்லாஹ் நாடியிருந்தால் அவர்கள் இவ்வாறு சண்டை செய்து கொண்டிருக்கமாட்டார்கள்; ஆனால் அல்லாஹ் தான் நாடியவற்றைச் செய்கின்றான் (2:253)

''பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஈஸா மரித்தோரை உயிர்த்தெழச் செய்கிறார்'' என்று இபின் அப்பாஸ் சொல்கிறார். அவருக்கு ஆதரவு அளிப்பதாக இருந்த பரிசுத்த ஆவியானவர், அல்லாஹ் அவருக்குள் சுவாசித்து விட்ட சுத்த ஆவியாகவே இருக்க வேண்டும். இதனால் இயல்பான விதத்தில் மனிதனையும், ஸ்திரீயையும் சிருஷ்டித்த நடைமுறையிலிருந்து அவரை சிருஷ்டித்த சிறப்பை அறிகிறோம்.

''மரியாளின் குமாரன், மேசியா அல்லாஹ்வின் தூதுவராவார். அவரிடமிருந்து வெளிப்பட்ட ஆவியே மரியாளிடம் அவருடைய வார்த்தையைக் கொண்டு சென்றது. ஆகவே அல்லாஹ்வையும் அவருடைய தூதர்களையும் விசுவாசிப்பீர்களாக'' என்று சூரத் அன்நீசா பெண்கள்- 170ல் படிக்கின்றோம்.

ஈசாவுக்கு, அவருடைய ஆள் தத்துவத்திற்குள் அல்லாஹ் ஒரு ஆவியைக் கொடுத்தார். இந்த ஆவி அவருடைய உருவ அமைப்புக்கு ஆதரவளித்தது. ஆனால் அவருக்கு ஆதரவளித்த பரிசுத்த ஆவியைக் குறித்துள்ள விளக்கத்தில் முஸ்லீம் பண்டிதர்கள் மாறுபாடு கொண்டிருக்கிறார்கள்.

கிறிஸ்துவுக்குள் சுவாசிக்கப்பட்ட ஆவியானவரே அவராகும். அல்லாஹ் அவரோடு தம்மை உறவுபடுத்திக் கொண்டார். அவரை (கிறிஸ்துவை) கனப்படுத்தி, அவரை பிரித்து வைத்தார். ''பரிசுத்தம்'' என்பது இறைவனாகும். ''அவருக்குள் எமது ஆவியை சுவாசித்தோம்'' என்பது இதைக் குறிப்பிடுவதாக இருக்கிறது என்று இபின் அன்னஸ் கூறினார்.

''பரிசுத்த ஆவியானவர் காபிரியேலாகும். அவருக்கு ஒரு சிநேகிதனாகவும் துணைவனாகவு மிருந்து, அவர் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் காலம் வரையிலும், அவர் சென்ற இடம் எல்லாம் ஒன்றிணைந்துபோய் உதவிபுரிந்ததில் ஈஸாவுக்கு அவரளித்த ஆதரவில் உள்ளடங்கியிருந்தது'' என்று அல்சத்தி யும் காஆபும் கூறினார்.

''பரிசுத்தத்தின் ஆவி என்பதே அல்லாஹ்வின் மிக உன்னதமான நாமம். அதினால் ஈஸா மரித்தோரை உயிர்த்தெழச் செய்தார்'' என்று இபின் சுபைர் சொன்னார்.

''ஈசாவின் சரீரத்திலிருந்து இயற்கையாய் அமைந்திருந்த அசுத்தங்களை சுத்தஞ் செய்ய சித்தங்கொண்டார். ஒருயர்ந்த ஆன்மீக சரீரத்திலே மனித உருவமைந்த ஆவியாய் இருந்தார். அவர் (அல்லாஹ்) அவரது ஆவியை சுத்தப்படுத்தி இயற்கை சுபாவங்களின் ஆளுகையிலிருந்தும் சுற்றுப்புற சூழ்நிலைகளிலிருந்தும் அவர் எந்த ஆவியின் சாயலில் இருந்தாரோ அந்த பரிசுத்த ஆவியால் ஆதரிக்கப்படும் வண்ணம் சுத்தஞ் செய்தார்'' என்று அல் கசானி கூறினார்.

''இறைவனுடைய ஆவியாகிய ஈஸாவைப் போல் கணிதரும் செடிகளே மிக நேர்த்தியானவை'' என்று இபின் அத்தா சொன்னார்.

''அவருக்குள் சுவாசிக்கப்பட்டது ஆவியாக இருப்பதாலும், பரிசுத்தராய் இருப்பது அல்லாஹ் என்பதாலும், அவர் அல்லாஹ்வின் ஆவியாக இருக்கிறார்'' என்று இபின் அப்பாஸ் சொன்னார்.

## 5. அவருடைய மரணத்தின் பின்பு பரமேறியது.

إِذْ قَالَ ٱللَّهُ يَـٰعِيسَىٰٓ إِنِّى مُتَوَفِّيكَ وَرَافِعُكَ
إِلَىَّ وَمُطَهِّرُكَ مِنَ ٱلَّذِينَ كَفَرُوا۟ وَجَاعِلُ ٱلَّذِينَ ٱتَّبَعُوكَ
فَوْقَ ٱلَّذِينَ كَفَرُوٓا۟ إِلَىٰ يَوْمِ ٱلْقِيَـٰمَةِ ۖ ثُمَّ إِلَىَّ مَرْجِعُكُمْ
فَأَحْكُمُ بَيْنَكُمْ فِيمَا كُنتُمْ فِيهِ تَخْتَلِفُونَ ٥٥

''ஈஸாவே! நிச்சயமாக நான் உம்மைக் கைப்பற்றுவேன்; இன்னும் என்னளவில் உம்மை உயர்த்திக் கொள்வேன்; நிராகரித்துக் கொண்டிருப்போருடைய பொய்களிலிருந்து உம்மைத் தூய்மைப்படுத்துவேன்; மேலும் உம்மைப் பின்பற்றுவோரை கியாம நாள்வரை நிராகரிப்போருக்கு மேலாகவும் வைப்பேன்; பின்னர் நீங்கள் அனைவரும் என்னிடமே திரும்பி வருவீர்கள்; நீங்கள் தர்க்கம் செய்து கொண்டிருந்தது பற்றி நான் உங்களிடையே தீர்ப்பளிப் பேன்'' என்று அல்லாஹ் கூறியதை நபியே நினைவு கூர்வீராக! (3:55)

இந்த வசனத்திற்கு அநேக விளக்கங்கள் உண்டென்று அல் பக்கருத்தீன் ராசி கூறுவதிலிருந்து இரண்டை இங்கே எடுத்துச் சொல்வோம்.

(அ) ''உன்னை பரமேறச் செய்வேன்'' என்பதின் பொருள் அவர் மகிமைக்கு உரித்தான இடத்திற்கு அல் லாஹ் அவரை எடுத்துச் சென்று, அப்பரமேறுதலை

ஈஸாவுக்கு கீர்த்தியும் மேன்மையும் உள்ளதாய் செய்தருள் வார் என்பதேயாகும்.

''எனது ஆண்டவரிடம் நான் போகிறேன்'' என்பது இதற்கு சமமான வசனமாகும். (இது வேதாகமத்திலிருந்து) இன்ஜீலில் எடுக்கப்பட்டது)

(ஆ) ''என்னிடம் பரமேறிவரச் செய்வேன்'' என்பதின் விளக்கமாகப் பட்டது : அல்லாஹ் அவரை ஒருவரும் நியாயத் தீர்ப்பு கூறமுடியாத ஓர் இடத்தில் உயர்த்தி வைக்கிறார். ஏனென்றால் மண்ணுலகத்திலே மனிதர் ஒருவர்மேல் ஒருவர் பலவித நியாயத் தீர்ப்பை பரிமாறுகி றார்கள். ஆனால் பரலோகத்திலே அல்லாஹ்வைத் தவிர உண்மையும் சர்வ ஞானமும் நிறைந்த நியாயாதிபதி வேறு எவருமில்லை.

## (6) அவருடைய வாழ்க்கை முறையிலும் அவரது செய்திகளிலும் மாசற்ற தூய நிலை.

செய்திகள் தவறில்லாத் தன்மை வாய்ந்ததாக இருப்பது ஒழுக்கத்திலும் நிச்சயமாக தவறில்லா திருப்பதோடு தொடர்பு இருக்கிறதென்று ஒரு சிலர் கற்பனை செய்கிறார் கள். ஆனால் இக் கருத்தினை குர்ஆன் மாறுபடக் கூறுகிறது. தீர்க்கதரிசிகள் வெளியிட்டுள்ள செய்திகளுக்கு முன்னரும் பின்னரும் அவர்களுடைய வாழ்க்கை குற்றமற் றிருக்கவில்லை யென்று தெளிவுபடுத்தும் அநேக வசனங்க ளில் வாசிக்கின்றோம். ஆனால் குர்ஆனிலே கிறிஸ்துவின் செய்திகள் அமைந்திருந்தது போலவே அவருடைய வாழ்க்கை முறையும் குற்றம் இல்லாதிருந்தது. அவருடைய தாயாருக்கு நற்செய்தியை அறிவித்த தருணத்தில் தேவதூ

தன் இதற்கு சாட்சி கூறினான். ''நான் உன் ஆண்டவரு டைய தூதன். நான் உன்னில் குற்றமில்லாத குழந்தையை அனுக்கிரகஞ் செய்கிறேன்'' என்றான். ''குற்றமில்லாத'' என்பதற்கு விளக்கம் கூறும்போது ''ஈஸா ஆண்டுக்கு ஆண்டு ஞானத்தில் வளர்ந்து வந்தார்'' என்று அல் பய்தாவி கூறுகிறார்.

## 7. அவரது செய்திகளின் ஒப்பில்லாத் தன்மையை அடையாளங்கள் நிரூபித்தன.

பரிசுத்த ஆவியின் உறுதுணையால் அவருடைய செய்தி கள் ஒப்பிட்டுக் கூற இயலாதிருந்ததுபோல் அவைகளை தொடர்ந்து வந்த அடையாளங்களின் தன்மையும் பெருக்க மும் ஒப்பில்லாதவைகளாய், வேறெந்த தூதுவருக்கும் அளிக்கப்படாத விதத்தில் பெருமிதமாய் இருந்தன. ''மரி யாள் குமாரன் ஈஸாவுக்கு நாம் தெளிவான நிரூபணங் களை யளித்தோம்'' என்று சூரத் அல் பக்ரா 253ல் வாசிக்கின்றோம். இந்த நிரூபணங்கள் அற்புதங்களாய் இருந்தன.

''அல்லாஹ் அவர்மேல் ஒரு சிறப்பான செயற்திறனை அனுக்கிரகித்து மற்றெல்லா தூதர்களிலும் விரும்பத்தக்கவ ராக இருப்பதற்கு காரணமாக அவருடைய அற்புதங்களை மேலானதாய் அமைத்தார். எண்ணிக்கையில் அவை மற்றவர்களோடு ஒப்பிடமுடியாதபடி தெளிந்த அடையா ளங்களாகவும், மாபெரும் அதிசயங்களாகவும் இருந்தன'' என்று அல் பய்தாவி கூறுகிறார்.

# 8. அவருடைய சர்வஞானம்

وَلَمَّا ضُرِبَ ابْنُ مَرْيَمَ
مَثَلًا إِذَا قَوْمُكَ مِنْهُ يَصِدُّونَ ٥٧
وَإِنَّهُ لَعِلْمٌ لِّلسَّاعَةِ فَلَا تَمْتَرُنَّ بِهَا وَاتَّبِعُونِ
هَٰذَا صِرَاطٌ مُّسْتَقِيمٌ ٦١

இன்னும் மர்யமுடைய மகன் உதாரணமாகக் கூறப்பட்ட போது, உம்முடைய சமூகத்தார் ஆர்ப்பரித்தார்கள். நிச்சயமாக (அவர்) ஈஸா இறுதிக்காலத்திற்குரிய அத்தாட்சியாவார்; ஆகவே, நிச்சயமாக நீங்கள் இதில் சந்தேகப் படவேண்டாம்; மேலும் என்னையே பின்பற்றுங்கள்; இதுவே (ஸிராத்துல் முஸ்தகீம்) நேரான வழி 43:57-61)

''காலத்திற்கு ஓர் அடையாளம்'' என்பதற்கு விளக்கம் கூறும் பொழுது அல்ஜலாலன் சொல்லுகிறதாவது'' காலத் திற்கு ஓர் அடையாளமாக ஈஸாவைக் கண்டு அந்த காலம் (நியாயத் தீர்ப்பின் காலம்) எந்நாள் சம்பவிக்கும் என்பதை அவர் அறிந்திருந்தார்.

"அல்லாஹ் தன்னுடைய சிருஷ்டிகளிலிருந்து தனிப்பட்டவ ராக இருக்கும் நிலையை மக்கள் பொதுவாக அங்கீகரிப்பதை நாம் நினைவிற்கொள்ளும் போது அவர் ஒருவரே காலத்தை அறிந்திருக்கிறார். குர்ஆனாகப்பட்டது கிறிஸ்துவின் பேரில் தனித்தன்மையோடு வழங்கும் சிறப்பின் உள்ளடக்கத்தை நாம் கிரகித்துக் கொள்கிறோம்'' எனக் கூறப்படுகிறது.

## 9. அல்லாஹ்வின் அருகாமையில் அவரே மத்தியஸ்தர்

சூரத் அல் ஜுமர் 44ம் வசனம் படைகள் என்பதை நாம் கவனத்திற் கொள்ளும்போது, பரிந்துரை செய்யும் செயல்பாட்டின் எல்லையை அல்லாஹ் ஒருவருக்கே குர்ஆன் உரிமையாக்குகிறது. குர்ஆனிலுள்ள மற்றொரு வசனம் பரிந்துரையாடல் செய்வது கிறிஸ்துவுக்கே ஒரு தனி சுதந்திரம் என்று குறிப்பிடுகிறது. தேவதூதன் கூறியதை நினைவிற் கொள்வோம். ''ஓ, மரியாளே! இதோ, அல்லாஹ்விடமிருந்து உனக்கு நற்செய்தி கொடுத்தருள்கின்றார். மரியாளின் குமாரன் மேசியா என்னும் நாமம் கொண்டவர், உலகில் சிறப்புற்றவராய் இருப்பார். இதன் பின்னர் மிக அருகில் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஒருவராக இருப்பார்.'' சூரத் அல் இம்ரான் 44.

''தீர்க்கதரிசன ஊழியத்தாலும் இதன் பின்பு மத்தியஸ்த காரியத்தாலும், உயர்ந்த நிலையாலும், அல்லாஹ்வின் அண்டையில் கொண்டுவரப் பட்டதாலும், அவர் இவ்வுலகில் தனித்தன்மையுற்றார்'' என்று அல் ஜலாலன் இவ்வசனத்திற்கு விளக்கம் தந்துள்ளார்.

''உலகில் சிறப்புற்றிருப்பவர்'' என்பது மகிமை உள்ளவரும் உலகில் அல்லாஹ்வுடன் சமீபத்தில் வாசஞ்செய்பவரும் என்பதாம். ''இதன் பின்பு அருகில் கொண்டுவரப்ப பட்டவர்களின்'' என்றது உயிர்த்தெழும் நாளிலே அல்லாஹ் தன் அண்டையில் எடுத்துக் கொள்பவர்களில் ஒருவராய் அவர் பக்கத்தில் வாசம் செய்வார் என்பது பொருளாகும்,'' என்று இபின் ஹுமைத்தும் சலாமா, இபின் இஷாக்கும் முகம்மது பின் ஜபாரிலு மிருந்து எடுத்துரைக்கின்றார்.

''உலகில் அவர் சிறப்புற்றிருந்தார், ஏனென்றால் அவர் அல்லாஹ்வின் அழைப்புக்கு கீழ்ப்படிந்தார். மரித்தோரை உயிரோடு எழுப்பினார். குஷ்டரோகிகளையும் குருடர்களையும் குணமாக்கினார். இதன் பின்னரும் அவர் சிறப்புள்ளவராக விளங்குவார். ஏனெனில் அல்லாஹ் அவரை தம்முடைய ஜனங்களுக்கு மத்தியஸ்தராக்குவார்'' ஈஸாவைப் பற்றி அல் ராசி கூறியது.

ஆயினும்,''அருகில் கொண்டுவரப்பட்டவர்'' என்பதற்கு பலவித கருத்துகள் இருக்கின்றன.

முதலாவதாக தமது அருகிலிருக்கக் கூடிய சிலாக்கியத்தை அல்லாஹ் தேவதூதர்களுக்கு அளித்தபடியால் அவர்களுடைய நிலைக்கும் கௌரவத்திற்கும் ஏற்றார் போல் ஈஸாவுக்கும் அனுமதிப்பார். இரண்டாவதாக தேவதூதர்களோடு அவர் சம்பந்தப்பட்டிருப்பார் என்பதற்கு ஒரு அறிவிப்பாக இருக்கிறது. மூன்றாவது, இதற்கு அப்பால் சிறப்புள்ள எவருமே அல்லாஹ்வின் அருகில் இருக்கப் போவதில்லை. ஏனென்றால் பரலோகத்திலிருப்பவர்கள் பற்பல ஸ்தானங்கள் நிலைகளிலிருப்பார்கள்.

## 10. குர்ஆனிலே கிறிஸ்துவின் அற்புதங்கள்

### 1. சிருஷ்டிப்பதற்கு அதிகாரம்

குர்ஆனிலே பின்வரும் வசனம் இருக்கின்றது.

إِذْ قَالَ ٱللَّهُ يَٰعِيسَى ٱبْنَ مَرْيَمَ
ٱذْكُرْ نِعْمَتِى عَلَيْكَ وَعَلَىٰ وَٰلِدَتِكَ إِذْ أَيَّدتُّكَ بِرُوحِ
ٱلْقُدُسِ تُكَلِّمُ ٱلنَّاسَ فِى ٱلْمَهْدِ وَكَهْلًا ۖ وَإِذْ عَلَّمْتُكَ
ٱلْكِتَٰبَ وَٱلْحِكْمَةَ وَٱلتَّوْرَىٰةَ وَٱلْإِنجِيلَ ۖ وَإِذْ تَخْلُقُ
مِنَ ٱلطِّينِ كَهَيْـَٔةِ ٱلطَّيْرِ بِإِذْنِى فَتَنفُخُ فِيهَا فَتَكُونُ طَيْرًۢا
بِإِذْنِى ۖ وَتُبْرِئُ ٱلْأَكْمَهَ وَٱلْأَبْرَصَ بِإِذْنِى ۖ وَإِذْ تُخْرِجُ
ٱلْمَوْتَىٰ بِإِذْنِى ۖ وَإِذْ كَفَفْتُ بَنِىٓ إِسْرَٰٓءِيلَ عَنكَ إِذْ
جِئْتَهُم بِٱلْبَيِّنَٰتِ فَقَالَ ٱلَّذِينَ كَفَرُوا۟ مِنْهُمْ إِنْ هَٰذَآ إِلَّا سِحْرٌ
مُّبِينٌ ﴿١١٠﴾

''மர்யமுடைய மகன் ஈஸாவே! நான் உம்மீதும், உம் தாயார் மீதும் அருளிய என் அருட் கொடையை நினைவு கூறும்; பரிசுத்த ஆவியை கொண்டு உம்மை பெலப்படுத்தி உமக்கு வேதத்தையும், ஞானத்தையும், தவ்றாத்தையும், இன்ஜீலையும் கற்றுக் கொடுத்ததையும், இன்னும் நீர் மண்ணினால் என் உத்தரவைக் கொண்டு பறவை வடிவத்தைப் போலுண்டாக்கி அதில் நீர் ஊதிய போது அது பறவையாகியதையும், இன்னும் என் உத்தரவைக் கொண்டு பிறவிக் குருடனையும், வெண்குஷ்டக்காரனையும் சுகப்படுத்தியதையும் இறந்தோரை உயிர்ப்பித்துக் கல்லறைகளிலிருந்து வெளிப்படுத்தியதையும் நினைத்துப்

பாரும்'' அன்றியும் இஸ்ராயீலின் சந்ததியினரிடம் நீர் தெளிவான அத்தாட்சிகளைக் கொண்டு வந்தபோது, அவர்களில் நிராகரித்தவர்கள், ''இது தெளிவான சூனியத்தைத் தவிர வேறில்லை'' என்று கூறிய வேளை, அவர்கள் உமக்குத் தீங்கு செய்யாதவாறு நான் தடுத்து விட்டதையும் நினைத்துப் பாரும். (5:110)

''அல்லாஹ் ஈஸாவின் பேரில் ஒரு ஆவியை அனுக்கிரகித்து, அவர் (ஈஸா) களிமண்ணாற் செய்ததை உயிர்பெறுமாறு சுவாசத்தை ஊதும்படியான வல்லமையை கூட்டிக் கொடுத்தார். ஈசாவைத் தவிர ஜீவனை உண்டாக்கும் வல்லமையை வேறு எவருக்கும் அல்லாஹ் கொடுக்கவில்லை'' என்று இபின் அரபி விளக்கம் தந்துள்ளார்.

## (?) பிறந்த பொழுதில் அவர் பேசினார்.

மரியாள் தன் மகனை பிரசவித்தபோது, குழ்நதையை விவாகமற்றவளாக இருந்த நேரத்தில் பெற்றெடுத்தாளென்ற கருத்தின் பேரில் மக்கள் குற்றங் கூறினார்கள். அவளோ குழந்தையை சுட்டிக் காட்டினாள்.

يَٰٓأُخۡتَ هَٰرُونَ مَا كَانَ أَبُوكِ ٱمۡرَأَ سَوۡءٖ وَمَا كَانَتۡ
أُمُّكِ بَغِيّٗا ﴿٢٨﴾ فَأَشَارَتۡ إِلَيۡهِۖ قَالُواْ كَيۡفَ نُكَلِّمُ مَن كَانَ فِي
ٱلۡمَهۡدِ صَبِيّٗا ﴿٢٩﴾

'ஹாரூனின் சகோதரியே! உம் தந்தை கெட்ட மனிதராக

இருக்கவில்லை; உம் தாயாரும் நடத்தை பிசகியவராக இருக்கவில்லை'' என்றும் கூறினார்கள். அச்சமயம் மர்யம் தன் குழந்தையை சுட்டிக் காட்டினார்; அச்சமயம் குழந்தை ஈஸா ''நிச்சயமாக நான் அல்லாஹ்வுடைய அடியானாக இருக்கின்றேன்; அவன் எனக்கு வேதத்தைக் கொடுத்திருக் கின்றான்; இன்னும் என்னை நபியாக ஆக்கியிருக்கிறான். இன்னும், நான் எங்கிருந்தாலும் அவன் என்னை முபாரக் கானவனாக - நற்பாக்கியமுடையவனாக ஆக்கியிருக்கி றான். (19:28:30)

மரியாளின் ஜனங்கள் அவளை நிந்தனை செய்வதில் வெகுதூரம் சென்ற பொழுது அவள் மௌனமாக இருந்து ''அவன் பதில் சொல்லுவான்'' என்ற தோரணையில் தன் குழந்தையை சுட்டிக் காட்டினாள் என்று நம்பிக்கைக்கு பாத்திரமான கல்விமான்களால் கூறப்பட்டிருக்கிறது. சாத்தி சொல்லுவதுபோல் ''அவள் அவரை சுட்டிக் காட்டிய பொழுது அவர்கள் மிகுந்த கோபமடைந்து'' அவளுடைய சோரத் தனத்தைப் பார்க்கிலும் அவள் நம்மை பரிகாசம் செய்வது கேவலம்'' என்றார்கள்.

ஈஸா தாயின் மடியில் பால் அருந்திக்கொண்டிருக்கும் போது மரியாளுக்கு எதிரான அவர்களுடைய குற்றச்சாட் டினை கேட்ட பொழுதில் பால் உட்கொள்வதை நிறுத்தி விட்டு, ஜனங்கள் பக்கம் முகத்தை திருப்பி தன் இடது கையில் சாய்ந்து கொண்டு விரலை சுட்டிக் காண்பித்து அவர்களிடம் பேசியது என்று மற்றொரு கதை எடுத்துரைக் கிறது.

அல் ராசியால் சொல்லப்பட்ட மேலும் ஒரு விளக்கத் திலே ''அவளைக் குறித்து யூதர்கள் தங்கள் மத்தியிலே

தர்க்கம் செய்துகொண்டிருந்த வேளையில் அவளிடம் சகரியா வந்தபோது ஈஸாவைப் பார்த்து ''அவ்விதமாக செய்யும்படி உமக்கு கட்டளையிடப் பட்டிருக்குமானால் உமக்காகப் பேசும்'' என்று கூறியதும் ''நான் அல்லாஹ் வின் ஊழியக்காரன். அவர் எனக்கு ஞானத்தை அருளி என்னை ஒரு தீர்க்கதரிசியாக்கியுள்ளார்'' என்று ஈஸா தெரிவித்தார்.

### 3. அவர் மரித்தோரை எழுப்பி குஷ்ட ரோகிகள் குருடர்களை சுகப்படுத்தினார்.

''அல்லாஹ்வின் அனுமதியால், குருடனாகப் பிறந்தவ னையும், குஷ்டரோகியையும் குணப்படுத்தி மரித்தோரை உயிர்ப்பிக்கிறேன்'' என்று கிறிஸ்துவின் வாய்மொழியாக குர்ஆன் குறிப்பிடுகிறது. (அல் இம்ரான் - 49).

''குருடர்கள்'' என்று இவ்வசனத்திலுள்ள வார்த்தை பிறவியில் குருடராயிருந்த நிலையென பொருள்படுகிற தென்பது அறிந்துகொள்ளப் பட்ட காரியமாகும். குஷ்டம் பயங்கரமான நோய் என்பதும் உண்மையே. இவ்விரண் டையும் குணப்படுத்துவது மனித சக்திக்கு அப்பாற்பட்ட செயலாகும்.

குருடு குஷ்டத்திற்கு பரிகாரம் இல்லாதிருப்பதால் அவர் ஒரு தீர்க்கதரிசி என்பதை நிரூபிக்கும் மார்க்கமாக இவ்வச னத்தை யூதர்களுக்கு அடுத்தடுத்து கூறுமாறு அல்லாஹ் ஈஸாவினிடம் சொன்னார் என்பதாக இபின் இஷாக், ஹஃபீஸ் இபின் உமர், இக்ரீமா இவைகளிலிருந்து அல் முஸண்ணா எடுத்துக் கூறுகிறார்.

''நான் மரித்தோரை எழுப்புகிறேன்'' எனப்படும் வசனத்

தைக் குறித்த நிகழ்ச்சியை வஹாப் இபின் முனாபிஹ் சம்பந்தங்காட்டி கூறும்பொழுது, ஈஸா சில சிறுவர்களோடு விளையாடிக் கொண்டிருந்த வேளையில் ஒரு சிறுவன் மற்றொருவன் மேல் பாய்ந்து காலால் உதைத்துக் கொன்று இரத்தம் வழிந்தோட ஈஸாவின் கரங்களில் வீசினான். ஜனங்களுக்கு இது அறிவிக்கப்பட்டு ஈஸா குற்றம் சுமத்தப்பட்டு, அவரைப் பிடித்து நீதிபதியிடம் கொண்டு சென்று ''இந்தச் சிறுவன் மற்றொரு சிறுவனை கொன்று விட்டான்'' என்றார்கள். நீதிபதி கேட்ட வேளையில் ''அவனைக் கொன்றது யார் என்று நான் அறியேன். மேலும் நான் அவனுடைய நண்பனும் அல்ல'' என்றும் ஈஸா பதிலளித்தார். அவர்கள் அவரை அடிப்பதற்கு வந்தபோது ''அந்தச் சிறுவனை என்னிடம் கொண்டு வாருங்கள்'' என்று ஈஸா சொன்னார். அதற்கு அவர்கள் ஏன் என்று கேட்டார்கள். ''அவனைக் கொன்றது யார் என்று கேட்பேன்'' என்று பதில் கூறினார். ''அவன் மரித்து இருக்கும்போது உன்னோடு எப்படிப் பேச முடியும்?'' என்று கேட்டார்கள். பின்பு மரித்தவனை அவரிடம் கொண்டுவந்தார்கள். ஈஸா அவனுக்காக ஜெபிக்க ஆரம் பித்த வேளையில் அல்லாஹ் அவனுக்கு மீண்டும் ஜீவ னைக் கொடுத்தருளினார்.

வஹாபில் காணப்படும் மற்றொரு வரலாறு பின்வரு மாறு கூறுகிறது.

பெருந் திரளான வியாதிஸ்தர்கள் அநேகமாக ஐம்பதாயி ரம் பேர் ஒரு சமயத்தில் அவரைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர் அண்டையில் போக வலிமையுள்ளவர்கள் சென்ற டைந்தார்கள். இயலாதவர்கள் மத்தியில் தாமே சென்று ஜெபத்தால் அவர்களை குணப்படுத்தினார்.

ஹகல்பியிலிருந்து மற்றொன்று கூறுகிறதாவது, ''நித்திய ஜீவனுள்ளவராக இருப்பவரே! என்றென்றும் உள்ளவரே'' என்று குரல் கொடுத்து மரித்தோரை எழுப்பினார். அவருடைய சிநேகிதனாகிய லாசருவை எழுப்பினார். நோவாவின் குமாரன் சேமை அழைத்தார். அவன் கல்லறையிலிருந்து உயிரோடு வந்தான். மரித்துப்போன ஒரு மூதாட்டியின் மகனை கடந்துபோகும்போது அவன் நிமித்தம் அல்லாஹ்விடம் வேண்டுதல் செய்தார். இறந்துபோனவன் பாடையை விட்டிறங்கி தன் குடும்பத்தாரோடு சேர்ந்து வழக்கமான வாழ்க்கையை தொடர்ந்தான்''.

**4. காணப்படாததும் மறைபொருளுமாய் இருந்தவைகளை அறிந்திருந்தார்.**

''நீங்கள் உட்கொள்வதையும், உங்கள் இருப்பிடங்களில் சேர்த்து வைப்பவைகளையும் இன்னதென்று நான் அறிவிப்பேன்'' என்று கிறிஸ்து கூறுவதாக குர்ஆன் குறிப்பிடுகிறது. (சூரத் அல் இம்ரான் 49)

இதைக் குறித்து பண்டிதர்கள் இரண்டு காரணங்களை காண்கிறார்கள். முதலாவது, ஆரம்பம் முதலாக மறைக்கப்பட்டிருப்பவைகளை கண்டறியக் கூடியவராக இருந்தார். குழந்தைகளோடு விளையாடிக் கொண்டிருக்கும்போது அவர்களுடைய தாய் தந்தையர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொன்னார். உன் தாயார் உனக்கு ஒரு பொருளை மறைத்து வைத்திருக்கிறாள் என்று ஒரு சிறுவனிடம் சொன்னார். அச்சிறுவன் வீடு சென்று அதைப் பெற்றுக் கொள்ளும் வரையிலும் அழுதான். பின்பு ஜனங்கள் பிள்ளைகளிடம் ''இந்த மந்திரவாதியோடு விளையாடவேண்டாம்'' என்று கூறி



ஒரு வீட்டுக்குள் அவர்களை ஒன்று சேர்த்து வைத்தார்கள். ஈஸா அவர்களை பார்க்க வந்தபொழுது, ''அவர்கள் வீட்டில் இல்லை'' என்றார்கள். ஆகவே, ''வீட்டுக்குள் யார்தான் இருக்கிறார்கள்?'' என்றவர் கேட்டார். ''பன்றிகள்'' என்று அவர்கள் சொன்னார்கள். ''அவர்கள் பன்றிகளானபடியால் அவ்விதமாகவே இருப்பார்கள்'' என்று ஈஸா கூறினார். இதை அஸ்ஸுதி எடுத்துரைக்கிறது.

இரண்டாவது, மறைபொருளாக இருக்கக்கூடிய காரியங்களை எடுத்துரைப்பது அற்புதச் செயலாகும். வருங்காலத்தைப் பற்றியும் மறைந்திருப்பவைக் குறித்தும் சோதிடர்கள் கேள்வியின் வாயிலாக மாத்திரமே சொல்லமுடியும். அடிக்கடி தவறிவிடுவதாக அவர்களே அறிக்கை செய்கிறார்கள். அறியப்படாதவைகளை எடுத்துச் சொல்லுவது முன்னதாகவே அதை அறிந்து அல்லது வேறு சாதனங்கள் துணை இல்லாது கூறும் ஞானம் ஆன்மீகத்தின் வாயிலாகத் தான் முடியும்.

## 5. பரலோகத்திலிருந்து உணவுகள் நிறைந்த (மேசை) விரிப்பை வரவழைத்தார்

''மரியாளின் குமாரனாகிய ஈசாவே உமது ஆண்டவர் பரலோகத்திலிருந்து உணவுகள் நிறைந்த விரிப்பை அனுப்பிவைக்கக் கூடியவரோ?'' என்று சீடர்கள் கேட்டபொழுது ''நீங்கள் உண்மையுள்ள விசுவாசிகளென்றால் அல்லாஹ்வை கனப்படுத்த வேண்டும்'' என்றார். ''எங்கள் உள்ளங்கள் திருப்தியடையவும், நீர் எங்களுக்கு உண்மையை உரைத்தீரென்று அறிந்துகொள்ளவும், அதற்கு சாட்சியாக இருப்பதற்கும் அதை புசிக்க விரும்புகிறோம்'' என்று சொன்னார்கள்.

إِذْ قَالَ ٱلْحَوَارِيُّونَ يَٰعِيسَى ٱبْنَ مَرْيَمَ
هَلْ يَسْتَطِيعُ رَبُّكَ أَن يُنَزِّلَ عَلَيْنَا مَآئِدَةً مِّنَ ٱلسَّمَآءِ ۖ
قَالَ ٱتَّقُوا۟ ٱللَّهَ إِن كُنتُم مُّؤْمِنِينَ ١١٢
قَالُوا۟ نُرِيدُ أَن نَّأْكُلَ مِنْهَا وَتَطْمَئِنَّ قُلُوبُنَا
وَنَعْلَمَ أَن قَدْ صَدَقْتَنَا وَنَكُونَ عَلَيْهَا مِنَ ٱلشَّٰهِدِينَ ١١٣
قَالَ عِيسَى ٱبْنُ مَرْيَمَ ٱللَّهُمَّ رَبَّنَآ أَنزِلْ عَلَيْنَا مَآئِدَةً مِّنَ ٱلسَّمَآءِ
تَكُونُ لَنَا عِيدًا لِّأَوَّلِنَا وَءَاخِرِنَا وَءَايَةً مِّنكَ ۖ وَٱرْزُقْنَا وَأَنتَ
خَيْرُ ٱلرَّٰزِقِينَ ١١٤

''மரியமுடைய மகன் ஈஸாவே! உங்கள் இறைவன் வானத்திலிருந்து எங்களுக்காக உணவு மரவையை இறக்கி வைக்க முடியுமா? என்று சீடர்கள் கேட்டபோது அவர் நீங்கள் மூமின்களாக இருந்தால் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள் என்று கூறினார். அதற்கவர்கள், ''நாங்கள் அதிலிருந்து புசித்து எங்கள் இதயங்களை அமைதியடையச் செய்யவும், நீங்கள் எங்களுக்கு உண்மையையே கூறினீர்கள் என்பதை அறிந்து கொள்ளவும், இன்னும் நாங்கள் அதைப் பற்றி சாட்சி கூறக் கூடியவர்களாகவும்

இருக்க விரும்புகின்றோம்'' என்று கூறினார்கள். மர்யமுடைய மகன் ஈஸா, (அல்லாஹ்ஹூம்ம) இறைவனே! வானத் திலிருந்து எங்கள் மீது ஒரு உணவு மரவையை இறக்குவாயாக; அது எங்களுக்கு, பின் வருபவர்களுக்கு ஓர் அத்தாட்சியாகவும் இருக்கும். இன்னும் எங்களுக்கு உணவுப் பொருட்களை அளிப்பாயாக. நீயே உணவளிப்பவர்களில் மேலானவனாக இருக்கிறாய்'' என்று பிராத்தித்துக் கூறினார்.(5:112-114)

விரிப்பு வானத்திலிருந்து கீழிறங்கி வந்த விளக்கத்தின் மீது மதத் தலைவர்கள் (இமாம்கள்) கருத்து இசைபாடில்லை. அது எப்படி இருந்தது அதன்மேல் என்ன இருந்தது என்பதையும் அவர்கள் ஏற்கவில்லை.

ஜாபரிலிருந்தும், யாசீர் இபின் அம்மாரிலிருந்தும், முகம்மதிலிருந்தும் கடாடா தெரிவிப்பதாவது ''ரொட்டியும் இறைச்சியும் நிறைந்ததாக அந்த விரிப்பு (மேஜை) கீழே அனுப்பி வைக்கப்பட்டது. உட்கொள்ளக் கூடியதும் முடி வில்லாததுமான உணவை சீடர்கள் ஈஸாவிடம் கேட்டனர். அதற்கு அவர் ''நீங்கள் மறைத்து வைக்காமலும் ஏமாற்றாமலும் இருப்பீர்களென்றால் நான் அதை உங்களுக்கு செய்வேன். அது தீர்ந்துபோகாது இருக்கும். நீங்கள் அவ்விதம் செய்யவில்லையென்றால் தண்டிக்கப்படுவீர்கள் '' என்றார். ஆனால் அன்றையப் பொழுது கடந்து போவதற்கு முன்னரே அவர்கள் ஏமாற்றி உணவை ஒளித்து வைத்தார்கள். ஆகையால் அந்த விரிப்பு (மேசை) மேலே எடுத்துக் கொள்ளப்பட்டு அவர்கள் குரங்குகளும் பன்றிகளுமாய் மாற்றப்பட்டார்கள்.''

இபீன் அப்பாஸ் மொழிந்தவை.

''நாற்பது நாட்கள் உபவாசமிருங்கள். பின்பு உங்களுக்கு வேண்டியதை அல்லாஹ்விடம் கேளுங்கள். அவர் அதை கொடுத்தருள்வார்'' என்று இஸ்ரவேல் பிள்ளைகளுக்கு ஈஸா சொன்னார். அவர்கள் நாற்பது நாட்கள் உபவாசத்தை முடித்த பின்பு ''ஒ ஈஸாவே, நாங்கள் உபவாசமிருந்து பசியோடிருக்கிறோம். ஒரு விரிப்பு (மேசை) நிறையான உணவை பரலோகத்திலிருந்து வருமாறு இறைவனிடம் விண்ணப்பித்துக் கொள்ள வேண்டுகிறோம்'' என்றார்கள். ஈஸா இரட்டு உடுத்தி சாம்பல் தெளித்து அல்லாஹ்விடம் வேண்டுதல் செய்தார். ஒரு விரிப்பின் மேல் (மேசை) ஏழு அப்பங்களும் ஏழு பெரிய மீன்களையும் தேவதூதர்கள் கொண்டுவந்தார்கள். அவர்கள் எல்லோருக்கும் பரிமாறப்பட்டு போதுமானதாக இருந்தது.

## குர்ஆனில் கிறிஸ்துவின் புத்திரத்துவம்

குர்ஆனிலே வெளிப்படுத்தப்பட்டிருக்கும் கிறிஸ்துவின் நிலையை கவனத்திற் கொள்ளுபவர்கள் எவரானாலும், அவருடைய ''புத்திர தத்துவத்தைக் குறித்து வாக்குவாதத்தை எழுப்பக் கூடியதாக இருக்கிறது. அதைப் பற்றி ஐந்து தத்துவ விளக்கங்கள் நிலவுகின்றன.

### 1. அது ஒரு நிந்தனை.

அல்லாஹ்வின் மகத்துவத்தின் புனிதத் தன்மையை களங்கப் படுத்துவது செம்மையாகாது. அவர் வார்த்தையால் மட்டும்

அல்லாஹ்வுக்கு எந்த ஒரு புதல்வனையும் தத்தெடுத்துக் கொள்ளவேண்டியதில்லை. அவன் தூயவன்; அவன் ஒரு காரியத்தை தீர்மானித்தால், ஆகுக! என்று கூறுவான்; அது ஆகிவிடுகிறது. 19:35.

மகா தயாளம் நிறைந்தவர் தமக்காக ஒரு குமாரனை எடுத்துக் கொண்டாரென்று அவர்கள் சொல்லுகிறார்கள். உண்மையாகவே நீங்கள் மகா பாதகமான காரியத்தை சொல்கிறீர்கள். இதனால் வானுலகமே சிதறடிக்கப் படுகிறது. பூவுலகம் பிளக்கப்படுகிறது. பர்வதங்கள் சிதைந்து வீழ்கின்றன. இவ்வாறிருந்தும் கிருபை நிறைந்தவருக்கு ஒரு குமாரன் என்று பழிசுமத்துகிறீர்கள். தயாளுவான அவருடைய மாட்சிமைக்கு அவர் ஒரு குமாரனை பெற்றுக் கொண்டார் என்பது ஏற்காது.

وَقَالُوا اتَّخَذَ الرَّحْمَٰنُ وَلَدًا ٨٨ لَقَدْ
جِئْتُمْ شَيْئًا إِدًّا ٨٩ تَكَادُ السَّمَاوَاتُ يَتَفَطَّرْنَ مِنْهُ
وَتَنْشَقُّ الْأَرْضُ وَتَخِرُّ الْجِبَالُ هَدًّا ٩٠ أَنْ دَعَوْا لِلرَّحْمَٰنِ وَلَدًا
٩١ وَمَا يَنْبَغِي لِلرَّحْمَٰنِ أَنْ يَتَّخِذَ وَلَدًا ٩٢ إِنْ كُلُّ مَنْ فِي
السَّمَاوَاتِ وَالْأَرْضِ إِلَّا آتِي الرَّحْمَٰنِ عَبْدًا ٩٣

இன்னும், ''அர்ரஹ்மான் தனக்கென ஒரு குமாரனை எடுத்துக் கொண்டுள்ளான்'' என்று அவர்கள் கூறுகிறார் கள். நபியே! ''நிச்சயமாக நீங்கள் அபாண்டமான ஒரு கூற்றைக்கொண்டு வந்திருக்கிறீர்கள். வானங்கள் துண்டு துண்டாகவும், பூமி கபாலம் கபாலமாகப் பிளக்கவும், மலைகள் சிதறுண்டு விழும்போதும்! அவர்கள் அர்ரஹ்மா னுக்கு ஒரு குமாரன் உண்டென்று தாவாச் செய்வதினால் ஒரு குமார்ரனை எடுத்துக் கொள்வது அல்லாஹ்வுக்கு தேவையில்லாதது. ஏனென்றால், வானங்களிலும், பூமியி லும் உள்ள ஒவ்வொன்றும் ஒவ்வொருவரும் அர்ரஹ்மானி டம் அடிமையாய் வருபவரேயன்றி வேறில்லை. நிச்சய மாக அவற்றையெல்லாம் அவன் சூழ்ந்தறிகிறான்; இன் னும் அவற்றை துல்லியமாக கணக்கிட்டு வைத்திருக்கின் றான். 19:88-94

இமாம் அல்ஃஃப்க்ருதீன்அல் ராசியின் தெளிவுரை பின்வரு மாறு கூறுகிறது.

விக்கிரக வழிபாட்டுக்காரர்களுக்கு பதிலளித்தபோது, அவருக்கு ஒரு குமாரன் உண்டென்று உறுதி சொன்னவர்க ளிடம் பேசியதை நான் அறிவேன். உசைர் இறைவனின் குமாரனென்று யூதர்கள் சொன்னார்கள். கிறிஸ்து இறைவ னின் மைந்தன் என்று கிறிஸ்துவர்கள் சொன்னார்கள். தேவதூதர்களை இறைவனின் குமாரத்திகளென்று அராபி யர்கள் மொழிந்தனர். இவையாவும் ''தயாநிதியான அவர் தமக்கு ஒரு குமாரனை ஏற்றுக் கொண்டார் என்று கூறுகின்ற வசனத்தில் உள்ளடங்கி இருக்கிறது.

''மகா பாதகமான காரியம்'' (ஷை அன் இத்த) என்ற சொற்கள் அதிர்ச்சியூட்டும் வழியில் உண்மையை மறுதலிப் பதாகும் என்பதே பொருள். ஆகவே வானங்கள் சிதறடிக் கப்படவும், பூமி பிளந்து மகாபர்வதங்கள் நிலைகுலைந்து போகும் என்பதின் பொருள் ''தயாநிதியானவர் தமக்கு ஒரு குமாரனை பெற்றுக் கொண்டார்'' என்று சொல்லுபவர் மேல் அல்லாஹ்வின் கோபாக்கினை விழும் என்பதே.

**2. இது சிருஷ்டிகரோடு சிருஷ்டித்து ஒன்றிணைவதின் ஒரு அங்கம்.**

சூரத் அல் சுக்ரூஃப் பொன்னாபரணங்கள் — 15ல் நாம் பின்வருமாறு வாசிக்கின்றோம். அவருடைய பிணைப்புள்ள ஒரு பகுதியினரை அவருக்கு பிரிவினை செய்து வைககிறார்கள். அந்தோ! மனிதனோ ஒரு வெளிப் படையான தூஷகன். அவருடைய படைப்பிலிருந்து குமாரத்திகளையேற்று உங்களுக்குப் புத்திரர்களைத் தந்து மேன்மை படுத்துவாரோ?''

இங்கேயொரு கேள்வி எழுகின்றது.''சிருஷ்டிகளுடன் சிருஷ்டிக்கப்பட்டதின் ஒரு பகுதியை அவரோடு இணைப் பதனால், சிருஷ்டிகளுக்கும் சிருஷ்டிக்கப்பட்டவைகளின் இடையிலேயுள்ள உறவுமுறை என்ன?'' மானசீகமாகவும் சரீர இயல்பாகவும் அது முடியாத காரியம். ஆயினும் ''வானத்திலும் பூமியிலும் அவருக்கு அடிமையாய் வருப வர்களில்லாது ''அடிமைப்படவனொருவன் எஜமானனாக முடியாது'' என்றும், ''வானத்தையும் பூமியையும் படைத்த வர்'' எனப்படும் வாக்கியத்தைக் கூறி சிருஷ்டிக்கப்பட்டது சிருஷ்டிகராக இயலாதென்று உறுதிமொழி சொல்லுகிறார் கள்.

கிறிஸ்தவர்களாகிய நாமோ படைக்கப்பட்டவைகளை அல்லாஹ்வோடு ஒன்று சேர்க்க முடியாதென்று உறுதிப் படுத்துகிறோம். ஆனால் எமது நம்பிக்கையின்படி பிதா குமாரன் ஆகிய இருவருக்குமிடையேயுள்ள உறவுமுறைக்கு இதனை உபயோகிக்க முடியாது. சாராம்சத்தில் ''குமாரன்'', ''பிதா''வோடு ஒன்றானவர். மேலும் கிறிஸ்துவோ தேவனுடைய வார்த்தையானவர். அவரிடமிருந்து வந்த ஆவி என்றும் குர்ஆனே கூறுகின்றது. ஆகவே இறைவனது படைப்பின் ஒரு பகுதியை அவருடன் ஒன்றிணைப்பதற்கும் கிறிஸ்துவினுடைய புத்திரதத்துவ காரணகாரியங்களுக்கும் சம்பந்தமே இல்லை.

**3. ஒரு ''குமாரன்'' எனப்படுபவர் ஆண் பெண் இருவரிடமிருந்தே உற்பத்தியாக முடியும்.**

புத்திர தத்துவத்தை இஸ்லாம் அறிந்து கொள்வதில் இங்கேயொரு பிரச்சினையிருக்கிறது. குர்ஆன் கூறுகிறபடி, அவன் வானங்களையும், பூமியையும் முன் மாதிரியின்றிப் படைத்தவன். அவனுக்கு மனைவி, எவரும் இல்லாதிருக்க, அவனுக்கு எவ்வாறு பிள்ளை இருக்கமுடியும்? அவனே எல்லா பொருட்களையும் படைத்தான் இன்னும் அவன் எல்லாப் பொருட்களையும் நன்கறிந்தவனாக இருக்கின்றான். (6:101)

அல்பைலவி இவ்வசனத்திற்கு விளக்கங் கூறுகையில், ''ஓரினத்திற்கும் இயற்கைக்கும் உட்பட்ட ஆண் பெண் இருவருக்கே குழந்தை பிறக்கின்றதென்று கூறுதலே மரபு. அல்லாஹ் இதற்கு அப்பாற்பட்டவராக இருக்கின்றார்.''

இறைவனான தேவனுக்கு ஒரு புத்திரன் இருக்கமுடியா

தென்ற சித்தாந்தத்தைக் குறித்து இஸ்லாத்தின் கொள்கை இதுவேயாகும். அவருக்கு மனையாள் இல்லை. அவ்வாறி ருக்கவும் முடியாது. கிறிஸ்துவுக்கு தேவனின் பிதா தத்துவத்தைப் பற்றி மறுப்பு கூறுவதின் இரகசியம் இதுவே. குமாரனைப் பொருத்தவரையில் ''புத்திர தத்துவத்திற்கு'' ஸ்தூல (வெளிப்படையான) நிலையில் தவிர வேறு கருத்தொன்றில்லை.

தபாரியின் ''ஜாமி அல்பயானில்'' எழுதப்பட்டிருப்பது இக்கருத்தினை ஆதரிக்கின்றது. வஃபும் அபிசெய்யிதும் கூறுவதாவது: ''ஆணுக்கும் பெண்ணுக்குமே குழந்தை பிறக்கவேண்டும். அல்லாஹ்வுக்கு மனையாளும் குழந்தை யும் இருப்பதறகில்லை. அவரே சகலத்தையும் சிருஷ்டித்த வர். அவரால் படைக்கப்பட்டதைத் தவிர வேறு ஒன்றில் லையென்றால் அவருக்கு குமாரன் ஒருவர் எங்ஙனம் இருக்கமுடியும்?''

ஆரம்பத்திலே இறைநம்பிக்கையற்ற மத குதர்க்கவாதி கள் வழிபாட்டுக்குரிய ஆலயங்களிற் சேர்ந்த பின்னர் கன்னியாகிய மேரி ஒரு தெய்வம் என்ற குதர்க்கத்தை அறிமுகப்படுத்தினாரென்று மேற்கண்ட வசனத்தை சில பண்டிதர்கள் கையாளுகின்றனர். முன் நாட்களில் அவர்கள் வழிபட்டு வந்த பெண் தெய்வமான வீனசுக்கு மாற்று தெய்வமாக மேரியை ஏற்றுக் கொண்டிருக்கலாம். மகா பண்டிதரான அகமத் அல் மஃரிசி எழுதிய ''அல்கவுலுல் இப்ரீசி'' 26ம் பக்கத்தில் கூறியிருப்பதிலும், இபின் ஹசம் நூலான ''அல் மிலால் வ வல் அஹ்வா வா அல் நிகால்'' பக்கம் 48ல் காணப்படுகிறவைகளாலும் ஈர்க்கப்பட்டிருக்கி றார்கள். அல்லாஹ்வுக்கு மனையாட்டியும் அவள் வாயி லாக ஒரு புத்திரனும் இருந்ததாக இவர்களுடைய குதர்க்க

தென்ற சித்தாந்தத்தைக் குறித்து இஸ்லாத்தின் கொள்கை இதுவேயாகும். அவருக்கு மனையாள் இல்லை. அவ்வாறிருக்கவும் முடியாது. கிறிஸ்துவுக்கு தேவனின் பிதா தத்துவத்தைப் பற்றி மறுப்பு கூறுவதின் இரகசியம் இதுவே. குமாரனைப் பொருத்தவரையில் ''புத்திர தத்துவத்திற்கு'' ஸ்தூல (வெளிப்படையான) நிலையில் தவிர வேறு கருத்தொன்றில்லை.

தபாரியின் ''ஜாமி அல்பயானில்'' எழுதப்பட்டிருப்பது இக்கருத்தினை ஆதரிக்கின்றது. வஃபும் அபிசெய்யிதும் கூறுவதாவது: ''ஆணுக்கும் பெண்ணுக்குமே குழந்தை பிறக்கவேண்டும். அல்லாஹ்வுக்கு மனையாளும் குழந்தையும் இருப்பதறகில்லை. அவரே சகலத்தையும் சிருஷ்டித்தவர். அவரால் படைக்கப்பட்டதைத் தவிர வேறு ஒன்றில்லையென்றால் அவருக்கு குமாரன் ஒருவர் எங்ஙனம் இருக்கமுடியும்?''

ஆரம்பத்திலே இறைநம்பிக்கையற்ற மத குதர்க்கவாதிகள் வழிபாட்டுக்குரிய ஆலயங்களிற் சேர்ந்த பின்னர் கன்னியாகிய மேரி ஒரு தெய்வம் என்ற குதர்க்கத்தை அறிமுகப்படுத்தினாரென்று மேற்கண்ட வசனத்தை சில பண்டிதர்கள் கையாளுகின்றனர். முன் நாட்களில் அவர்கள் வழிபட்டு வந்த பெண் தெய்வமான வீனசுக்கு மாற்று தெய்வமாக மேரியை ஏற்றுக் கொண்டிருக்கலாம். மகா பண்டிதரான அகமத் அல் மஃரிசி எழுதிய ''அல்கவுலுல் இப்ரீசி'' 26ம் பக்கத்தில் கூறியிருப்பதிலும், இபின் ஹசம் நூலான ''அல் மிலால் வ வல் அஹ்வா வா அல் நிகால்'' பக்கம் 48ல் காணப்படுகிறவைகளாலும் ஈர்க்கப்பட்டிருக்கிறார்கள். அல்லாஹ்வுக்கு மனையாட்டியும் அவள் வாயிலாக ஒரு புத்திரனும் இருந்ததாக இவர்களுடைய குதர்க்க

வாதம் சூசகமாய்ச் சொல்லுகிறது. இதனைக் குர்ஆனில் வெளிப்படையாக மறுக்கப்படுகிறது. இக் கருத்து கிறிஸ்த வத்திற்கு புறம்பானது. கிறிஸ்தவர்களெவரும் இதை நம்பு வதில்லை. உடலமைப்பு குணாகுணங்களுக்கு அப்பாற் பட்ட பரிசுத்த இறைவனாகிய தேவனுக்கு எதிராகக் குறிவைக்கும் ஒரு நிந்தையாக இருக்கிறது.

சுவிசேசத்தின் (வேதாகமம்) அடிப்படையில் அமைந் துள்ள கிறிஸ்தவ நம்பிக்கையை ஒருவர் உண்மையில் கவனத்திற் கொள்ளும்போது, மாம்ச அடிப்படைக் கருத் தில் கிறிஸ்துவை தேவ குமாரனாக ஒருபோதும் கண் ணோக்குவதில்லை. ஆனால், ''ஆதியில் தேவனோடிருந்த வார்த்தை ''என்பதிலிருந்தும், பரிசுத்த ஆவியினால் அவர் உற்பத்தியானார் என்பதைக் கொண்டும், திவ்யப் பிரசன் னத்தால் வெளியானவரே தேவகுமாரன் என்று விசுவாசிக் கிறார்கள்.

சிறப்புமிக்க அப்போஸ்தலனாகிய பவுல் இந்த உண் மையை ரோமருக்கு எழுதிய புத்தகத்தில் 1:1-4 வசனங்க ளிலே சுட்டிக்காட்டுகிறான். ''இயேசு கிறிஸ்துவின் ஊழி யக்காரனும், அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவ னும், சுவிசேஷத்திற்காகப் பிரித்தெடுக்கப் பட்டவனுமாகிய பவுல், இயேசு கிறிஸ்துவைக் குறித்து தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பரிசுத்த வேதாகமங்களில் வாக்குத் தத்தம் பண்ணினபடி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவானவர், மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார்.''

## 4. அவர் உணவருந்தினார்.

சூரத் அல் மைதாத் 75இல் பதிப்பிக்கப்பட்டிருக்கும் செய்தியாவது : ''மேரியின் மைந்தனாகிய மேசியா அவருக்கு முன்பு மறைந்துபோனவர்களைப் போல் ஒரு தூதுவரைத் தவிர வேறில்லை. அவருடைய தாய் பரிசுத்தப் பெண்ணாக இருந்தாள். உலக இயல்பாடுகளை நாம் ஜனங்களுக்கு எவ்வளவு தெளிவு செய்தாலும், அவர்கள் எவ்வாறு திசை திருப்பிவிடப் படுகிறார்களென்பதைப் பாருங்கள். ''இஸ்லாமிய சிந்தனைப்படி எவராகிலும் உணவருந்தினால் எவ்விதம் அல்லாஹ்வாக இருக்கமுடியுமென்பதிலிருந்து கிறிஸ்துவின் மனுஷீகத்தைப் புலனாக்கி அவரில் எவ்விதத் தெய்வீகத் தன்மையும் இருக்கமுடியாதென்று கூறப்படுகிறது.

இந்த வசனங்களுக்கு அல் ராசி பின்வருமாறு விளக்கம் தருகிறார் : ''ஈன்றெடுத்த தாய்தனை உடைய்வர் ஒவ்வொருவரும் இல்லாமையிலிருந்து உருவானவர்கள். இத்தகையவர்களெல்லோரும் சிருஷ்டிக்கப் பட்டவர்களே. அவர்கள் அல்லாஹ் இல்லை. (ஆ) அவர்கள் ஏழைகளாய் தேவைகள் மிகுந்தவர்களாயிருந்தனர். அவர்கள் ஏழைகளாய் தேவைகள் மிகுந்தவர்களாயிருந்தனர். அவர்கள் உயிர்வாழ அத்தியாவசியத் தேவைகள் இடர்பட்டது. ஆனால் அல்லாஹ் என்பவருக்கோ தேவை என்பது ஒன்றுமில்லை. ஆகவே கிறிஸ்து எவ்விதம் அல்லாஹ்வாக இருக்க முடியும்? (இ) ''அவர்களிருவரும் உணவு உட்கொண்டார்கள்'' என்ற வசனமானது அவர்களுடைய மானிட இயல்பினைக் குறிப்பிடுகிறது. உணவருந்தும் ஒவ்வொருவரும் மரணத்துக் கேதுவானவர்களே.'' (அல் ராசி இந்த மூன்றாவது கருத்து பலவீனமானது என்று கூறுகிறார்.)

**5. சிருஷ்டிக்கப்பட்டவைகளுக்கு தீங்கிழைக்கவும் ஆதாயப்படுத்தவும் இயல்பில்லை.**

சூரத் அல் மைதாத் 76ல் கூறுகிறது: ''உங்கள்பால் தீமையோ பிரதிபலனோ நோக்காத அல்லாஹ்வுக்காக சேவைசெய்யுங்கள். அல்லாஹ் செவிகொடுப்பவராயிருக் கிறார். அவர் சர்வ ஞானி. ''கிறிஸ்தவ உடன்பாடுகளைக் குதர்க்கப்படுத்த இவ்வாக்கியங்களை சில வர்ணனையாளர் கள் குறிப்பிடுகிறார்கள். அங்கே அநேக தர்க்கவாதங்கள் உள்ளடங்கியிருப்பதாகவும் கூறியிருக்கின்றார்கள்.

(அ) யூதர்கள் ஈஸாவை இடையறாததெதிர்த்து அவருக் குத் தீங்கிழைக்க வகைதேடினார்கள். ஆனால் அவர்களை அவரால் புண்படுத்த முடியவில்லை. அவருடைய சீடர்க ளும் சிநேகிதர்களும் அவரை நேசித்தனர். உலகியல்பில் ஆதாயங்களையோ நன்மைகளையோ அவரால் கொண்டு வர முடியவில்லை. தன் விரோதிகளுக்கு தீங்குண்டாக்க வும் உலக ஆதாயங்களையும் கொண்டு வர முடியவில்லை யென்றால் அவரை அல்லாஹ்வாக எவ்விதம் மனம் ஏற்றுக் கொள்ளும்?

இந்த விளக்கத்திற்கு உறுதுணையாய் அல் பைத்தாவி சொல்லுகிறதாவது : ''ஈஸாவுக்கு சிறந்த உரிமை இருந்தி ருக்கலாமென்றாலும், இறைவனை தன்னுடைமையாக்கிக் கொண்டதால் அப்படிச் செய்தார். இந்த இயல்பை சுயவலிமையால் பெற்றிருக்கவில்லை.'' குர்ஆனிலே காணப்படும் சாதாரண ஈஸாவாக - அடிமையாகிய ஈஸாவாக இருந்தாரென்றால் இந்த வல்லமைகளைப் பெற்றிருக்கவில்லை என்பதை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் ஏசாயா தீர்க்கதரிசி சொன்னவைகளுக்கு நன்றி

கூறுவோம். ''அவர் மகா வல்லமையுள்ள தேவன்'' என்று ஏசாயா 9:6ல் சொல்லுகிறான். ஏனென்றால் அவனுடைய செய்தி - தீமைக்கோ உலக ஆதாயத்துக்கோ இல்லாது இரட்சண்யத்தின் செய்தியாக இருந்தது. ''உலகின் காருண்யராய்'' அவர் வந்தார்.

(ஆ) யூதர்கள் அவரைச் சிலுவை யிலறைந்து, விலாவைக் காயப்படுத்தினார்கள். அவர் தாகமேலீட்டால் வருந்தியபோது தண்ணீர் கேட்டார். அவர் நாசிகளில் காடியை ஊற்றினார்கள். இத்தகைய பலவீனமான ஒருவரை எவ்வாறு அல்லாஹ்வாகக் கருதமுடியும் என்று கூறும் ஒரு பிரிவு கிறிஸ்தவர்களும் உண்டு.

உலகின் தேவனாயிருப்பவருக்கு தமது படைப்பிடமிருந்து எந்தத் தேவையும் கிடையாது. ஆனால் அனைத்துக்கும் அவர் தேவைப்படுகிறார். ஈஸா அல்லாஹ்வாக இருந்திருந்தால் அவர் தொழுது கொள்வதில்லை. மனிதன் தான் அல்லாஹ்வை தொழுது கொள்கிறான். ஈஸா தொடர்ந்து கீழ்ப்படிந்தவராய் அல்லாஹ்வைத் தொழுதேற்றினார். அவரிடமிருந்து அநுகூலங்களைப் பெற்று அதனால் பிறருக்குத் தீமை செய்யும் வலிமை பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற தேவையிருந்ததென்று பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இப்பேர்ப்பட்டவர் எவ்விதம் பிறருக்கு அநுகூலம் செய்ய முடியும்? தீமையிலிருந்து அவர்களை எப்படி பாதுகாக்க இயலும்? அவர் இத்தகையவராக இருந்தால் மற்ற மனிதர்களைப் போல் இவரும் ஒரு மனிதனேயாவார்.

## இஸ்லாத்தில் கிறிஸ்துவின் இறைத்தன்மை

இஸ்லாத்திற்கும் கிறிஸ்துவத்திற்கும் இடையிலே நில வும் பெரும் தர்க்கமானது கிறிஸ்தவர்கள் மேற்கொண் டுள்ள கிறிஸ்துவின் தெய்வீகத்தைக் குறித்ததாகும். குர்ஆ னின் கருத்துப்படி இது தெய்வ நிந்தனையும் அவநம்பிக் கையுமாக கணக்கிடப்படுகிறது. அநேக வசனங்களில் இதனை மறுத்துக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். இவை களிலே சூரத் அல் மைதாத் (விரிப்பு அல்லது மேசை) என்பதில் நான்கும், ஐந்தாவது சூரத் அன் நிசா (ஸ்திரீ)வி லும் பிரதானமானவை எனக் குறிப்பிடலாம்.

1. குர்ஆனில் கூறப்படுவதாவது: ''இதோ மேரியின் மைந்தனாகிய மேசியாவே அல்லாஹ். அவர் மேரியின் மைந்தன் மேசியாவையும், தாயையும் உலகிலுள்ள எல் லோரையும் அழித்துவிடச் சித்தங் கொண்டால் அல்லாஹ் வுக்கு எதிராக எவர் என்ன செய்யக் கூடும்? என்று சொல்லுபவர். அவநம்பிக்கையுள்ளவர்களாவார்கள். (சூரத் அல் மைதத் 17)

இந்த வாக்கியங்களுக்கு அல் ராசி விளக்கம் தரும்பொ ழுது, அதனில் ஒரு கேள்வி உள்ளமைந்திருப்பதாகக் கூறப்படுகிறது. மேரியின் மைந்தன் கிறிஸ்துவை அல்லாஹ் என்று கிறிஸ்தவர்கள் எவரும் கூறவில்லையென்றால், அவர்கள் அப்படிக் கூறாதிருப்பதைப் பார்த்து அவர்க ளைக் குறித்து அல்லாஹ் ஏன் அவ்விதம் பேசினார்? இதற்கு மறுமொழி பின்வருமாறிருக்கிறது. அல்லாஹ் அல்லது அவருடைய ஆவி தெரிந்துகொள்ளப்பட்ட ஒருவரது உடலிலே அவதரிக்கலாம் என்று அவதாரத்தில் நம்பிக்கை வைத்துள்ளவர்கள் கூறுகிறார்கள். அது அவ்வா

திருந்தால், சில கிறிஸ்தவர் கடைப்பிடிக்கும் இந்தக் கொள்கை சாத்தியமற்றதென்று கூறுவதற்கில்லை. கிறிஸ்த வர்கள் நிலைநிறுத்தும் சாத்தியக் கூறு அப்பாற்பட்டதல்ல. ஏனென்றால், வார்த்தையானவர் ஈஸாவின் ஆள் தத்துவத் திலே ஒன்று கலந்தாரென்று அவர்கள் கூறுகிறார்கள்.

''வார்த்தை'' என்பதின் கருப்பொருள் அது ஒரு ''உருவமைப்பு'' அல்லது ஒரு ''தத்துவம்'' என்பதல்ல. அவர் ஜீவனுள்ளவராக இருந்தாரென்றால் அல்லாஹ்வின் உருவமைப்பு ஈஸாவில் அவதரித்து அவரோடு ஒன்றாயி ருக்கிறார். அதனால் இக்கூற்றின்படி ஈஸா அல்லாஹ்வாக இருக்கின்றார். ''வார்த்தையின்'' கருப்பொருள் ''தத்துவத் தின் சொல்லாக்கமென்று'' கூறினால் இத்தத்துவம் ஒருவரி லிருந்து மற்றொருவரிடம் பெயர்ந்து சென்றதென்று சொல் வது பகுத்தறிவல்ல.

அல்லாஹ்விடமிருந்து ஞானப் பொருளென்பது ஈஸாவி டம் பெயர்ந்தடைந்ததென்ற கற்பனை அல்லாஹ் தாமே தன்னுடைய ஞானத்தையெல்லாம் ஊற்றி விட்டாரென்றால் சர்வஞானமில்லாது அவர் அல்லாஹ்வாக இருக்கமுடியா தென்று கூற அவசியமேற்படுகிறது.

அல்லாஹ்விடமிருந்து ஞானம் பரிமாற்றஞ் செய்யப்பட் டதென்ற கற்பனையின்படி அல்லாஹ் தம்மிடமிருந்து எல்லா ஞானத்தையும் ஊற்றிவிட்டார் என்றால், சர்வஞான மில்லாதிருப்பவர் அல்லாஹ்வாக இருக்கமுடியாது. அவர் களுடைய கருத்தின்படி ஈஸாவே அல்லாஹ்வாக இருக் கின்றார். இந்த மதக் கொள்கையை கிறிஸ்தவர்கள் தெளிவுறக் கூறாவிட்டாலும், அவர்கள் கற்பனைத் தத்து வப் பலன் அதனிலும் குறைவானதாகத் தோன்றவில்லை.

''மேரியின் குமாரனாகிய மேசியாவையும் அவர் தாயையும் ''அழிப்பதற்கு அவர் சித்தம் கொண்டிருந்தால் அல்லாஹ்வுக்கு எதிராக யார் என்ன செய்யமுடியும்?'' என்று சொன்னது இந்த சீர்கேடான நம்பிக்கைக்கு எதிரான எச்சரிக்கை. அல்லாஹ்வின் நாமம் போற்றப்படுவதாக. இவ்வார்த்தைகள் விமர்சகர்களின் கருத்துப்படி, ஈஸா வெளிப்படையான தோற்றத்திலும், உடலமைப்பிலும், சுபாவத்திலும், குணத்திலும், நிலைகளிலும் இந்த மண்ணுலகிலுள்ள மனிதனைப்போல் ஒருவராகவே இருந்தார் என்று அர்த்தமாகிறது.

2. குர்ஆன் சொல்லுகிறது : ''இதோ! மேரியின் மைந்தனான மேசியாவே அல்லாஹ்'' என்று சொல்லுபவர்கள் அவநம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். ''ஓ! இஸ்ரவேலின் பிள்ளைகளே, என் ஆண்டவரும் உங்கள் ஆண்டவருமாகிய அல்லாஹ்வை தொழுதுகொள்ளுங்கள். அல்லாஹ்வோடு பங்காளிகள் என சமத்துவம் கூறுபவர்களுக்கு அல்லாஹ் பரலோகத்தைத் தடை செய்துள்ளார். அவருடைய வாசஸ்தலமோ அக்கினி. தீமையாளருக்கு உதவியாளர்கள் எவரும் இருக்கமாட்டார்கள்'' என்று மேசியாவே சொல்லியிருக்கிறார். (சூரத் அல் மைதாத் 72).

இந்த வாக்கியங்களுக்கு விளக்கந்தரும் முகமாக இமாம் அல் ராசி கூறுவதாவது : ''யூதர்களின் சில வாய்மொழிகளை அல்லாஹ் விசாரித்தவேளையில் இறைவனானவர் ஈஸாவில் அவதாரமாகி அவர் உருவிலே ஐக்கியமானார்'' என்று ஒரு மதக்குழுவினர் கூறுவது வெளிப்பட்டது.

3. சூரத் அல் மைதாத் 73 உரைப்பதாவது : ''இதோ! அல்லாஹ்வைத் தவிர வேறொருவர் இல்லாதிருக்கும்

போது மூன்றில் மூன்றாவதாக இருக்கிறார் என்று அவநம்பிக்கையுள்ளோர் கூறுகிறார்கள். இவ்விதமாய் அவர்கள் சொல்லுவதை தவிர்த்துக் கொள்ளவில்லையென்றால் நம் பாதவர்கள் மேல் வேதனை தரும் பாழ்க்கடிப்பு வந்துவிடும்''. முஸ்லீம்கள் இவ்வாசகத்தை ஆரம்பமாக வைத்து, கிறிஸ்தவர்கள் அல்லாஹ், மேரி, இயேசு என்று மூன்று தெய்வங்களை வழிபடுவதாக பழியேற்றுகிறார்கள்.

அல் ராசி கிறிஸ்தவர்களின் நம்பிக்கையை பின்வருமாறு பார்க்கிறார் :

''ஒரே சாராம்சத்தை'' உரிமை கொண்டாடுகிறார்கள் என்று கிறிஸ்தவர்களை குறித்துச் சொல்லப்படுகிறது. சூரியனில் ஒரு வட்டம், கதிர்கள், வெட்பம் உள்ளடங்கி இருப்பதுபோல் மூன்று பேர்களான பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்ற மூவரும் ஒரே தேவனில் உள்ளடங்கியிருக்கிறார்கள். ஆள் உருவினை ''தந்தை'' யென்றும், வார்த்தையை ''குமாரன்'' என்றும் ''ஜீவனை'' ஆவியானவரென்றும் கருதப்படுகிறது. நீரானது திராட்சை ரசத்தோடும் பாலோடும் ஒன்று கலப்பது போல் ''வார்த்தை'' எனப்படும் ''தேவனுடைய வார்த்தை''யானது ஈஸாவின் சரீரத்தில் சங்கமித்தது என்றும் உருவம், வார்த்தை, ஜீவன் உண்டென்றும் உறுதிமொழிந்து, பிதா தேவனாயிருக்கிறார், குமாரன் தேவனாயிருக்கிறார், பரிசுத்த ஆவியானவர் தேவனாயிருக்கிறார் என்று குற்றமுறக் கூறுகிறார்கள்.'' இந்த விளக்கத்தை முடிக்கும் தருணத்தில் அல் ராசி மேலுங் கூறுகிறார் : மூன்று ஒன்றாகவும், ஒன்றுமூன்றாகவும் இருக்கமுடியாது. இதுஉண்மையில்லை யென்று சிந்தையின் உள்ளுணர்வினால் இப்பொழுது அறிந்து கொள்ளப்படுகிறது.''

4. குர்ஆன் கூறுகிறதாவது: "ஓ! மேரியின் மைந்தனாகிய ஈஸாவே! என்னையும் என் தாயையும் அல்லாஹ்வுடன் இரண்டு தெய்வங்களாக ஏற்றுக்கொள்ளுங்கள் என்று மக்களிடம் சொன்னாயோ?" என்று அல்லாஹ் கேட்டபோது அவர் "உமக்கு மகிமையுண்டாவதாக! எனக்கு உரிமை இல்லாததைச்சொல்ல என் வார்த்தையின் தரமல்ல, அப்படிச் சொல்லியிருந்தாலும் அதனை நீர் அறிவீர். என் ஜீவனிலிருப்பதையும் நீர் தெரிந்திருக்கிறீர். உமக்குள் இருப்பதை நானோ அறியேன். மறைபொருளானவைகளை அறிந்தவர் நீர் ஒருவரேயாகும் (சூரத் அல் மைதாத் 116)

அல் ராசி இவ்வசனங்களில் இடர்பாடுகளைக் காண்கிறார். முதலாவதாக அல்லாஹ் கூறிய "ஓ ஈஸாவே, மேரியின் மைந்தனே! என்னுடைய கிருபை உன்மேல் இருக்கிறது என்பதை நினைவு கொள்". என்னும் அல்லாஹ்வின் வசனத்தில் தொடர்புள்ளதாயிருக்கிறது. உயிர்த்தெழும் நாளிலே அவருக்கு ஏற்படும் தனிச்சிறப்பை சம்பந்தப்படுத்துகிறார்.

இரண்டாவது: "என்னையும் எனது தாயையும் இரண்டு தெய்வங்களாக ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று ஈஸா சொல்லவில்லையென்பதை சர்வ ஞானியாகிய அல்லாஹ் தெரிந்திருந்தால் சர்வ ஞானமுள்ள அவர் இக்கேள்வியை முன்வைப்பது தரமல்ல. ஏன் அவரைக்கேட்டார்? கிறிஸ்தவர்களைக் கண்டித்துக் கொள்வதே இதன் காரியமென்று கூறப்படும் என்றால், ஈஸாவும் மேரியும் அல்லாஹ்வோடு கூட மேலும் இரண்டு தெய்வங்கள் என்று சொல்லப்பட்டதை கிறிஸ்தவர் எவரும் ஒருபோதும் நம்பவில்லை என்று நாம் சொல்லமுடியும். ஆகையால் ஒருவருஞ்

சொல்லாத இந்த வசனத்தை எப்படி சம்பந்தப்படுத்தலாம்?

''அவரை ஏன் கேட்டார்?'' என்பது மறுப்பின் முகமாய் கேட்கப்பட்ட கேள்வியென்று முதற்காரணத்திற்கு பதிலளிக்கப்படுகிறது.

''அல்லாஹ்வே சிருஷ்டிகர்'' என்பது இரண்டாவதற்கு கொடுக்கப்படுகிற பதிலாயிருக்கிறது. ஈஸா, மேரி இருவராலும் நிகழ்ந்த அற்புதங்களுக்கு ஈஸாதான் காரணகர்த்தா. அல்லாஹ்வானவர் அல்ல என்று கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள். அப்படியானால் அற்புதங்களை நிகழ்த்தியவர்கள் ஈஸாவும் மேரியுமே தவிர அல்லாஹ் செய்யவில்லை என்று கிறிஸ்தவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகையினால் ஈஸாவும் மேரியும் தெய்வங்கள் என்று ஓரளவு உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே, அல்லாஹ் இனி மேல் இறைவனல்ல. அநேக வசனங்களும் கதைகளும் இந்த விளக்கத்தோடு ஒத்திருப்பதாக அல் ராசி நம்புகிறார்.

தேவனானவர் இயேசுவிடம் இந்த கேள்வி கேட்கப்பட்ட திட்டவட்டமான காலம் எப்பொழுது என்பதை குறித்து விமர்சகர்கள் நம்பிக்கையற்றிருக்கிறார்கள்.

தேவன் தனக்கென்று மேரியின் குமாரன் ஈஸாவை உருவாக்கியபின்பு அவர் ஈஸாவைநோக்கி ''என்னையும் எனது தாயையும் இரண்டு தெய்வங்களாக ஏற்றுக்கொள்ளுங்கள் என்று மனுக்குலத்திடம் நீ கேட்கவில்லையோ?'' என்று வினவியதாய் திருஷ்டாந்தமாக அல் சுத்தி கூறுகிறது.

ஆனால் இந்த கேள்வி இன்னும் கேட்கப்படவில்லை. இது உயிர்த்தெழும் நாளில் கேட்கப்படும் என்று கதாதா

சொல்கிறது. இதனை இபின் ஜரீகம் மைசாராவும் ஒத்துக் கொள்கிறது.

5. ''ஓ வேதாகமத்தின் ஜனங்களே!உங்கள் மதத்தை மிகைப்பபடுத்தி கூறாதீர்கள். அல்லது உண்மையைத் தவிர அல்லாஹ்வைக் குறித்து ஏதாகிலும் சொல்லாதீர்கள். மேரியின் மைந்தனான ஈஸா மேசியாவானவர் அல்லாஹ் வின் தூதுவராவார். மேரியின் பால் அனுப்பப்பட்ட அவருடைய வார்த்தையே அவர். அல்லாஹ்விடமிருந்து வந்த ஆவியே அவர். ஆகையால் அல்லாஹ்வையும் அவரது தூதுவரையும் நம்புங்கள். ''மூன்று'' என்று கூறுவதை நிறுத்துவீர்களாக. இது உங்களுக்கு நலமானதா யிருக்கும். அல்லாஹ் ஒரே ஒரு இறைவனாக இருக்கிறார்'' என்று சூரத் அன் நிசா-பெண்கள் 170ல் கூறப்படுகிறது.

அபு ஜபார் அத் தபாரி இந்த வசனங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது ''நற்செய்தியின் ஜனங்களே! கிறிஸ்த வர்களானவர்களே! உங்கள் மதத்திலுள்ள உண்மைக்கு அப்பால் போக வேண்டாம். அதனை மிகைப்படுத்தியும் சொல்லவேண்டாம். ஈஸாவைக் குறித்து உண்மையில்லாத தையும் கூறவேண்டாம். ''மூன்றில் ஒருவர்'' என்று கூறுவதை பேச்சாளர்களே நீங்கள் நிறுத்திவிடுங்கள். நீங்கள் பொய்மொழிந்து பல தெய்வத்தின் வழிபாட்டை மேற்கொள்கின்றீர்கள். இதனைச் சொல்வதினின்றும் நீங் கள் விடுபட்டு நிற்பது உங்களுக்கு நன்மையாயிருக்கும். ஏனென்றால், நீங்கள் பாதுகாக்க வேண்டுமென்று அதிகார மளிக்கப்பட்டிருக்கும் உண்மைக்கு திரும்பி வரவில்லை யென்றால் இந்தச்சொல்லுக்கு அல்லாஹ்விடமிருந்து திடீ ரென்று தண்டனை வந்து சேரும்'' என்று கூறுகிறார்.

''திரித்துவம்'' எனப்படுவது அல்லாஹ், ஈஸா,மேரி யெனப்படும் மூன்றுதெய்வங்களென்று பொருள்படுவதாக நம்பிக்கை வைத்திருப்பது இஸ்லாத்தின் சிக்கலான பிரச்சினையாக இருக்கின்றது. ஆனால் இஸ்லாத்துக்கு முன்பாகவும் பின்னரும் நூற்றாண்டுகள் காலமாய் ''திரித்துவம்'' மூன்று தேவர்களைக் குறிப்பிடுவதாக கிறிஸ்தவத்தில் ஒருபோதும் சொல்லப்படவில்லை. இது மதபேதவாதிகளின் மாய்கை. இத்தகையவர்களையும் அவர்களுடைய குதர்க்கங்களையும் கிறிஸ்தவச் சபை கண்டனஞ் செய்து அவர்களை நிராகரித்திருக்கிறது. இத்தகைய சமய பேதவாதிகள் இஸ்லாத்துக்கு முற்பட்டகாலங்களில், அராபியர்கள் அறியாமையிலாழ்ந்திருந்த நாட்களைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். இவர்களிடமிருந்து இத்தகைய உண்மைக்கு மாறாகத் திரித்துக் கூறப்பட்டிருக்கும் கிறிஸ்தவக் கருத்தை இஸ்லாம் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

## இஸ்லாத்தில் கிறிஸ்துவின் மனுஷீக நிலை

இஸ்லாத்தின் போதகத்திலே கிறிஸ்து பின்வருமாறு காணப்படுகிறார்.

**1. அவர் ஒரு ஊழியக்காரர், எஜமானனல்ல.**

குர்ஆன் வாக்கியப்படி கிறிஸ்துவின் வாய்மொழிகள் : '' நான் அல்லாஹ்வின் அடிமை. அவர் எனக்கு வேத வசனங்களை தந்துள்ளார். நான் எங்கிருந்தாலும் அவர் என்னை ஆசீர்வதித்து நான் ஜீவனோடிருக்கும் நாளெல்லாம் தொழுதுகொள்ளவும். ஈகை செய்யவும் கட்டளையிட்டிருக்கிறார். ஈன்றவரிடம் கடமை காக்க வேண்டும். அகந்தையோடோ ஆசீர்வாதமில்லாமலோ நான் உண்டாக்கப்படவில்லை. (சூரத் மரியம் 30-34)

இவ்வாக்கியங்களுக்கு அல் இமாம் அல் ராசி விளக்கம் தருகையில் ''அல்லாஹ்வின் அடிமை'' என்பதற்கு நான்கு காரியங்களைக் கவனிக்குமாறு சொல்லப்படுகிறது.

முதலாவது : ஈஸா ஒரு தேவன் என்ற தவறான கிறிஸ் தவ நம்பிக்கையை நீக்கிவிடுகிறது.

இரண்டாவது : கிறிஸ்துவே அடிமைத்தனத்தை அறிக்கை செய்தமையால் அவரது சொற்படி உண்மையுள்ளவராக இருக்கிறார். அதனால் உண்மையாகவே அவர் அல்லாஹ் வின் அடிமை. அவர் பொய் கூறியிருந்தால் அவர் உபயோ கித்த வல்லமை ஒருபோதும் தெய்வீகமாய் இருந்திருக்காது. அது சாத்தானுக்கு உரியதாயிருந்திருக்கும். அவர் தெய்வீக ரானால் இவ்விரண்டு அனுமானங்களும் ஒன்றுமில்லாது போய்விடுகிறது.

மூன்றாவது : அக்காலத்தில் மரியாளாகிய அவரு டைய தாயின்மீது சுமத்தப்பட்ட கற்பின் களங்கத்தின் மீதான குற்றச்சாட்டை நீக்குவதற்கு நெருக்கமான அவசிய மிருந்தது. ஆயினும் ஈஸா அதனை தெளிதாய் மறுத்துக் கூறாமல் தன்னுடைய அடிமைப்பாட்டிலே உறுதி வைத் தார். தாயின்மேலுள்ள குற்றச்சாட்டை அகற்றுவதிலும் மேலாத அல்லாஹ்வோடு தம்மை சம்பந்தப்படுத்தும் பழியை அகற்றுவது மேலானது என்று தன் அடிமை நிலையிலே உறுதிப்பாடு வைத்தார்.

நான்காவது : அல்லாஹ்விடமிருந்து குற்றச்சாட்டினை அகற்றுவது தாயின்மீதுள்ள குற்றச் சாட்டினை அகற்றுவ தற்கு ஆதரவளிக்கிறது. ஏனென்றால், மகா உன்னத நிலையிலுள்ள அல்லாஹ் களங்கமுள்ள ஒரு ஸ்திரீயை

தமக்கு மகப்பேறு நிமித்தம் நியமித்திருக்கமாட்டார்.

பின்பு கிறிஸ்துவின் தெய்வீகத்தைக் குறித்து கிறிஸ்தவர்களின் நம்பிக்கையை விளக்கிக் கூறுகிறதாவது : ''கிறிஸ்தவர்களின் நம்பிக்கை அதிக மதிமயக்கமுள்ளதாயிருக்கிறது. இறைவன் ஒரு உடலமைப்புக்குள் அல்லது எல்லைக்குட்பட்வராக இல்லையென்று அவர்கள் ஒத்துக்கொள்கிறார்கள். ஆயினும், சகல வழியிலும் அவர்களுடைய நம்பிக்கை ஒன்றுமில்லாமற் போகும்படியான ஒரு விவாதத்தை முன் வைக்கலாம். ஒரு எல்லைக்குள் அடங்கியவராக இருப்பதாய் அவர்கள் நம்புகிறார்களென்று சொல்லும்போது எல்லா சரீரமும் உண்டாக்கப்பட்டவையென்ற தர்க்கத்தை முன்வைத்து அவர்கள் கூறுவதை நிராகரித்துவிடுகிறோம். அவர்கள் சொற்படி அவர் கட்டுப்பட்டிருக்கவில்லையென்றால், நீரானது திராட்சை ரசத்தோடு கலந்தும், தீயானது தழலோடு ஒன்றுசேர்வது போலும், வார்த்தையானது மானிடத்தோடு ஒன்றிணைந்ததெனப்படும் வாய்மொழிப்படி அவர்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்றால் இதற்கு வெளியரங்கமான மூலாதாரமில்லாது இவ்வாறு இருக்கக்கூடுமென்பதில் நியாயமில்லை.

கிறிஸ்துவின் ஆள் தத்துவத்தைப் பற்றி குர்ஆன் கொண்டுள்ளக் கருத்து, இயற்கை மனிதன் அறிந்துகொள்ள இயலாத ஒரு மறைபொருளின் இரண்டு உண்மைகளின் அடிப்படையில் எழுந்துள்ளதென்று நம்பலாம்.

முதலாவது உண்மை : மேரியின் மைந்தன் இயேசு இறைவனின் ஊழியக்காரராயிருந்தார். இது தீர்க்கதரிசிகளின் வாயிலாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ''இதோ என் தாசன் ஞானமாய் நடப்பார், அவர் உயர்த்தப்பட்டு,

மேன்மையும் மகா உன்னதமுமாயிருப்பார்'' ஏசாயா 52:13. ''என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்; அவர்களு டைய அக்கிரமங்களை தாமே சுமந்துகொள்வார்.'' ஏசாயா 53:11.

இரண்டாவது உண்மை: ''மேரியின் பால் அநுக்கிரகிக் கப்பட்ட வார்த்தை - அவரிடமிருந்து வந்த ஆவி'' என்று கூறப்படும் குர்ஆனின் வாக்குமூலம் இயேசு ஒரு ''ஊழி யக்காரர்'' என்ற இயல்போடு ஏற்கமுடியாத ஒன்றாயிருக்கி றது.

குர்ஆனிலுள்ள இவ்வசனத்தை எவரேனும் கவனத் தோடு சிந்திக்கும் வேளையில் அங்கே இரட்டித்த பொருள் உள்ளடங்கியிருப்பதை, அப்போஸ்தலனாகிய பவுல் உறு திப்படுத்துவதிலிருந்து காணலாம். ''மாம்சத்தின்படி தாவீ தின் சந்ததியில் பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதன் என்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெ ழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவ குமாரனுமாயி ருக்கிறார்.'' (ரோமர் 1:1-4)

## 2. கிறிஸ்து ஆதாமின் சாயலாக இருக்கிறார்.

''இதோ! ஈஸா அல்லாஹ்வின் சாயலிலிருப்பதுபோல், ஆதாமின் சாயலாகவும் இருக்கிறார். அவரைத் தூசியிலி ருந்து சிருஷ்டித்து''இருக்கக் கடவாய்'' என்றார் அவர் ''உருவானார்'' என்று குர்ஆனில் எழுதப்பட்டிருக்கிறது. (சூரத் அல் இம்ரான் 59).

அபு ஜஃபார் அல் தபாரியின் புத்தகமான ''ஜாமி அல் பயானில்'' ''ஓ முஹம்மதுமே! புருஷ இனச் சேர்க்கையில்

லாது ஈஸாவை சிருஷ்டித்தது ஆதாமை ''இருப்பாயாக'' என்று சொன்னபோது உண்டானதற்கு சமமே. ஈஸாவை தாயினிடத்தில் புருஷனில்லாது சிருஷ்டித்தது ஆதாமை உண்டாக்கினதிலும் பெரிய அற்புதமல்ல. இதனை நஜ்ரா னின் கிறிஸ்தவர்களுக்கு சொல்வாயாக'' என்று கூறியதாக சொல்லப்பட்டிருக்கிறது.

முகம்மது இபின் சாஅத் தனது தந்தையான இபின் அபாஸ் கூறியதாய் சொல்லப்படுவதானது ''நஜ்ரானிலி ருந்து ஒரு குழுவினர் முகம்மதுவிடம் வந்தார்கள். அவர்கள் மத்தியிலே ஆஸ் சையீதும், அல் அகீபும் இருந்தனர். அவர்கள் முகம்மதுவை நோக்கி! ''எமது நண்பரைக் குறித்து எதற்காக பேசுகிறீர்கள்'' என்றனர். ''அவர் யார்?'' எனக் கேட்டார். ''அவர் ஈஸா. அவரை அல்லாஹ்வின் ஊழியரென்று குற்றம் சுமத்துகிறீர்கள்'' என்றார்கள். அதற்கு ''உண்மையாகவே அவர் அல்லாஹ் வின் ஊழியக்காரரே'' என்று முகம்மது பதிலளித்தார். ''எப்பொழுதாவது அவரைப் பார்த்திருக்கிறீர்களா அல்லது ஈஸாவைப் பற்றி தெரிவிக்கப்பட்டது உண்டோ?'' எனக்கூ றிவிட்டு அவரை விட்டகன்று சென்றார்கள். பின்பு சர்வஞானியும் செவி கொடுப்பவருமாகிய ஆண்டவரால் அனுப்பிவைக்கப்பட்ட காபிரியேல் வந்து ''அவர்கள் உம்மிடம் வரும்போது அவருடைய சிருஷ்டியான ஈஸா வின் சாயல் அல்லாஹ்வினிடத்தில் ஆதாமைப் போன்றதே என்று சொல்லக்கடவது'' என்றார்.

முகம்மது சபின் உசைன், அகமது இபின் அல் முஃபல்லல், அய்த்தி இவர்களிடமிருந்து மற்றொரு கதை கூறுவதாவது : முகம்மது அனுப்பிவைக்கப்பட்ட காலத்தில் நஜ்ரான் மக்கள் அவரைப் பற்றிக் கேள்விப்பட்ட போது

அவர்களுடைய தலைவர்களில் நான்கு பேர் அல் அக்கீபு, அஸ் சயீது, மஸீர்ஜஸுஸ், ஜரீஜீஸ் என்பவர்கள் அவரிடம் வந்து ஈஸாவைப்பற்றி கருதுவது யாதென்று கேட்டார்கள். அவர் அல்லாஹ்வின் ஊழியர். அவருடைய ஆவியும் வார்த்தையுமாக இருக்கிறார் என்றார். ''இல்லை! அவர் அல்லாஹ்வாக இருக்கிறார். அவர் தமது இராச்சியத்திலி ருந்து கீழிறங்கி வந்து மேரிக்குள் பிரவேசித்து பிறப்புற்று தம்மை வெளிப்படுத்தினார்'' என்றார்கள். ''தகப்பன் இல்லாது பிறந்த மனிதனை என்றாவது நீங்கள் பார்த்தது உண்டா?'' எனக்கேட்டார். அவ்வேளையில் தான் அல் லாஹ் முகம்மதுவிடம் பின்வரும் வார்த்தையை அனுப்பி னார் ''ஈஸா அல்லாஹ்வின் கண்களுக்கு ஆதாமைப் போலவே இருக்கிறார்''.

அல் கிசாம், இபின் சுராஜ், இக்ரிமா முதலானவைகளில் ஒரு மூன்றாவது கதை கூறுகிறதாவது : ''நஜ்ரானின் கிறிஸ்த வர்கள் முகம்மதுவிடம் ஒரு தூதுக்குழுவை அனுப்பினர். அவர்கள் மத்தியிலிருந்த அல் அகீப், அஸ் சயீதும் ''ஓ முகம்மதுவே, எங்கள் சிநேகிதரை நீர் எதற்கு நிந்திக்கிறீர்? '' எனக் கேட்டபொழுது, ''உங்கள் சிநேகிதர் யார்?'' என்று வினவினார். அதற்கு அவர்கள் ''மேரியின் மைந்த னான அவரை ஊழியரென்று குற்றஞ் சாட்டுகிறீர்கள்'' என்று சொன்னதற்கு ''நிச்சயமாகவே அவர் அல்லாஹ் வின் வார்த்தையும், ஊழியக்காரரும், மேரியிடம் அனுக்கிர கிக்கப்பட்டவரும், அவரிடமிருந்து வந்த ஆவியுமாவார்'' என்று பதிலளித்தார்.

அவர்கள் அவருடன் சினமடைந்து ''நீர் உண்மையுள்ள வரென்றால் மரித்தோரிலிருந்து ஒருவனை எழுப்பவும், குஷ்டரோகியையும், குருடரையும் குணப்படுத்தவும், களி

மண்ணால் பறவையை செய்து அதனுள் சுவாசித்து உயிருண்டாக்கக் கூடிய ஒரு ஊழியக்காரரைக் காட்டும். இப்படிச் செய்யத்தக்கவர் அல்லாஹ்யில்லையோ?'' என்றனர். க்காபிரியேல் வந்து கூறுமளவும் முகம்மது ஒன்றும் கூறாதிருந்தார். ''ஓ முகம்மதுவே! மேரியின் மைந்தன் ஈஸாவை அல்லாஹ் என்று கூறி தெய்வநிந்தனை செய்கிறார்கள்'' என்று காபிரியேல் சொன்னபோது, முகம்மது ''ஓ காபிரியேலே! ஈஸா யாருக்கு சமானம்?'' என்று கேட்டதற்கு ''ஈஸா ஆதாமைப் போல் இருக்கிறார் என்று காபிரியேல் பதிலளித்தான்.

## பரிசுத்த வேதாகமத்தில் (பைபிள்) கிறிஸ்து.

### 1. கிறிஸ்துவின் இறைத்தன்மை.

கிறிஸ்தவத்தை அறிந்துகொள்ள விரும்புகிறவர்களை அநேக கடின கேள்விகள் இடர்படுத்தலாம். இவைகளில் கிறிஸ்துவின் தெய்வீக நிலையைக் குறிக்கும் கேள்வி மிகச் சிக்கலானதாய் நம்முன் நிற்கிறது. ''இயேசு பாலஸ்தீனாவிலே கன்னிமரியாளிடம் பிறந்து, சிலகாலம் பூமியிலே வாழ்ந்தவர் தேவகுமாரன், இவர் குமாரனாகிய தேவன்'' என்று கூறப்படும் கிறிஸ்தவர்களின் திட நம்பிக்கையைப் பற்றிய கேள்வியே இது.

அநேகருக்கு இந்த நம்பிக்கையை புரிந்துகொள்ள சிரமமாகத் தோன்றலாம். ஆனால் இத்தகைய சிரமங்கள் கிறிஸ்துவமே உண்மையான வேதம் என்பதை மாற்றிவிட முடியாது. ஒரே தேவனில் மூன்று ஆள் தத்துவங்கள் அடங்கியிருக்கிறதென்ற கிறிஸ்தவ நம்பிக்கையில், காலக் கட்டத்திலே ஒருவரையொருவர் முந்திக்கொண்டார் அல்லது ஒருவரில் மற்றவர் பெரிதானவர் என்பதற்கு இட

மில்லை. தேவன் ஒருவரே. மீட்பின் திட்டத்தை விளங்கச் செய்வதற்கே இந்த நாமங்களால் தம்மை வெளிப்படுத்துகி றார்.

கிறிஸ்துவின் தெய்வீகநிலையை கவனிப்பதற்கு முன் னால் கிறிஸ்துவுக்கு தேவன் எவ்வாறு பிதா ஸ்தானத்திலி ருக்கிறார் என்பதைக் காட்டும் வேதவசனங்களை கருத்தில் கொள்வது மிக அவசியம்.

## 2. பிதாவிடமிருந்து வெளிப்பாடுகள்.

லூக்கா புத்தகம் 1:31-32 வசனங்களிலே கன்னிமரியா ளுக்கு தேவதூதன் கூறியவைகளைப் படிக்கின்றோம். "இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக. அவர் பெரியவராயிருப்பார், 'உன்னதமானவருடைய குமாரன் எனப்படுவார்."

இயேசு பிறந்தபோது ஏசாயாவின் தீர்க்கதரிசனம் நிறை வேறியது. "ஆதலால் ஆண்டவர்தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்." (ஏசாயா 7:14; மத்தேயு 1:22-24)

இயேசு தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்ற நேரத்தில் நிகழ்ந்ததை மத்தேயு 3:16-17ம் வசனங்களில் வாசிக்கின் றோம். "இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே; இதோ வானம் அவருக்குத் திறக்கப் பட்டது; தேவ ஆவி புறாவைப் போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார். அன்றியும், வானத்திலிருந்து ஒரு

சத்தம் உண்டாகி: இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது.

மேலும் இயேசு தன்னுடைய சீடர்கள் மூவருடன் எர்மோன் மலையிலிருந்தபோது மோசே, எலியா இருவரோடும் பேசினார். ''அவர் பேசுகையில், இதோ ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள்மேல் நிழலிட்டது. இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று.'' (மத்தேயு 17:5)

### 3. இயேசுவின் உறுதிமொழிகள்

கிறிஸ்து தமது உவமானங்கள் ஒன்றிலே ''நான் மெய்யான திராட்சைச் செடி, என் பிதா திராட்சத் தோட்டக்காரர் '' என்றார். (யோவான் 15-1). அடுத்து அவர் உறுதிப்படுத்தியது ''என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின் செல்லுகிறது. நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன், அவைகள் ஒருக்காலும் கெட்டுப் போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக் கொள்வதுமில்லை. அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லோரிலும் பெரியவராயிருக்கிறார்; அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக் கொள்ள ஒருவனாலும் கூடாது''. (யோவான் 10:27-30). அவர் பிரியாவிடை சொல்லும்போது, ''நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப் படும்படியாக, அதைச் செய்வேன்'' என்றார். (யோவான் 14:12:13)

வனாந்தரத்திலே மோசே அவர்களுக்கு மன்னாவைக் கொடுத்ததாக யூதர்கள் பெருமை பாராட்டியபோது, இயேசு அவர்களை நோக்கி: ''வானத்திலிருந்து வந்த அப்பத்தை மோசே உங்களுக்குக் கொடுக்கவில்லை; என் பிதாவோ வானத்திலிருந்து வந்த மெய்யான அப்பத்தை உங்களுக்குக் கொடுக்கிறார் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்றார். (யோவான் 6:32)

மேலும் அவர் கூறியதாவது: ''மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: பிதாவானவர் செய்ய குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார். அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார். பிதாவானவர் குமாரனிடத்தில் அன்பாயிருந்து, தாம் செய்கிறவைகளையெல்லாம் அவருக்குக் காண்பிக்கிறார்..... பிதாவானவர் மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிறது போல, குமாரனும் தமக்குச் சித்தமானவர்களை உயிர்ப்பிக்கிறார். பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத் தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக் கொடுத்திருக்கிறார். குமாரனைக் கனம் பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம் பண்ணாதவனாயிருக்கிறான்'' என்று பின்னுந் தொடர்ந்து'' மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்றார். (யோவான் 5:19-25)

இதன் பின்பு ஜனங்களுக்கு போதகம் செய்யும் வேளையில், ''பாவஞ் செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமை

யாயிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அடிமையானவன் என்றைக்கும் வீட்டிலே நிலைத்திரான்; குமாரன் என்றைக்கும் நிலைத்திருக்கிறார். ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்'' என்றார். (யோவான் 8:34 - 36)

மற்றொரு உரையாடலின்போது இயேசு கூடியிருந்தவர்களை நோக்கி : என் பிதா இதுவரைக்கும் கிரியை செய்து வருகிறார். நானும் கிரியை செய்து வருகிறேன்'' என்றார். (யோவான் 5:17-18). இதனால் அவர் ஓய்வுநாள் கட்டளையை மீறுகிறதுமல்லாமல் தேவனை தம்முடைய சொந்தப் பிதா என்று சொல்லி தம்மை தேவனுக்கு சமமாக்கினபடியால் யூதர்கள் அவரைக் கொலை செய்யும் படி அதிகமாய் வகை தேடினார்கள்.

வேறொரு நாளில தமது வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களை நோக்கி, ''சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது; பிதாவைத் தவிர வேறொருவனும் குமாரனை அறியான்; குமாரனும், குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனும் தவிர, வேறொருவனும் பிதாவை அறியான். வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்'' என்றார். (மத்தேயு 11:27-28)

ஆழ்ந்த கருத்தமைந்த இந்த உறுதிமொழிக்ளை நாம் கூர்ந்து கவனிக்கும்போது, ஒரு சாதாரண மனிதனோ, அல்லது தேவதூதத் தலைவனோ, வானத்திலிருந்து தேவதூதனோ, தீர்க்கதரிசியோ, அப்போஸ்தலனோ இயேசு

கிறிஸ்துவின் அதியற்புத ஆள் தத்துவத்தில் உள்ளடங்கியி ருக்கும் இரகசியங்களை அறிந்துகொள்ளும் தரமல்ல. கிறிஸ்துவின் தெய்வீக இயல்பு எல்லைகளைக் கடந்து நிற்பது தெள்ளத் தெளிவாய் உணர்த்தப்படுகிறது. ஏனென் றால், பிதாவைத் தவிர வேறெவரும் அறிந்துகொள்வதற்கு இயல்பில்லை. மெய்யாகவே, கிறிஸ்து ஒரு சாதாரண மனிதர் எனப்பட்டால் இத்தகைய சாட்சியங்களை எடுத்து ரைப்பது நேர்மையாகாது. சந்தேகமில்லாமல் இந்த உன னத உறுதிமொழிகள் கிறிஸ்து அநேக கிரியைகளில் நித்தியமாய் பிதாவோடு ஒன்றிணைந்தவராய் ''காணமுடி யாதவர்'' என்று கூறப்பட்டிருக்கும் பிதாவை நமக்கு வெளிப்படுத்துவதைப் போதிக்கின்றன.

கிறிஸ்து உறுதிப்படுத்திய இந்த வெளிப்பாடு அறிந்து கொள்வதற்கு கடினமாகவும் மறைபொருளாகவும் தோன்ற லாம். ஆனால் தொடர்ச்சியுள்ள இவ்வசனங்களை நமக்கு தெளிவுபடுத்துவதற்கு இந்த சுவிசேஷத்தை எழுத பரிசுத்த ஆவியானவர் யோவானுக்கு அனுக்கிரகஞ் செய்தார். இத்தகைய வசனங்களில் மிகத் தெளிவானதாய் ''தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலி ருக்கிற ஒரே பேறான குமாரனே அவரை வெளிப்படுத்தி னார்'' என்று யோவான் 1:16 காணப்படுகிறது.

இந்த வசனம் எந்த மனிதனோ, தேவதூதனோ ஒருக்கா லும் தேவனைக் கண்டதில்லை யென்றும், அவருடைய அத்யந்த தெய்வீகத்தை முற்றுமாக அறிந்து கொள்ளும் அறிவாற்றல் பயனாகத் தெரிந்து கொண்டவரும் இல்லை என்பதை நமக்கு உறுதிப்படுத்துகிறது. வெளிப்படுத்தப் பட்டவையாவும் அனுக்கிரகத்தால் அல்லது தரிசனங்க ளால் வெளிவந்தவையாகும். மோசேயும் மற்ற தீர்க்கதரிசி

களும் தேவனை ஒருக்காலும் கண்டதில்லை. அனுக்கிரக வாயிலாக அவர்கள் வெளிப்பாடுகளைப் பெற்றுக் கொண்டார்கள். இதற்கு தேவதத்துவத்தின் இரண்டாவதாகிய இயேசு கிறிஸ்து மூலாதாரமாகவும் ஆதர்சமாகவும் இருந்தார். தேவகுமாரன்-திரித்துவத்தில் ஒன்றானவர் மாத்திரமே தமது இசைவின்படி தேவசித்தத்தையும் காரணங்களையும் அறிவார். ஏனெனில் ''மாம்சத்தில் தோன்றிய'' தேவனாக இருக்கிறார். (1 தீமோத்தேயு 3:16).

''நானும் பிதாவும் ஒன்றே. என்னைக் காண்கிறவன் பிதாவைக் காண்கிறான். பிதா என்னிலே இருக்கிறார். நான் பிதாவில் இருக்கிறேன்'' என்று இயேசு தம்முடைய சீஷர்களுக்குச் சொன்னபொழுது தனக்கும் பிதாவுக்குமிடையேயுள்ள ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்தினார். அதாவது, மகிமை - ஸ்தானம் - ஆற்றலின் வலிமை - சித்தம் - காரிய காரணங்கள் என்பவைகளிலே பிதாவும் அவரும் ஒன்றென்பதே சாராம்சம்.

**4. அப்போஸ்தலர்களின் சாட்சியம்.**

1. ''நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்'' என்று இயேசு கேட்டபோது சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக: ''நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து'' என்றான். (மத்தேயு 16:15-16)

2. யோவான் சொன்னது: ''நாம் சத்தியமுள்ளவரை அறிந்து கொள்வதற்கு தேவனுடைய குமாரன் வந்து நமக்குப் புத்தியைத் தந்திருக்கிறாரென்றும் அறிவோம். அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து என்னப்பட்ட சத்தியமுள்ளவருக்குள்ளும் இருக்கிறோம்; இவரே மெய்

யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார்.'' (யோவான் 5-20).

3. பவுல் கூறியது: ''நாம் புத்திர சுவீகாரத்தையடையும்படி நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக் கொள்வதற்காக, காலம் நிறைவேறின போது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப் பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார்.'' (கலாத்தியர் 4:4-5)

## 5. தீர்க்கதரிசிகளின் சாட்சியம்

ஞானவானாகிய சாலொமோனின் வார்த்தைகள்: ''தண்ணீர்களை வஸ்திரத்திலே கட்டினவர் யார்? பூமியின் எல்லைகளையெல்லாம் ஸ்தாபித்தவர் யார்? அவருடைய நாமம் என்ன? தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள்; தம்மை அண்டிக் கொள்கிறவர்களுக்கு அவர் கேடகமானவர்.'' (நீதிமொழிகள் 30:4-5)

**தானியேலின் வார்த்தைகள்:**

''இராத் தரிசனங்களிலே நான் பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ, மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்; அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார். சகல ஜனங்களும், ஜாதியாரும், பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்கு கர்த்தத்துவமும், மகிமையும், ராஜரிகமும் கொடுக்கப்பட்டது; அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும், அவருடைய ராஜ்யம் அழியாதமாயிருக்கும்.'' (தானியேல் 7:13-14)

ஞானஸ்நானகன் யோவான் கூறுவது :

''நான் கிறிஸ்துவல்ல, அவருக்கு முன்னாக அனுப்பப் பட்டவன் என்று சொன்னதற்கு நீங்களே சாட்சிகள்.... உன்னதத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலான வர்....தாம் கண்டதையும் கேட்டதை.ும் சாட்சியாகச் சொல்லுகிறார்; அவருடைய சாட்சியை ஒருவனும் ஏற்றுக் கொள்ளுகிறதில்லை. பிதாவானவர் குமாரனில் அன்பாயி ருந்து எல்லாவற்றையும் அவர் கையில் ஒப்புக் கொடுத்தி ருக்கிறார். குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித் திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசு வாசியதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்.'' (யோவான் 3:28-36)

இந்த் சாட்சியங்களிலிருந்து கிறிஸ்துவானவர் கர்த்தத்து வத்தில் ''இரண்டாம் ஆளாக'' இருப்பதினிமித்தம் ''தேவ குமாரன்'' என்றழைக்கப்படுகிறார் என்பதை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். இதனால் ''குமாரன்'', ''பிதா'' என்ற வார்த்தைகள் கிறிஸ்தவ நம்பிக்கையின்படி ''பிதா தத்துவம்'' - ''புத்திர ஸ்தானம்'' என்பவைகளைக் குறிப்பிடுகிறதேயல்லாமல் மனித உலகின் கருத்திற்கேற்ற சம்பந்தம் எதுவுமில்லை என்பதை அறிந்து கொள்ளவேண் டும்.

''காணமுடியாதவரின் சாயல்'' - ''வார்த்தையானவர்'', அவருடைய மகிமையின் பிரகாசம்'', ''அவருடைய நேர்முக உருவமைப்பு'', அவருடைய புகழ், ''இம்மானு வேல்'' (தேவன் நம்மோடு இருக்கிறார்) என்று பரிசுத்த வேதாகமத்திலே குமாரன் அழைக்கப்படுகிறார். இந்தச் சிறப்பு நாமங்களெல்லாம் ''குமாரன்'' என்ற சொல்லுக்கு விளக்கம் தருகின்றன. மனதிலிருப்பதை வார்த்தை வெளிப்

படுத்துவதுபோல் ''தெய்வீக வார்த்தை''யானது தேவனை யும் அவர் மனுக்குலத்தின்மீது வைத்துள்ள சிந்தையையும் வெளிப்படுத்துகிறது. ஒரு சித்திரமாகப்பட்டது ஒரு சாயலை எவ்வாறு பிரதிபலித்துக் காட்டுகிறதோ அது போல் இயேசு தேவனைச் சித்திரிக்கின்றார். சூரியனின் ஒளியானது அதன் மகிமையை வெளிப்படுத்துவதுபோ லும், அது சூரியனில் உள்ளடங்கிய அங்கமாய் இருப்பது போலும், தேவமகத்துவத்தின் சுடரொளியாகவும் தெய் வாம்சத்தின் ஆன்மீக மகிமையை பிரதிபலிப்பவராகவும் இருக்கிறார் இயேசு. ஆனால், அவர் இவ்வுலகத்திலிருந்த போது நாம் தேவனைக் காணும்படியும், கேட்கும்படியும், தமது அன்பின் பெருமிதத்தால் இம்மகோன்னத இயல்புக ளையெல்லாம் மாமிச அங்கியினுள் திரையிட்டிருந்தார்.

கூறப்பட்டவைகளிலிருந்து தெய்வாம்சத்தை வெளிப்ப டுத்திய தேவப்பிரதிநிதியாகக் குமாரன் விளங்கினார் என்றறிகிறோம். மனித உணர்ச்சிக்கு மிகுந்த உணர்வூட் டும் வழியிலே தேவனை வெளிப்படுத்தும் காரணாதிகாரி யாகவும் இருந்தார். இதுபோலவே தேவ இயல்பிலே மூன்றாமவரான பரிசுத்த ஆவியானவர் மனிதனின் உள்ளு ணர்வுக்கு மத்தியஸ்தராய் இருக்கிறார். தெய்வீக வெளிப் பாடுகளின் மறைபொருளை அறிந்து கொள்ளும்படி நம்மை வழிநடத்தும் பரிசுத்த ஆவியானவரின் செயல்பாட் டைத் தவிர வெளிப்பாட்டின் தத்துவத்தை நாம் கிரகித்துக் கொள்ள முடியாது. இந்த உண்மையின் உள்ளுணர்வைப் பெற்றதினால் ''பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவைக் கர்த்தரென்று ஒருவனும் சொல்லக்கூடாது'' என்று பவுல் சொன்னான். (1. கொரிந்தியர் 12:3)

''குமாரன்'' என்ற சொல் சிலருடைய மனதை குழப்பிவி

டுகிறது. ஏனென்றால், ''பிதா'' என்ற வார்த்தையோடு அதற்கு இருக்கும் உறவுமுறைதான் சடுதியில் சிந்தனையில் உதிக்கிறது. காலக்கட்டத்திலே பிதா குமாரனுக்கு முற்பட்டவராகிவிடுகிறார். ஆதலால் இவர்கள் ஸ்தானத்திலும் வேறுபாடிருக்கவேண்டும். ஆனால் ''குமாரன்'' என்ற சொல் இங்கே எத்தகைய ஏற்றத்தாழ்வையோ, அவர்களிடையே முதலிடத்தையோ குறிப்பிடவில்லை என்பதை உறுதிப்படுத்துகிறோம். ஏனென்றால் ''குமாரன்'' ஒருவர் இல்லாது தேவனை ''பிதா'' என்று அழைக்கமுடியாது. பிதா என்ற வார்த்தையை உபயோகிக்கவும் முடியாது. ''குமாரன்'' என்ற சொல்லுக்கு ''பிதா'' என்ற சொல்லும் தேவைப்படுகிறது.

தேவனானவர் அநாதிமுதலாய் ''பிதா'' என்னும் பட்டம் பெற்றிருந்தாரென்று வேதாகமத்திலிருந்து முடிவு செய்யலாம். ஆகவே அநாதி காலத்திலிருந்தே ஒரு ''குமாரன்'' நிலைபெற்றிருந்த அவசியத்தை உணர்த்துகிறது. ''சமத்துவம்'' என்னும் பொருளைக் குறித்து அநேகமானோர் மத்தியிலே குழப்பமும் மனவேற்றுமையும் நிலவ ஆரம்பித்திருக்கலாம். மேலும் பிதா குமாரனுக்கு முற்பட்டிருக்க வேண்டுமென்ற சிந்தனையும், இருவருக்கும் மத்தியிலே ஒரு இடைவெளிக் காலம் இருக்கவேண்டுமென்ற கருத்தும் நிலவியதை நாம் காணக்கூடியதாயிருக்கிறது. ஒரு குமாரன் அடையும்வரையில் ஒருவர் தந்தையாகிவிட முடியாதென்று கூறுவதே இதனை மிகத் திருத்தமாகச் சொல்லுவதாயிருக்கும். தேவன்-அவருடைய குமாரனாகிய இயேசு சம்பந்தப்பட்ட வரையில் இங்கே காலவேறுபாடு' என்பது கற்பனையும் மாய்கையுமாகிறது. உலக மனிதர் கருதுவது போல் தேவன் பிறப்புக்குட்பட்டவர் அல்லாது சந்தானவி

ருத்தி செய்பவர் அல்ல. இக் கருத்தினின்றும் நாம் விடுபட்டு நின்று பகுத்தறிவோடு சிந்திக்க வேண்டும்.

''சத்தியம்'' அல்லது அதன் சாயலைக் குறிக்கும்படி ''சத்தியத்தின் குமாரன்'' அல்லது ''ஒளியின் குமாரன்'' என்னும் பதங்களை உபயோகிக்கவேண்டும். இவ்வழியாகத் தான் கர்த்தத்துவத்திலே பிதாவுக்கும் குமாரனுக்கும் மத்தியில் காணப்படும் முழுமையான அன்னியோன்னியத்தின் காரணமாய் இயேசுவை ''தேவகுமாரன்'' என்றழைக்கப்பட்டிருக்கிறது. தேவதத்துவத்தை பரிபூரணமாய், நித்திய நித்தியமாய் மனித இனத்திற்கு வெளிப்படுத்துபவராய் இருப்பதினால் இவ்வாறு அழைக்கப்படுகிறார்.

''பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்கு திருவு ளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார். இவரை சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவர்ரக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்.'' (எபிரெயர் 1:1-2)

அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார். அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.'' (யோவான் 1:14) இங்கே தேவ மகிமையை இயேசு வெளிப்படுத்தியதை உணர்கின்றோம்.

## கிறிஸ்துவின் தெய்வீகமும் மனுஷீகமும்

''நான் யாரென்று ஜனங்கள் சொல்லுகிறார்கள்?''

இருபது நூற்றாண்டுகளுக்கு முன்பு இக்கேள்வியை இயேசு தமது சீஷர்களிடம் கேட்டார். அன்று முதல் இந்நாள் வரையிலும் தொடர்ந்து கேட்கப்படும் மிகப் பிரபலமான கேள்வியாக இருந்து வருகிறது. ஒருவேளை சரித்திரத்தில் எல்லாக் காலக்கட்டங்களிலும் கேட்கப்பட்ட பெரிதான கேள்வி இதுவாயிருக்கலாம். ஏனென்றால் மனிதசமுதாயம் முழுமைக்கும் மிகுந்த இடர்பாடும் முக்கியத்துவமும் நிறைந்த சர்ச்சை இதனுள் அடங்கியிருக்கிறது. காலம் நிலைபெறுமளவும் இக்கேள்வி நிலைத்திருக்கும். பலதிறப்பட்ட நம்பிக்கைகள், மனோபாவங்கள், நாகரிகங்கள், பண்பாடுகள் என்பவைகளுக்கிடையே தீர்வுதரும் பிரிவினைக் கோடாயிருக்கிறது. இக்கேள்விக்கு தீர்ப்புதரும் ஒரு நிறைவான விடையில்தான் ஒவ்வொரு மனிதனுடைய முடிவும் காத்திருக்கிறது.

கிறிஸ்தவம் அதன் கர்த்தராகிய கிறிஸ்துவைப் பற்றி சொல்லப்படுகிறவைக் குறித்து அச்சமோ கலக்கமோ கொள்ளாதிருப்பது அதனுடைய சிறப்பியல்புகளில் ஒன்றாகும். பாதாளத்தின் திறவுகள் மேற்கொள்ளாதபடிக்கு அவர் உன்னத அமைப்பைக் கட்டியெழுப்பி அதை உறுதியாக்கினார். இறுதிநிலை வரைக்கும் சிந்தனைச் சுதந்திரத்தை கிறிஸ்துவானவரே ஊக்குவித்தார். எந்த ஒரு மதக்கோட்பாட்டையும் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கட்டளையிட்டதாகவும் கட்டாயப்படுத்தியதாகவும் ஒருபோதும் தோன்றியதில்லை. அன்றியும் அவருடைய சித்தத்திற்கு மாறானதைச் செய்யக் கூடாதென்று ஆணையிட்டாரென்பதும் இல்லை.

"கிறிஸ்தவம் அதன் நீண்ட சரித்திரகாலம் முழுதும், கிறிஸ்துவின் பேரில் மனிதன் விசுவாசம் வைப்பதை

ஈட்டிமுனையின் வாயிலாக ஒருபோதும் ஏற்றுக்கொள்ள வில்லை. மனம் இருதயம் இரண்டினையும் ஒரே விதத்தி லாட்சி செய்யும் பூரண உத்திரவாதத்தின் அடிப்படையில மைந்த விசுவாசத்தையே ஏற்றிருக்கிறது. இக்கொள்கை நம் முன்னாலிருக்க, கட்டாயத்தின் பேரிலோ, ஏதோ வொரு கருத்தை முன்னதாகவே அங்கீகரித்தோ,அதன்பே ரில் மதவைராக்யம் கொண்டோ, வேறொரு நோக்கத்தைக் கேட்பதனால் சினந்தோ, கிறிஸ்துவின் தெய்வீகத்திலே மனிதனாகப்பட்டவன் நம்பிக்கை வைக்க நாம் விரும்ப வில்லை. இதற்குப் பதிலாக இறுதியில் சத்தியத்தைக் கண்டடையுமாறு கிறிஸ்துவைக் குறித்து நாம் விவாதிக்கக் கூடிய பலதிறப்பட்ட சகல கருத்துக்களையும், அவற்றின் வலிமை பலவீனங்களையும் நாம் முன்னால் வைக்கின் றோம்'' என்று கார்னிகே சிம்சன் கூறியுள்ளார்.

## பூரண தெய்வீகம்

அந்நாட்களில் பெரும்பான்மை கிறிஸ்தவர்கள் அவதா ரக் கருத்தை மறுத்துக் கூறிய துஷ்டதெய்வ வழிபாட்டுக்கா ரர்களின் சித்தாந்தம் விசித்திரமானதாயிருக்கிறது. கிறிஸ்து வின் தெய்வீகத்தையேற்றுக்கொண்ட இவர்கள் அவரு டைய மனுஷீகத்தை மறுத்தனர். கிறிஸ்து மனிதனைப் போல் தோற்றமளித்தாரென்றாலும் அவருக்கு உண்மை யில் மனித உடல் இருக்கவில்லை ஆகையால் அவர் பிறப்படையவில்லை., பாடுகள் படவில்லை, உண்மையில் மரிக்கவுமில்லை என்றனர். ஏனென்றால் அவர் சரீரம் மனிதன் காணும்படி பூத இயல்பு அல்லது மாயத்தோற்ற மாய் இருந்ததென்றனர். அவர்கள் மத்தியிலொரு வகுப்பி னர் கிறிஸ்துவின் சரீரம் மற்ற மனிதர்கள் உடலைப்போல் வெளிப்படையான ஸ்தூலமாக இருக்கவில்லை, ஆனால்

அது ஒரு சிறப்புற்ற தெய்வீகப் பொருளாயிருந்தது என்று சொன்னார்கள். தேவனால் அருளப்பட்ட அனுக்கிரக வார்த்தையான சத்திய வெளிப்பாட்டிலே இக்கருத்துக்கள் தம்மைக் காக்குந்தரமுடையவையல்ல.

''பிரியமானவர்களே! உலகத்தில் அநேக கள்ளத் தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள். தேவ ஆவியை நீங்கள் எதினாலே அறியலாமென்றால்: மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது. மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல; வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்தி கிறிஸ்துவினுடைய ஆவி அதுவே, அது இப்பொழுதும் உலகத்தில் இருக்கிறது''. (1.யோவான் 4:1-3)

**மனுஷீகம் மாத்திரமே.**

இந்தக் கருத்து முந்தியதைவிட வியப்பில் குறைந்ததல்ல. இப்பிரிவைப் பின்பற்றுபவர்கள் கிறிஸ்துவின் மனிதஇயல்பை ஆதரித்து அவருடைய தெய்வீகத்தை நிராகரிக்கின்றனர். கிறிஸ்து ஒரு பூரணமனிதர், அதாவது உலகில் மிக உன்னத மனிதராகவும், மாபெருந்தலைவராகவும், அதிசயமும் கீர்த்தியுமிகுந்த நாயனாகவும், ஜீவனைத் தந்த தியாகியாகவும் கனப்படுத்தப்படவேண்டும் என்று கருதுகிறார்கள் இத்தகைய பிரிவைச் சேர்ந்தவர்கள்.

இத்தகைய குதர்க்கவாதிகள் கருத்தை ஆட்சேபித்து

தெளிவான பதிலளிக்க வேண்டுமானால் டாக்டர் கோனார்ட்டின் அறிக்கையை முன்வைக்க வேண்டும். ''இவ்விதத் தீர்மானத்திற்கு வந்திருப்பவர்கள் முற்றிலும் தவறுக்குட்பட்டிருக்கிறார்கள். கிறிஸ்து தம்மைக் குறித்து உறுதிப்படுத்தியதை ஏற்றுக் கொள்ள மறுத்தவர்கள் அவர் ஒரு தலைவர் அல்லது நாயகனென்று எவ்வாறு ஏற்றுக் கொள்ளமுடியும்?'' இந்த வழக்கின்படி கிறிஸது இரண்டில் ஏதேனும் ஒன்றாக இருக்கவேண்டும். ஒன்று அவர் மிகப் பெரிய ஏமாற்றுக்காரர் அல்லது ஏமாற்றப்பட்டவராக இருத்தல் வேண்டும். எனவே பரிதாபப்படவேண்டியதாயி ருக்கிறது. அவ்வாறிருந்தால் அவரை புகழுறும் நிலையில் வைப்பது அறிவுடைமையாகாது. மெய்யாக அவர் தமக்கு உரிமையற்ற ராஜரீகத்தையும் வணங்குதலையும் கேட்டிருந் தால் அவரைப் பணிந்துகொள்ளவும் மகிமைப்படுத்தவும் தகுதிகளைக் காண்பது கடினம்.

### 3. கிறிஸ்துவில் தெய்வீகமும் மனுஷீகமும் ஐக்கப்பாடு டைமை.

இந்த உத்தம உபதேசம் சபையில் எக்காலத்திலும் நிலைபெற்று, வெற்றி, அதிகாரம், சர்வவியாபகம் என்ப வைகளுக்கு அநாதி தீர்மானமாக நிலவி, எல்லா தலைமு றைகளிலும் காலக் கட்டங்களிலும் உலகம் முழுவதும் சபையானது எடுத்துரைக்கும் அறிக்கை தொடர்ந்து வருகி றது. பூரண தேவன்-பூரண மனிதன் எனப்படும் இரண்டு பரிபூரண இயல்புகள் கிறிஸ்துவுக்கு உண்டென்பதே இக்க ருத்தின் கருவூலம். கருத்தின் சாரமும் அதுவே.

கிறிஸ்துவின் தெய்வீகத்தில் சபைகளும் மனிதரும் ஒருங்கே நம்பிக்கை வைப்பதற்கு ஏற்பட்டுள்ள ஆதர்சங்

கள் காரணங்கள் என்ன? ஆதர்சங்களும் திடநம்பிக்கையும் முன்னேற்றமடைய இயன்று மனித உள்ளத்தில் திடமாக வேரூன்றி ஒரு உன்னதக் கோட்பாடாகும் நிலைபெற்று அதற்காக மக்கள் உயிர்வாழ்ந்தும், உயிர்த்தியாகமும் செய்தது எப்படி? மக்களும் அவர்கள் மத்தியிலே எல்லாத் தலைமுறைகளிலும் காலக்கட்டங்களிலும் தோன்றிய பேர றிவு சிந்தனையாளர்கள், மேதைகள் அவருடைய தெய்வீக அமைப்பிலே எவ்வாறு நம்பிக்கை வைத்தனர்? அவர்கள் சார்ந்திருக்கும் மறுக்கயியலாத இறுதி ஆதாரங்கள் என்ன? என்று கேட்கப்படலாம். நாம் நம்பிக்கை வைப்பதற்கு முன்பாக இக்கேள்விகளுக்கு பதிலளிக்கப்படவேண்டும். அல்லது கிறிஸ்துவின் தெய்வாம்சத்திலும் அவருடைய அவதாரத்திலும் நமது நம்பிக்கையின் உண்மையை மக்க ளுக்கு உறுதிப்படுத்த வேண்டும். இக்காரியத்தில் திருப்திய ளிக்கக் கூடிய முடிவான நிரூபணங்களை முன்வைக்க வேண்டிய அவசியமேற்படுகிறது.

## 1. தீர்க்கதரிசனங்களின் நிரூபணம்

4000 ஆண்டுகள் காலமாக சரித்திரம் ஆரம்பமாவதிலி ருந்து பழைய ஏற்பாட்டின் கடைசிப் புத்தகம் வரைக்கும் தொடர்ச்சியான தீர்க்கதரிசன வசனங்கள் நீடித்துள்ளன. கிறிஸ்தவர்கள் திர்க்கதரிசன உரைகளை திரித்தும் மாற்றி யும் முறைகேடு செய்வதற்கு சாத்தியமில்லை. ஏனென்றால் தேவனால் அனுக்கிரகிக்கப்பட்ட இச்சுருள்கள் கிறிஸ்துவத் திற்கு முற்பட்ட காலத்திலே எழுதப்பட்டவையாகும். இதன் இறுதிப்பாகம் கிறிஸ்து வருகைக்கு ஏறத்தாள 400 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டிருக்கிறது. ஒரு தெய்வீ கமானவர் உலக இரட்சகராய் மனித உருவில் வானத்திலி ருந்து வருவார் என்பதே இந்த தீர்க்கதரிசனங்களின்

ஒன்றுகூடிய கருத்து. இவர் பெண்ணிடம் பிறந்து, யூதாவின் கோத்திரத்திலிருந்தும், தாவீதின் வம்சத்திலிருந்தும் ஆபிரகாமின் வித்தாக இருப்பார். ஒருவிதக் குற்றமும் மாசும் இல்லாதவராய் ஒரு கன்னியிடம் பிறப்பார். அப்பிறப்பிடம் தாவீதின் நகரமான பெத்லகேமாயிருக்கும். அதே வேளையில் அவர் வல்லமையானவரும் நித்திய தேவனுமாயிருப்பார். தெய்வீகம் மனுஷீகத்துடன் ஒன்றுகூடுதலால் அவதாரமில்லாது வேறு எவ்விதத்திலும் நிகழ்வதற்கில்லை. இதற்கு உறுதியான உத்திரவாதமளிக்கும் மூலவாக்கியங்களோ அநேகம். தொடர்ந்து வரக்கூடியவைகள் படிகம்போல் அவைகளில் மிகத் தேர்ந்த தெளிவுகளாகும்.

**ஏசாயா தீர்க்கதரிசனம்**

1. ''நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனை கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு என்னப்படும்.'' (ஏசாயா 9:6)

2. ''ஆதலால் ஆண்டவர்தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்.'' (ஏசாயா 7:14). மத்தேயு 1:23ல் ''இம்மானுவேல்'' என்பதற்கு தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்'' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**சங்கீதம்**

3. ''கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி: நான் உம்முடைய

சத்துருக்களை உமக்குப் பாதப்படியாக்கிப் போடும் வரைக்கும், நீர் என்னுடைய வலது பாரிசத்தில் உட்காரும் என்றார்'' (சங்கீதம் 110:1). - இந்த வசனம் மிகச் சிறப்புள்ளதாயிருக்கிறது. பிதா குமாரன் இருவர் மத்தியிலே நிகழ்ந்த இந்த உரையை தேவன்தாமே பேசினார் என்று நாம் நம்புவதைத் தவிர்த்து நம்மால் வேறொரு விளக்கம் தெரிந்துகொள்வதற்கு வழியில்லை.

4. மீகா

''எப்பிராத்தா எனப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப் போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது.'' (மீகா 5:2)

## 2. கிறிஸ்து கூறியவைகளிலிருந்து நிரூபணங்கள்.

பிரபல போதகரும் தேவமனிதனுமான ஸ்பர்ஜன் பின்வருமாறு சொல்கிறார். ''கிறிஸ்து உலக சரித்திர மையத்தின் உன்னத கருவூலமாய்த் திகழ்கின்றார். சரித்திரக் கோடுகளெல்லாம் அவரிடத்தில் ஒன்று கூடுகின்றன. எல்லா முன்னமைப்புகளின் முடிவுகள் யாவும் அவர் சித்தப்படியே கடந்து செல்கின்றன. அவர் மூலமே வாழ்வின் மிகப் பிரதான குறிக்கோள்கள் நிறைவேறுகிறது ''. இவ்வாக்கியங்களோடு அவருடைய கிரியைகளின் அதிசயங்களும், அற்புதங்களும் அவர் திருவாய்மொழிந்த சொற்களின் ஒவ்வொரு அட்சரத்தின் உண்மைக்கு சாட்சி கூறுகின்றன என்று சொல்ல வேண்டும். அவருடைய சொற்களில் மறுத்துக்கூற முடியாத சான்றுகளும் இறுதி

யான நிருபணங்களும் இருப்பதை அறிந்துகொள்ளவேண்டும். தேவனுக்கோ அல்லது வேறெவருக்கோ உரிமைப்படுத்தவியலாத இருபதுக்குக் குறைவில்லாத சத்தியங்களை மேசியா தம்மிடம் வைத்தார். அவைகளில் மிகப் பிரதானமானவை பின்வருமாறு:

### (1) அவருடைய நித்தியத்துவம்.

யூதமதத் தலைவர்களை நோக்கி அவர் சொன்ன வார்த்தைகள் அவர் கூறியவைகளிலெல்லாம் மிகச் சிறந்ததாயிருக்கிறது. ''ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்றார். (யோவான் 8:58). ''நான் இருக்கிறேன்'' என்ற வார்த்தைகள் மோசே தன்னிடம் கேட்டபோது தேவனானவர் கூறியதும் இதே வார்த்தைகளாயிருக்கிறது. ''அப்பொழுது மோசே தேவனை நோக்கி: ''நான் இஸ்ரவேல் புத்திரரிடத்தில் போய், உங்கள் பிதாக்களுடைய தேவன் உங்களிடத்தில் என்னை அனுப்பினார் என்று அவர்களுக்குச் சொல்லும் போது, அவருடைய நாமம் என்ன என்று அவர்கள் என்னிடத்தில் கேட்டால், நான் அவர்களிடத்தில் என்ன சொல்லுவேன்''என்றான்.

அதற்குத் தேவன்: ''இருக்கிறவராக இருக்கிறேன். இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்வாயாக'' என்றார். (யாத் 3:13-14). ஓரேப் மலையில் எரியும் முட்செடியில் தோன்றிய அதே தேவன் தம்மை வெளிப்படுத்துகிறார் என்பதனை இந்த வசனங்கள் நமக்குப் போதிக்கின்றன.

இயேசு தமது மன்றாட்டு ஜெபத்திலே ''பிதாவே, உலகம் உண்டானதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்'' என்றாரென்பது யோவான் 17:5ல் எழுதப்பட்டிருக்கிறது. மேலும் யோவான் 17:24ம் வசனத்தில் ''பிதாவே, உலகத்தோற்றத் துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால், நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனே கூட இருக்க விரும்புகி றேன்'' என்று கூறியதைக் காண்கிறோம்.

அநாதிகாலமாய் இயேசு இருந்ததை இவ்வசனங்கள் உறுதிப்படுத்தி அவ்வாறில்லை என்பவர்கள் நாவுகளை அமைதிப்படுத்துகிறது.

## (2) பரத்திலிருந்து அவர் வருகை.

யூதர்களிடம் பேசியபோது: ''நீங்கள் தாழ்விலிருந்து உண்டானவர்கள், நான் உயர்விலிருந்து உண்டானவன். நீங்கள் இந்த உலகத்திலிருந்து உண்டானவர்கள், நான் இந்த உலகத்திலிருந்து உண்டானவனல்ல'' என்று இயேசு சொன்னார். (யோவான் 8:23).

மதத்தலைவனும் பரிசேயனுமாகிய நிக்கொதேமுவை இயேசு நோக்கி,'' பரலோகத்திலிருந்து இறங்கினவரும், பரலோகத்திலிருக்கிறவருமான மனுஷகுமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை'' என்றார். (யோவான் 3:13). மேலும், ''நான் அல்பாவும் ஓமெகா வும், 'ஆதியும் அந்தமும், முந்தினவரும் பிந்தினவருமாயி

ருக்கிறேன்'' என்று சொல்லப்பட்டிருப்பதை வாசிக்கிறோம். (வெளி 22:13).

இயேசு இப்பூமியிலிருந்தபோது அவர் பரலோகத்திலிருந்து வந்தமையை மாத்திரங் கூறவில்லை, பரலோகத்தில் இருப்பதையும் சொன்னார்.

**(3). எல்லாக் காலங்களிலும் இடங்களிலும் அவருடைய சர்வவியாபகம்.**

''இரண்டு பேராவது, மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறீர்களோ, அங்கே உங்கள் நடுவிலே இருக்கிறேன்'' என்றார். (மத்தேயு 19:20). உயிர்த்தெழுந்த பின்பு இயேசு தமது சீஷர்களை நோக்கி,'' ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்'' என்று சொன்னார். (மத்தேயு 28: 19-20).

**(4) அவருடைய எல்லையற்ற வல்லமை.**

பத்மு என்னுந் தீவிலே யோவானுக்கு தரிசனமாகி'' இருக்கிறவரும், இருந்தவரும், வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தர்: நான் அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன்'' என்றார்.

**3. அவருடைய தெய்வீகக் கிரியைகள். நாமங்களின் நிரூபணம்.**

**(1) சிருஷ்டிப்பின் வல்லமை.**

''சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டான தொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது''. (யோவான் 1:3-4).

''ஏனென்றால், அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப் பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும், பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமாகிய சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது''. (கொலோசெயர் 1:16).

''இயேசு கிறிஸ்துவைக் கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதி காலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு...'' (எபேசியர் 3:11).

**(2) மரித்தோரை உயிரெழுப்புவதற்கு அவருடைய அதிகாரம்.**

''அவர் ஊரின் வாசலுக்குச் சமீபித்தபோது, மரித்துப் போன ஒருவனை அடக்கம் பண்ணும்படி கொண்டுவந்தார்கள்; அவன் தன் தாய்க்கு ஒரே மகனாயிருந்தான். அவளோ கைம்பெண்ணாயிருந்தாள்; ஊரில் வெகு ஜனங்கள் அவளுடனே கூட வந்தார்கள். கர்த்தர் அவளைப்

பார்த்து, அவள் மேல் மனதுருகி அழாதே என்று சொல்லி சமீபமாக வந்து பாடையைத் தொட்டார்; அதைச் சுமந்தவர்கள் நின்றார்கள்; அப்பொழுது அவர் ''வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன்'' என்றார். மரித்தவன் எழுந்து உட்கார்ந்து, பேசத்தொடங்கினான். அவனை அவன் தாயிடத்தில் ஒப்புவித்தார்''. (லூக்கா 7:12-15).

''இவைகளைச் சொன்ன பின்பு: ''லாசருவே, வெளியே வா'' என்று உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார். அப்பொழுது மரித்தவன் வெளியே வந்தான். அவன் கால்களும் கைகளும் பிரேதச் சீலைகளினால் கட்டப்பட்டிருந்தது. அவன் முகமும் சீலையால் சுற்றப்பட்டிருந்தது. இயேசு அவர்களை நோக்கி இவனைக் கட்டவிழ்த்து விடுங்கள்'' என்றார். (யோவான் 11:43-44).

**(3) உலகமுழுவதற்கும் அவர் நீதிபதியாய் இருப்பார்:**

''அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமை பொருந்தினவராய் சகல பரிசுத்த தூதரோடு வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார். அப்பொழுது, சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும், வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறது போல அவர்களை அவர் பிரித்து நிறுத்துவார்''. (மத்தேயு 25:31-32).

''பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்பு செய்யாமல், நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்''. (யோவான் 5:22).

(4) தொழுதுகொள்ள மகிமையுள்ளவர்.

''பிதாவை கனம் பண்ணுகிறது போல எல்லாரும் குமாரனையும் கனம் பண்ணும்படிக்கு....'' (யோவான் 5:23).

பிதாவோடு குமாரனையும் பணிந்து கொள்வது பழைய ஏற்பாட்டின் காலத்திலிருந்த தேவமனிதர்களுக்கு தெரிந்திருந்தது. தாவீது கூறுகிறான்: ''பயத்துடனே கர்த்தரைச் சேவியுங்கள், நடுக்கத்துடனே களிகூருங்கள். குமாரன் கோபங்கொள்ளாமலும் நீங்கள் வழியிலே அழியாமலும் இருக்கும்படிக்கு அவரை முத்தஞ் செய்யுங்கள்''. (சங்கீதம் 2:11-12).

(5) அவர் பாவங்களை மன்னித்தருள்கிறார்.

பாவங்களை மன்னிப்பதற்கு பிதாவாகிய தேவன் ஒருவருக்கு மாத்திரமே அதிகாரம் உண்டென்று யூதர்கள் எப்பொழுதும் நம்பிக்கை வைத்திருந்தார்கள். இயேசு அற்புதங்களை நிகழ்த்தி வரும்போது ஒரு சமயம் திமிர்வாதக்காரனை நோக்கி ''மகனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது'' என்று அவர் சொன்ன வேளையில் அவ்விடத்திலிருந்த யூதர்கள் ஆச்சரியப்பட்டார்கள். அவர்கள் சிந்தனையில் கலக்கமடைந்திருப்பதை தம்முடைய ஆவியில் அறிந்து அவர்களை நோக்கி: ''நீங்கள் உங்கள் இருதயங்களில் இப்படி சிந்திக்கிறதென்ன? பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டதென்று சொல்வதோ, எழுந்து உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நடவென்று சொல்வதோ, எது எளிது! பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை அவர்கள்

அறியவேண்டுமென்று திமிர்வாதக்காரனை நோக்கி: ''நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக் கொண்டு உன் வீட்டுக்குப்போ என்று உனக்குச் சொல்லுகிறேன்'' என் றார். உடனே அவன் எழுந்து தன் படுக்கையை எடுத்துக் கொண்டு எல்லோருக்கும் முன்பாகப் போனான். அப்பொழுது அவர்கள் ஆச்சரியப்பட்டு ''நாம் ஒருகாலும் இப்படிக் கண்டதில்லை'' என்று சொல்லி தேவனை மகிமைப்படுத்தினார்கள் (மாற்கு 2:8-12).

## 6. அவர் நித்திய ஜீவனைக் கொடுக்கிறார்

என் ஆடுகள் என் சத்தத்திற்கு செவி கொடுக்கிறது: நான் அவைகளை அறிந்திருக்கிறேன். அவைகள் எனக்குப் பின் செல்கிறது. நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன். அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை. என்று இயேசு சொன்னார் (யோவான் 10:27-28).

## 7. அவர் பிதாவோடு சமமாயிருக்கிறார்

''நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்'' என்றார். (யோவான் 10:30).

''என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்; அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படி சொல்லுகிறாய். நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா? அப்படியில்லாவிட்டாலும் என் கிரியைகளினிமித்தமாவது என்னை நம்புங்கள்'' என்று இயேசு தாமே கூறியுள்ளார். (யோவான் 14:8-11).

போற்றுவதையும் பணிந்து கொள்வதையும் அவர் ஏற்றுக் கொண்டார்.

உலகத்துக்கு உரியவைகள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள அனுமதிக்கப்படாத போற்றுதலையும் வணங்குத லையும் இயேசு ஏற்றுக்கொண்டார் என்பதில் ஐயமில்லை. பிறவிக்குருடனிடம் இது நிகழ்ந்தது. ''நீ தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறாயா?'' என்று இயேசு கேட்டபோது அதற்கு அவன்: ''ஆண்டவரே, அவரிடத்தில் நான் விசுவாசமாயிருக்கும்படிக்கு அவர் யார்'' என்றான். இயேசு அவனை நோக்கி: ''நீ அவரைக் கண்டிருக்கிறாய், உன்னுடனே பேசுகிறவர் அவர் தான்'' என்றார். உடனே அவன் ''ஆண்டவரே, விசுவாசிக்கிறேன் என்று சொல்லி அவரைப் பணிந்து கொண்டான். (யோவான் 9:35-38).

### 4. அவருடைய *சீசர்கள்* சாட்சியங்களிலிருந்து நிரூபணம்

அவரது மகிமையைக் கண்ட சீசர்களின் சாட்சியங்கள் தெளிவாகவும், பூரணமாகவும், சந்தேகமற்றவைகளாகவும் இருக்கின்றன. பின்வருபவை விரிவானவைகள் அல்ல. ஆனால் உதாரண வாயிலாக கொடுக்கப்படுகிறது.

(1). தோமா.

இயேசு உயிர்த்தெழுந்த பின்பு, அவருடைய கைக ளில் ஆணிகளின் அடையாளங்களையும்,பக்கத்தில் ஈட்டி யால் குத்தப்பட்ட காயத்தையும் பார்த்த பொழுது தோமா ''என் ஆண்டவரே! என் தேவனே!'' என்றான். (யோவான் 20:28).

2. அப்போஸ்தலனாகிய பவுல்:

''இவர் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட சர் வத்திற்கும் மேலான தேவன்''. (ரோமர் 9:5).

**பரிசுத்த திரித்துவத்தின் கொள்கை**

பார்வைக்கும் பரிசித்துணர்வதற்கும், புலன்களால் அறிந்து கொள்வதற்கும் இயலாத ஜீவனுள்ள ஒருவரே ''தேவன்'' என்பதை கிறிஸ்தவம் விசுவாசிக்கிறது. ''தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும்'' என்று இயேசு கூறியபடி அவர் இருக்கின்றார். (யோவான் 4:24). தேவனானவர் தமது சாயலாகவும் ரூபத்தின்படியேயும் அவர் சிருஷ்டித்த மனிதர்களுடைய ஆவிகளின் பிதாவாகவும் இருக்கிறார்.

''பின்பு தேவன் : நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக'' என்றார். (ஆதியாகமம் 1:26). பிதா, குமாரன், பரிசுத்த ஆவி எனப்படும் மூன்று இயல்புகள் ஒன்றிணைந்த ஒருவராக இருக்கிறார்.

விசுவாசத்துகுரிய இப்பொருளை நாம் தியானிக்கும் பொழுது, மனித வாழ்க்கையும் உயிர்வாழ்வதும் அறிவுக் கெட்டாத மிக ஆழமான மர்மத்தின் முன்னிலையில் நிற்கின்றோமென்பதை சந்தேகமில்லாது ஒப்புக்கொள்கிறோம். இலத்தீன் மொழி சொல் நயத்திலும் அலங்காரத்திலும் மிக வளமுடையதாயிருந்தும் இரகசியங்களின் ஆழத்தை முழுதும் எடுத்துரைக்கக் கூடியதாயில்லையென்று சுத்த அகஸ்தீனும் அவருக்குப் பின்பு சீர்திருத்த

வாதி கெல்வின் என்பவரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

கர்த்தத்துவத்தில் திரித்துவமென்ற ''பன்மையிலொருமை'' நம்பிக்கையை கிறிஸ்தவர்கள் மனுஷீக ஆதாரங்கள் ஒன்றையுந்தழுவாது ஆரம்பமுதல் இறுதி வரையில் வேதாகமத்திலே நிரந்தர உறுதிப்பாடுள்ள கர்த்தரின் வெளிப்பாடுகளில் விசுவாசம் வைத்துள்ளனரென்பது உறுதி.

இதனை நாம் கற்றறிந்துகொள்ளத் தொடங்குவதற்கு முன்பு இதைச் சூழ்ந்து நிற்கும் சிந்தனைகள் எவ்வாறு இறுதியானதும் மாற்றமுடியாததுமான நம்பிக்கையாய் மலர்ந்து நிரந்தரமாக நிலைபெற்றதென்பதை கிறிஸ்துவின் சபைக்குரிய சரித்திரத்திலே தெளிவாகத் தோன்றும் சான்றுகளை ஒன்றுதிரட்ட வேண்டும்.

அப்போஸ்தலர் காலத்திலும், கிறிஸ்துவுக்குப் பின் இரண்டாம் நூற்றாண்டு வரையிலுமிருந்த கிறிஸ்தவர்கள் தங்களுடைய நம்பிக்கைகளில் ஒரு திட்டமான வகைமுறையைக் கைக்கொள்ளாது, பரிசுத்த வேதாகமத்திலே முன் வைக்கப்பட்டிருக்கும் கொள்கை, நம்பிக்கை என்பவைகளை நடைமுறையில் கடைப்பிடித்தனர். அவைகளைக் கூட்டு சேர்த்த தீர்க்கமான மதக்கொள்கையாக சுருக்கிவிடுவதற்கு முற்படவில்லை. பிரச்சினை சங்கடங்கள் முன்னின்று அவர்களைப் பின்தொடர்ந்து வந்தவர்களையும் அணுகினார்கள்.

ஆயினும், மதக்கேடுள்ள குதர்க்கவாதங்கள் தலைதூக்கியதின் பயனால் சில கருத்துக்களின் பேரில் மனப்பேதங்களைத் தூண்டிவிட்ட காரணத்தாலும் இவைகளில் மிகக் குறிப்பாக கிறிஸ்துவின் ''ஸ்தானத்தையும்'' கர்த்தத்துவத்

தில் பரிசுத்த ஆவியின் வருகையைக் குறித்தும் சிறப்பாக செபெலியஸ் மற்றும் ஏரியஸ் இவர்களின் கருத்துக்கள் வெளிநாடுகள் வரையிலும் வியாபித்ததாலும், இத்தகைய சர்ச்சைகளுக்கு சபையானது தன்னுடைய கருத்துக்களை முன்வைக்க வேண்டிய அவசரத் தேவை உண்டாயிற்று. ''ஒரே கர்த்தத்துவத்தில், திரித்துவம் இல்லை''. பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்பவை வெறும் வேதாந்தம் இவை தேவ விளம்பரங்கள் என்று முன்னோர் கூறும் நிலையிலிருந்தனர்.

குமாரனும் பரிசுத்த ஆவியும் பிதாவுடன் சமமானவர் களல்ல. பிதாவின் சொற்படி அவரால் அவர்கள் ''சிருஷ் டிக்கப்பட்டவர்கள்''. இந்த அடிப்படையில் இவர்கள் அவருக்குக் கீழானவர்கள், பிதா தமது தெய்வீக இயல்பின் சாயலில் அவர்களை உண்டாக்கினார் என்பது பின்னோர் கள் பாராட்டிய கருத்தாயிருந்தது.

சபையானது இத்தகையக் கண்ணோட்டங்களை மறுத் தது. ஏனெனில் திரித்துவத்தில் உள்ளடங்கிய மூவரும் நிலைபெற்றிருக்காத காலம் ஒன்று இருந்தது இல்லை என்பதைத் தெளிவாய்ப் போதிக்கும் பரிசுத்த வேதாகமத் திற்கு இது எதிரிடையாயிருந்தது. அநாதி முதலாய் குமாரன் பிதாவோடிருந்தார் என்பதை சங்கீதப் புத்தகத்தி லிருந்து அறிகின்றோம். ''கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி: நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதப்படியாக்கிப் போடும் வரைக்கும், நீர் என்னுடைய வலது பாரிசத்தில் உட்காரும்'' என்றார் (சங்கீதம் 110:1). குமாரனைக் குறித்துச் சொல்லும்போது ''கர்த்தரை எப்பொ ழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்; அவர் என் வலது பாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவ

தில்லை'' என்று சங்கீதத்தில் காணப்படுகிறது. (16:8). அப்போஸ்தலர் 2:25-28 வசனங்களிலும் காண்க.

இத்தகைய குதர்க்க வாதங்களை எதிர்த்துப் போராடி விசுவாசத்தைப் பாதுகாத்தவர்களில் சுத்த அத்தனாசியசு மிகச் சிறப்புற்றவராயிருந்தார். குதர்க்க வாத கொள்கைகளை இவர் பொய்யானவையென்று நிரூபித்து மிகப் பிரசித்தமான அத்தனாசியக் கோட்பாடுகளை வெளியிட்டார். அதன் சுருக்கம் பின்வருமாறு:

1. இரட்சிப்பை நாடும் எவரும் மற்றெல்லாவைகளுக்கும் முன்னதாய் கிறிஸ்தவச் சபையின் உலகளாவிய நம்பிக்கைக்கு கீழ்ப்படிய வேண்டும்.

2. உலகளாவிய இந்த நம்பிக்கையானது ஒன்றில் மூன்றும், மூன்று ஒன்றானதுமாகிய தேவனைப் பணிந்து கொள்வது.

3.சாராம்சத்தில் மூவரையும் ஒன்று கலப்பதில்லை, அல்லது பிரிவினைப் படுத்துவதுமில்லை.

4. பிதா ஒருவராக இருக்கிறார், குமாரன் ஒருவராக இருக்கிறார், பரிசுத்த ஆவி ஒருவராக இருக்கிறார். ஆனால், பிதா குமாரன், பரிசுத்த ஆவி கர்த்தத்துவத்தில் ஒன்றாகவும், மகிமையிலும் மாட்சிமையிலும் சமநிலையிலிருக்கிறார்கள்.

5. பிதா இருப்பது போல் குமாரனிருக்கின்றார். அவ்விதமாகவே பரிசுத்த ஆவியும் இருக்கின்றார்.

6. பிதா சிருஷ்டிக்கப்பட்டவரல்ல, குமாரனும் சிருஷ்டிக்கப்பட்டவரல்ல, பரிசுத்த ஆவியும் சிருஷ்டிக்கப்பட்டவ

ரல்ல. மூன்றாக சிருஷ்டிக்கப்படவுமில்லை. ஆனால் சிருஷ்டிக்கப்படாதவர் ஒருவரே.

7. பிதா எல்லையற்றவர், குமாரன் எல்லையற்றவர், பரிசுத்த ஆவி எல்லையற்றவர். அவர்கள் எல்லையற்ற மூவரல்ல ஆனால் எல்லையற்ற ஒருவரே.

8. பிதா அனாதியிலிருந்து வந்தவர், குமாரன் அனாதியிலிருந்து வந்தவர், பரிசுத்த ஆவி அனாதியிலிருந்து வந்தவர். அனாதியிருந்து வந்த மூவரல்ல ஆனால் அனாயிலிருந்து வந்த ஒருவரே.

9. பிதா சகலமும் வழிநடத்துகிறார், குமாரன் சகலமும் வழிநடத்துகிறார்; பரிசுத்த ஆவி சகலமும் வழிநடத்துகிறார். வழிநடத்துபவர்கள் மூவரல்ல ஆனால் ஒருவரே.

10. பிதா தேவனாயிருக்கிறார்; குமாரன் தேவனாயிருக்கிறார், பரிசுத்த ஆவி தேவனாயிருக்கிறார். ஆனால் மூன்று தேவர்கள் அல்ல, ஒரே தேவன்.

11. பிதா ஆண்டவராயிருக்கிறார், குமாரன் ஆண்டவராயிருக்கிறார், பரிசுத்த ஆவி ஆண்டவராயிருக்கிறார். ஆனால் அவர்கள் மூன்று ஆண்டவர்களல்ல, ஒரே ஆண்டவர்.

12. ஒவ்வொருவரும் அவரவர்கள்தாமே தனித்தனியான தேவன் அல்லது ஆண்டவரென்று அறிக்கையிடக்கூடாதென்று கிறிஸ்துவ சத்தியம் கட்டளையிடுகிறது போல், மூன்று தேவர்களும், மூன்று ஆண்டவர்களும் நிலைபெற்றிருக்கிறார்களென்று சொல்லத் தடைசெய்கிறது.

13. நமக்கு ஒரு பிதா இருக்கிறார். மூன்று பிதாக்கள்

அல்ல. ஒரு குமாரனிருக்கிறார் மூன்று குமாரர்களல்ல. ஒரு பரிசுத்த ஆவியானவர் இருக்கின்றார். மூன்று பரிசுத்த ஆவிகளல்ல.

14. மூவரில் எவரொருவராவது மற்றவருக்கு முன்னும் பின்னுமாகத் தோன்றியிருக்கவில்லை. அல்லது ஒருவரைப் பார்க்கிலும் மற்றவர் பெரிதானவரோ குறைவானரோ அல்ல. மூவரும் சமமானவர்கள், அனாதியானவர்கள்.

15. ஆகவே, கூறப்பட்ட சகலமானவைகளிலிருந்து ''ஒன்றில் மூவராக அல்ல மூன்றில் ஒன்றாய்ப் பணிந்து கொள்ளவேண்டும்.

16. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து அநாதிமுதல் ஒரே பேறானவராகவும், தேவனின் ஒன்றிணைந்த பொருளாகவும், தாயின் இயற்கை வழியில் ஒரு மனிதராகவும் இந்த யுகத்திலே பிறப்பெய்தினராகவும் இருப்பதை நாம் நம்பிக்கை வைத்து அதனை உறுதி கூறுவதே நம்முடைய உண்மையான விசுவாசமாயிருக்கிறது.

17. அவர் கர்த்தராகவும் மனிதராகவும் இருந்தாலும், கிறிஸ்து இருவரல்ல ஒருவரே. அவர் தமது தெய்வீகத்தை மனித இயல்புக்கு மாற்றி மனிதனாகாமல், தெய்வீகமும் மனுஷீகமும் ஒன்றிணைந்தவரானார்.

இந்த உண்மைக்கு ஆதாரம் என்ன? அதன் அடிப்படை என்ன? அவைகளின் உண்மைக்கும் நேர்மைக்கும் சாட்சியென்ன? சரித்திரத்திலே இவ்வளவு செல்வாக்கும், உறுதியும், நிரந்தரமும் பெற்றதெங்ஙனம்? என்று கேள்விகள் கேட்கப்படுகின்றன.

அதற்கு வேதாகமம் (பைபிள்) ஒன்றே ஆதாரமும் கொள்கையுமாயிருக்கிறது. எத்துணைப் பெரிய சிந்தனை யாளராக இருந்தாலும் தேவனைப் பற்றி தெய்வீக இயல்பு களைக் குறிக்கும் வெளிப்பாடுகளும் விளக்கங்களும் அவர் ஒருவரிடமிருந்து வெளிவரவில்லை என்றால் கிரகித்தறிவது மனிதனால் ஒருக்காலும் முடியாது. திரித்து வத்தைப் பற்றி வேதாகமத்திற்கு வெளிப்புறத்திலிருந்து வரக்கூடியவை எல்லாம் தத்துவச் சிந்தனை அல்லது தர்க்கவாத மேற்கோள்கள் அல்லது ஒப்பனை எடுத்துக் காட்டுகள் தவிர வேறில்லை. மறுவழியில் இதனைப் பார்க்கும் போது மனிதன் ஒருபோதும் சந்தித்திராததும் தெளிவுபடுத்துவதற்குமரிதான ஒரு புதிர் மீது நாம் சிந்தனை செய்து கொண்டிருக்கிறோம்.

சகல தர்க்கவாதங்களுக்கும் அப்பாற்பட்டதாய் வேதா கமம் வெளிப்படுத்தும் கர்த்தத்துவத்தின் இயல்பானது, பழைய புதிய ஏற்பாடுகள் அவ்வாறாக நிரூபித்துள்ளவை கள், கிறிஸ்தவர்கள் விசுவாசித்திருக்கின்ற பரிசுத்த திரித்து வத்தின் நிறைவான ஒன்றிப்பு உறுதியானதாயிருக்கிறது.

வேதாகமத்திலுள்ள இந்நம்பிக்கையை ஆழ்ந்து கற்று ணர்ந்த அறிஞர்கள் அதை விசுவாசித்து அதனை உறுதி யாக நிலைநிறுத்தி சபையின் அந்தஸ்திலே உள்ளடக்கமாய் எழுதி வைத்துள்ளார்கள். இவைகளில் மிகப் பிரதானமா னது ''நைசீன் விசுவாச கோட்பாடு'' என்பதாகும். அதன் பொருளடக்கம் பின்வருமாறு இருக்கிறது.

''வானத்தையும் பூமியையும், காணக்கூடியவைகளை யும், காண முடியாதவைகளையும் சிருஷ்டித்தவர், வல் லமை மிகுந்த பிதா, உலகத் தோற்றத்துக்கு முன்பு தமக்கு

ஒரே பேறானவரும் ஒரே குமாரனுமாகிய ஒரே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, தேவாதி தேவன், ஒளியின் ஒளி, ஒரேயொரு தேவன், சிருஷ்டிப்பில்லாது பேறாக வந்தவர், சகலமும் உண்டாக்கிய பிதாவோடு ஒரே பொருளானவர், மனிதராகிய நாம் இரட்சிப்படைவதற்கு வானத்திலிருந்து கீழிறங்கி வந்தவர், பரிசுத்த ஆவியால் கன்னிமரியாளில் அவதரித்தவர், மனிதனாக்கப்பட்டவர், பொந்தியு பிலாத்துவினால் நமக்காக சிலுவையிலறையப்பட்டவர், ஒரே ஒரு கர்த்தர் என்று நான் விசுவாசிக்கிறேன். வேத வாக்கியங்களின்படி அவர் பாடுகளை தம்மேற்கொண்டு, அடக்கஞ் செய்யப்பட்டு, மூன்றாம் நாளிலே மீண்டும் உயிர்த்தெழுந்து, வானகஞ் சென்று பிதாவின் வலது பக்கத்திலே வீற்றிருக்கிறார். அவர் தமது மகிமையுடன் மறுபடியுமாக கீழறங்கி வந்து மரித்தோரையும் சடுதியிலுள்ளவர்களையும் நியாயம் தீர்ப்பார். அவருடைய இராச்சியம் முடிவில்லாதிருக்கும்.''

''பிதா குமாரனவர்களிடமிருந்து முன் செல்பவரும், கர்த்தரும் ஜீவனைத் தந்தருள்பவருமாகிய பரிசுத்த ஆவியானவரில் நான் விசுவாசிக்கிறேன். உலகளாவிய ஒரேயொரு பரிசுத்த அப்போஸ்த சபையை விசுவாசிக்கிறேன். பாவமன்னிப்பு நிமித்தம் ஒரேயொரு ஞானஸ்நானத்தை நான் ஒப்புக்கொண்டு, வரப்போகும் புதியதோர் உலக வாழ்க்கைக்கு மரித்தோர் உயிர்த்தெழுதலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன், ஆமென்.''

கர்த்தராகிய நமது ஆண்டவர் ஒரே தேவனாயிருக்கிறார். ''நானே கர்த்தர். அதுவே என்னுடைய நாமம். என்னுடைய மகிமையை வேறொருவருக்கு கொடுக்கமாட்டேன்'' என்று வேதாகமம் சொல்லுவது உண்மையாயி

ருக்கிறது. ஆயினும் கர்த்தத்துவத்தில் ''பன்மையில் ஒருமைப்பாடு'' இருப்பதற்கு அங்கே வசனங்கள் நிறைந்துள்ளன.

தேவன் ஆள்தத்துவமுள்ளவராக இருப்பதனால், செவி கொடுத்தல், கண்ணோக்குதல், திருவாய் மொழிதல், ஞானம், விருப்பம், அன்பு எனப்படும் குணநலன்கள் நிறைந்தவராயிருக்கிறாரென்று கூறப்படுவதை வேதவாசிப்பிலிருந்து நாம் அறிந்து கொள்கிறோம். இத்தகைய குணாதியசயங்கள் அமைந்த அவருடைய சிருஷ்டிகளுக்கும் அவருக்கும் மத்தியில் ஒரு பிணைப்பு நிலவுகிறது. அவர் மனிதனை சிருஷ்டிப்பதற்கு முன்பு அநாதியில் இந்த இயல்புகள் செயலற்றிருக்கவில்லை என்பது திண்ணம். இத்தகைய குணாகுணங்களை தேவனானவர் செயல்படுத்துவதென்பது ஒன்றுக்கதிகமான ஞானத்தினால் மாத்திரமே சாத்தியமென்று பிரத்யட்சமாய் விளங்குகிறதென நாம் தீர்மானிப்பதற்கு வழிகாட்டுகிறது. இதனால் கர்த்தத்துவ ஒன்றிப்பிலே மூன்று பேர் நிலைபெற்றிருப்பது திடப்படுகிறது.

கிறிஸ்தவ நம்பிக்கையை ஆழ்ந்து தியானிப்பவர்கள் பின்வரும் உண்மைகளைக் கண்டறிவார்களென்பதில் ஐயமில்லை.

(1) பிதா, குமாரன், பரிசுத்த ஆவியென்று மூவரில் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே நாமங்களும், தெய்வாம்சமும் உரியவர்களாய், பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஒவ்வொருவரும் புகழ், வணக்கம், நம்பிக்கை என்பவைகளுக்கு பாத்திரமாகின்றார்கள்.

(2) பிதாவைப் போலவே குமாரனும் தெய்வீகமானவர் என்பது வேதாகமத்திலிருந்து தெளிவாகப் புலப்படுகிறது. ''அன்றியும் பிதாவைக் கனம் பண்ணுகிறதுபோல் எல்லோரும் குமாரனைக் கனம் பண்ணும் படிக்கு...'' என்று இயேசு சொன்னார். (யோவான் 5:22).

(3) பரிசுத்த ஆவியானவரின் கர்த்தத்துவம் பிதா குமாரன் கர்த்தத்துவத்தைப் போன்றதே என்பது வேத வாக்கியங்களிலிருந்து தெளிவாகிறது. ''தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்கிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும்.'' (யோவான் 4:24).

கிறிஸ்துவத் தத்துவங்களை நாம் படிக்கும்போது, பரிசுத்த திரித்துவப் பெயர்களை பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்று மூவருக்கும் மத்தியிலே நிலவக்கூடிய உறவு முறையை தனித்துரைக்கும் முகமாய் ''சிருஷ்டிகர்'', ''பாதுகாப்பவர்'', அல்லது ''போஷிப்பவர்'' என்று கூறப்படுவது விளக்கங்களல்ல என்பதைக் காண்கிறோம். ஒரு சிலரால் குறை கூறப்பட்டாலும், பின்வரும் கருத்துக்கள் மூலம் அவை மறுத்துரைத்து உறுதியாக்கப்படுகிறது.

(1) பிதா, குமாரன், பரிசுத்த ஆவி தம்மைத்தாமே ''நான்'' என்று கூறுகின்றார்கள்.

(2) ஒருவரோடொருவர் உரையாடும் பொழுது ''நீர்'' - ''அவர்'' என்று ஒவ்வொருவரும் அழைக்கின்றார்கள்.

(3) பிதா குமாரனை நேசிக்கிறார். குமாரன் பிதாவை நேசிக்கிறார். பரிசுத்த ஆவியானவர் குமாரனுக்கு சாட்சியளித்து அவரை மகிமைப்படுத்துகிறார்.

இக்கருத்துக்களுடைய இயல்புப் பலனாகவும், வேதாகம உண்மைகளின்படியும் ஒரே தேவன், பிதா - குமாரன் - பரிசுத்த ஆவி எனப்படும் திரித்துவ நம்பிக்கையின் மேலான கோட்பாட்டை கிறிஸ்தவர்கள் உலகிற்கு கொண்டு வந்துள்ளார்கள்.

இப்போதனை நமது அறிவுக்கு அப்பாற்பட்ட தாயிருக்கிறது என்று அநேகர் கூறுகிறார்கள். ஆனால் அத்தகையக் கூற்று கிறிஸ்தவ போதகத்தை தெளிவுபடுத்துவதாக இல்லை. மேலும் அறிந்து கொள்ளக் கடினமான விஞ்ஞான உண்மைகளையாவது அவர் விளக்கபடுத்தவில்லை. ஒரு எல்லைக்குள் அடங்கியிருக்கும் நமது புத்தி முடியாதவை அல்லது அறிவுக் கெட்டாதவைகளை கிரகிக்குமளவுக்கு சிருஷ்டிக்கப்படவில்லை.

## திரித்துவத்திலுள்ள மூவரது ஒருமை

### (1) தெய்வீகத்திலே:

தேவனால் அருளப்பட்ட வேதவாக்கியங்கள் பின்வருமாறு கூறுகின்றன.

(அ) பிதா - தேவன் நமது பிதாவாக இருப்பவர். ''நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும், நம்மிடத்தில் அன்பு கூர்ந்து நித்திய ஆறுதலையும் நல்நம்பிக்கையையும் கிருபையாய் நமக்குக் கொடுத்திருக்கிற நம்முடைய பிதாவாகிய தேவனும்.'' (2 தெசலோனிக்கேயர் 2:16).

(ஆ) குமாரன் - குமாரனைப் பற்றி கூறுகிறதாவது: ''உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது, உம்

முடைய ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயி ருக்கிறது'' (எபிரெயர் 1:8).

(இ) பரிசுத்த ஆவி. ''அனனியாவே, பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? நீ மனுஷரிடத்தில் அல்ல தேவனிடத்தில் பொய் சொன்னாய்.'' (அப்போஸ்தலர் 5:3-4).

**2. கர்த்தத்துவத்திலே:**

(1) பிதா - ஆண்டவராயிருக்கிறார். ''அந்த வேளை யில் இயேசு ஆவியிலே களிகூர்ந்து; பிதாவே! வானத்துக் கும் பூமிக்கும் ஆண்டவரே உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்'' என்றார். (லூக்கா 10:21).

(2) குமாரன் - ஆண்டவராயிருக்கிறார். ''எல்லாருக் கும் கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவைக் கொண்டு அவர் சமாதானத்தைச் சுவிசேஷமாய்க் கூறி, இஸ்ரவேல் புத்திரருக்கு அனுப்பின வார்த்தையை அறிந்திருக்கிறீர்கள் '' (அப்போஸ்தலர் 10:36).

(3) பரிசுத்த ஆவியானவர் - ''கர்த்தரே ஆவியான வர்: கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையு முண்டு'' (2. கொரிந்தியர் 3:17).

**3. நித்திய நிலையிலே:**

(அ) பிதா நித்தியமானவர்: ''தானியேலின் தேவ னுக்கு முன்பாக நடுங்கிப் பயப்பட வேண்டும். அவர் ஜீவனுள்ள தேவன், அவர் என்றென்றைக்கும் நிலைத்திருக் கிறவர்; அவருடைய ராஜ்யம் அழியாதது; அவருடைய

கர்த்தத்துவம் முடிவு பரியந்தம் நிற்கும்'' (தானியேல் 6:26).

(ஆ) குமாரன் நித்தியாமானவர்: ''இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தர்: நான் அல்பாவும் ஓமெகாவும் ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன்'' (வெளிப்பாடு 1:8).

(இ) பரிசுத்த ஆவி நித்தியமானவர்: ''நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக் கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!'' (எபிரெயர் 9:14).

**4. சர்வ வியாபகத்திலே:**

(அ) பிதா - ''எல்லோருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லோர் மேலும், எல்லோரோடும் உங்கள் எல்லோருக்குள்ளும் இருக்கிறவர்'' (எபேசியர் 4:6).

(ஆ) குமாரன் - ''இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்'' (மத்தேயு 18:20).

(இ) பரிசுத்த ஆவியானவர் - ''உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தை விட்டு எங்கே ஓடுவேன்? நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர். நான் விடியற்கா

லத்து செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும், அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலதுகரம் என்னைப் பிடிக்கும்'' (சங்கீதம் 139:7-10).

**5. தொழுகையின் மேன்மையிலே:**

(அ) பிதா- ''உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது'' (யோவான் 4:23).

(ஆ) குமாரன் - ''இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும் படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்'' (பிலிப்பியர் 2:10-11).

(இ) பரிசுத்த ஆவியானவர் - தொழுவதற்கு விசுவாசிகளை அவரே ஆயத்தப்படுத்துகிறார். ''அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக் கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியாவர் தாமே வாக்குக் கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்'' (ரோமர் 8:26-28).

**6. சத்தியத்தின் இயல்பிலே:**

(அ) சத்தியமே பிதா - ''உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்'' (யோவான் 17:17).

(ஆ) சத்தியமே குமாரன் - அதற்கு இயேசு ''நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலே யல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்'' என்றார். (யோவான் 14:6).

(இ) சத்தியமே பரிசுத்த ஆவி - ''நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும் படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருள்வார். உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக் கொள்ள மாட்டாது; அவர் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்'' (யோவான் 14:16-17).

**7. அன்பின் இயல்பிலே:**

(அ) அன்பே பிதா - பிதா அன்பின் உருவாயிருக்கிறார். ''நீங்கள் என்னை சிநேகித்து நான் தேவனிடத்திலிருந்து புறப்பட்டு வந்தேனென்று விசுவாசிக்கிறபடியினால் பிதா தாமே உங்களை சிநேகிக்கிறார்'' (யோவான் 16:27).

(ஆ) அன்பே குமாரன்- ''நான் உங்களுக்கு கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள். இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை. ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான். நான் உங்களை சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்'' (யோவான் 15:14-15).

(இ) அன்பே பரிசுத்த ஆவி - ''தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல் பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்'' (2.தீமோத்தேயு 1:7).

8. **பரிசுத்தத்திலே:**

(அ) பிதா பரிசுத்தர் - ''பரிசுத்த பிதாவே, எனக்கு நீரீந்த 'நாமத்தாலும் உமது 'நாமத்தின் வல்லமையாலும் அவர்களைக் காத்தருளும்'' (யோவான் 17:11 புதிய மொழிபெயர்ப்பு)

(ஆ) குமாரன் பரிசுத்தர் - தேவதூதன் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக ''பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் எனப்படும்'' என்றான். (லூக்கா 1:35)

(இ) பரிசுத்த ஆவி பரிசுத்தர் - ''அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்'' (எபேசியர் 4:30).

## மறுப்புகளுக்கு விடை

### 1. கிறிஸ்துவின் தெய்வீகத்திற்கு மறுப்பு

''நான் சுயமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை... எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்கு சித்தமானதையே நான் தேடுகிறேன்'' (யோவான் 5:30).

''என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்'' (யோவான் 14:28) என்று இயேசு சொன்னதை ஆதாரமாக வைத்து கிறிஸ்துவின் தெய்வீகத்தை ஒருவர் மறுத்துக் கூறலாம்.

மனிதனுடைய மீட்பினிமித்தம் அவர் திரித்துவத்திலே இரண்டாமவராக அவதரித்து மனுக்குலத்தின் பாவநிவிர்த் திக்காகத் தம்மை பாவநிவாரணப் பலியாகக் கொடுக்க வேண்டிய அவசியமிருந்தது. ஆதலால் திரித்துவத்திற்குள் பிதா குமாரனென்ற உறவையும், கிறிஸ்துவின் தெய்வீகத் தையும் இவ்வசனம் மறுத்துரைக்கவில்லை. உண்மை யில்லை என்று நிரூபிக்கவும் கிடையாது.

இந்த தெய்வாம்சக் காரியத்தை அவர் நிறைவேற்றிய பின்பு வானுலகஞ் சென்று பிதாவின் வலது பக்கத்திலே அமர்த்தப்பட்டார். ''எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகா ரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மை யில் மாத்திரமல்ல மறுமையிலும் (தற்காலத்தில் மட்டுமல்ல வரப்போகும் காலத்திலும்) பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத் தக்கதாக, அவரை உன்னதங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படிச் செய்து, எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும் எல்லாவற் றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார். (எபேசியர் 1:20-23).

மீட்பின் செயலாற்றத்திலே மீட்பர் எனப்படுபவர் ஒரு மனிதராகவும், மீட்கப்படும் மனிதனின் இயல்பில் பங்கேற் கக் கூடியவராகவும் இருக்க வேண்டியதின் தேவையை

அப்போஸ்தலர்கள் போதனைகளிலிருந்து நாம் தெளிவாய் அறிகின்றோம். தேவனாயிருக்க பாவத்தை ஜெயங் கொண்டு, தம்மை விசுவாசிப்பவர்கள் எல்லோரையும் அதன் அதிகாரத்திலிருந்து விடுதலையாக்குவதற்கு உன் னத வல்லமை இருக்க வேண்டும். வேதாகமப் புத்தகத் தைப் படிப்பவர்கள் எல்லோரும் அதன் வசனவரிகள் முழுவதிலும், ஆதியாகமம் முதல் வெளிப்பாடுகள் புத்த கம் முடிவாக மீட்பரின் சாயலைக் காண்கிறோம்.

''நாம் புத்திரசுவிகாரத்தை அடையும்படி நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக் கொள்வதற் காக, காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்த வரும், நியாயப் பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை அனுப்பினார்'' என்பதிலிருந்து அவருடைய மனுக்கோலத்தைக் காண்கிறோம். (கலாத்தி யர் 4:4). சில சந்தர்ப்பங்களில் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் விசுவாசப் பொருளாகவும், ஆரா தனையின் மையமாகவுமிருக்கும் தேவனாகப் பார்க்கி றோம்.

கிறிஸ்து அதிசயமானவர். அவர் தேவனும் மனிதனு மான ஒருவர். தம்முடைய அவதரிப்புக்கு முன்பு தலைமு றைகள் தோறும் தீர்க்கதரிசிகளுக்கு தரிசனங்களைத் தந்தரு ளினார். தேவனுடைய அற்புதங்கள் அடையாளங்களில் உன்னதமாய் அவர் மாம்சத்தில் வருவதை ஏசாயா குறிப்பிட்டான். ஆதலால் ஆண்டவர்தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார். இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள் (இம்மானுவேல் எனப் படுவது தேவன் நம்மோடு இருக்கிறார் என்று அர்த்தம்).

ஏசாயா 7:14 - மத்தேயு 1:22-23. மேலும் ஏசாயா குறிப்பிடுகிறதாவது ''அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு என்னப்படும்'' (ஏசாயா 9:6).

**2. பரிசுத்த ஆவியின் தெய்வீகத்தில் மறுப்பு**

பரிசுத்த ஆவி திரித்துவத்தில் ஒருவரல்ல. மனித இருதயங்களிலும் உலகிலும் தேவனுடைய காரியங்களை நடத்தி வைக்கும் தேவனின் வல்லமையே என்று ஒரு சிலர் சொல்லுகிறார்கள்.

பரிசுத்த ஆவி ஆள் தத்துவமுள்ளவர், நம்மத்தியிலே கிரியை செய்யும் ஒரு தெய்வீக வல்லமைப் பொருளல்ல என்பதை வேத வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன. பரிசுத்தம், சத்தியம், ஞானம், சித்தம் என்பவைகளை வல்லமை யென்ற பொருள் பெற்றிருக்க முடியுமென்று கூறுவதற் கில்லை, அது மாத்திரமல்ல அதனால் பேச முடியாது. அதனிடம் பேசவும் முடியாது. கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்ற பொழுது பரிசுத்த ஆவி புறாவைப்போல் உருவங் கொண்டு வந்திறங்கினார் என்றும் அந்நேரத்தில் வானத்தி லிருந்து ''நீர் என்னுடைய நேச குமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன்'' (லூக்கா 3:22) என்று குரல் கேட்டதாகவும் வேதாகமத்திலே எழுதப்பட்டிருக்கிறது.

ஒரே பொழுதில் மூன்று பேர்கள் இருந்ததை இது வெளிப்படுத்துகிறது. பரிசுத்த ஆவியானவர் வானத்திலி ருந்து வந்து இறங்கினார். பூமியிலிருந்த குமாரனோடு வானத்தினின்று பிதா பேசினார்.

இதுபோல் ''மற்றொரு தேற்றரவாளரை அனுப்பி

வைக்கப்படும்'' என்ற அப்போஸ்தல ஆசீர்வாதமாகிய கிறிஸ்துவின் உறுதிமொழியின் படியும், ''கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும், பிதாவின் அன்பும்,, பரிசுத்த ஆவியின் ஐக்கியமும் உங்கள் எல்லாரோடும் இருப்பதாக'' என்றபடியும், ''அவர் (இயேசு) மூலமாய் ஒரே ஆவியிலே பிதாவிடம் பிரவேசிப்பு உண்டு'' என்ற பவுலின் அறிக்கையின்படியும் எல்லாம் ஒன்று சேர்ந்து கர்த்தத்துவத்திலே மூவர் இருப்பதை எடுத்துக் காட்டுகிறது.

வேதப் புத்தகத்தைப் படிப்பவர்கள் எல்லோரும் பரிசுத்த ஆவி ஒரு தெய்வீக வல்லமை மாத்திரமேயென்று சிலர் உரிமை பாராட்டுவது பொய்யானதென்று காட்டும் அநேக வாக்கியங்களிருப்பதைக் காண்கிறோம். குறிப்பாக அப்போஸ்தலனாகிய பவுலின் வசனங்களில் பரிசுத்த ஆவியின் மூலம் சபைக்கு அநேக வரங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று காணப்படுவதில் அற்புதங்களைச் செய்யும் வரமும் ஒன்று. (1. கொரிந்தியர் 12:4-11). பரிசுத்த ஆவி ''ஒரு வல்லமை'' மட்டுமே என்று கணித்தால் அதன் அர்த்தம் அதுவும் ஒரு ''வரம்'' மாத்திரமே என்று பொருள்படுவதாயிருக்கும்.

அவர் ஒரு வல்லமை அல்லது வரமோ அல்ல என்பதனைக் காட்டும் மற்றுமனேக வசனங்களுண்டு.

''பின்பு இயேசு ஆவியானவருடைய பலத்தினாலே கலிலேயாவுக்குத் திரும்பிப் போனார்'' (யோவான் 4:14).

''நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்'' (அப்போஸ்தலர் 10:38).

''பரிசுத்த ஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு...'' (ரோமர் 15:13).

''...அற்புத அடையாளங்களின் பலத்தினாலும், தேவ ஆவியின் பலத்தினாலும், கிறிஸ்துவானவர் என்னைக் கொண்டு நடப்பித்தவை'' (ரோமர் 15:18).

மறுத்துக் கூறுபவர்களின் உறுதிப்பாடுகள் உண்மையென்றால் ''வல்லமையின் வல்லமையினால் இயேசு திரும்பிப் போனார்'' என்றும் ''பரிசுத்த வல்லமையின் வல்லமைப் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு'' என்று நாம் சொல்லவேண்டியதாயிருக்கும்.

அப்போஸ்தல ஆசீர்வாதத்தை ''கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும், பிதாவின் அன்பும் பரிசுத்த வல்லமையின் ஐக்கியமும் உங்களனைவரோடும் இருப்பதாக'' என்று வாசிக்க நேரிடும். உணர்வுள்ள எவரும் இத்தகையக் கூற்றுகளை ஏற்க முடியாது.

### 3. திரித்துவக் கொள்கைக்கு மறுப்பு

''கர்த்தத்துவத்திலே பன்மை இருப்பதற்கு உங்கள் சான்றுகள் என்ன?'' என்னும் கேள்வி அநேகமுறை கேட்கப்படுகிறது. கர்த்தத்துவத்தில் அமைந்துள்ள ஒன்றிப்பு வேதாகமப் புத்தகத்திலே சிறப்பாகக் காணப்படுகிறது என்பதே இதற்கு விடை. தேவனுக்கீடாக வேறொருவருக்கு அகிலத்தில் இடமில்லையென்னும் ஒப்புதலாக்கப்பட்டது. சாராம்சத்தில் ஒருவராக மூவர் இருப்பதை தடுக்கவில்லை.

வேதப்புத்தக வாக்கியங்களிலிருந்து இதனை முடிவு

செய்கிறோம். பழைய ஏற்பாட்டிலே தேவனை ''எலோகீம்'' என்று பொதுவாகக் கூறப்பட்டிருப்பது பன்மையைக் குறிக்கின்றது. இவைகளில் சிறப்புற்றதாய் உபாகமத்திலே ''இஸ்ரவேலே கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர் (6:4) எனக் காண்கிறோம். இங்கே கர்த்தத்துவ ஐக்கியத்தை வெளிப்படுத்துவதே இதன் நோக்கமாயிருக்கிற தென்றாலும் ''நம்முடைய தேவன்'' என்ற வாக்கியம் பன்மையிலிருக்கிறது. தேவனைப் பன்மையில் குறிப்பிடும் மற்றுமனேக வசனங்கள் இருக்கின்றன.

''பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக.'' என்றார். ஆதியாகமம் 1:26.

''பின்பு தேவனாகிய கர்த்தர்: இதோ மனுஷன் நம்மில் ஒருவரைப் போல் ஆனான் என்றார்.'' ஆதியாகமம் 3:22.

''நாம் இறங்கிப்போய், ஒருவர் பேசுவதை மற்றொருவர் அறியாத படிக்கு, அங்கே அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்குவோம்'' என்றார். ஆதியாகமம் 11:7.

''யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன்.'' ஏசாயா 6:8.

சில அரசர்கள் செய்வதுபோல் தேவன் தம்மைத்தாமே மகிமைப்படுத்திக் கொள்ளும் வகையிலே அவருடைய கருத்து இருந்ததென்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் ''மனிதன் நம்மில் ஒருவனைப்போல் ஆனான்'' என்று தேவனாகிய கர்த்தர் கூறிய வார்த்தையானது பேசுகிறவரும் கேட்பவர்களும் இருக்கின்றார்கள் என்னுங் கருத்து

டையதாய் இருப்பதினால் இத்தகைய் சிந்தனைகளை மறுத்து விடுகிறது.

திரித்துவத்தின் பரம இரகசியமாகப்பட்டது நம் அறிவுக்கெட்டாததாய் இருந்தாலும், நமக்குள்ள அறிவாற்ற லின் எல்லையை ஒருக்காரணமாக வைத்து இதனை மறுத்துவிட வேண்டுமென்பது கருத்தாகாது. தெய்வீகத்தின் வெளிப்பாடுகளோ அனந்தம். அவைகளை உய்த்துணர் வது நமது சக்திக்கும் அறிவுக்கும் எட்டாததாக இருக்கிறது. தேவனானவர் சுயமாயிருந்து, வெளிப்பாடாயிருந்து, எல் லாவற்றுக்கும் மூலகாரணராயிருந்து, சர்வவியாபியாகவும், சர்வஞானியாகவும், அனாதிக்கு அனாதியாய், சர்வகாலங் களிலும் நிலைத்திருப்பது உதாரணமாயிருக்கிறது.

திரித்துவக் கோட்பாடு நமது விவேகத்திற்கு அப்பாற் பட்டதாக இருந்தாலும்கூட அதன் ஒருமைப்பாட்டினை நீக்கிவிடக் கூடியதாயில்லை. நாம் அதைத் தள்ளிவிடுவ தற்கு தூண்டுதலளிப்பது எதுவும் இல்லை. காரணத்தால் அல்லது விசுவாசத்தால் உணர முடியாதிருப்பதுவும் ஒன் றில்லை. ஏனெனில் மூன்று தேவர்கள் இருக்கின்றார்கள் என்று பொருளாகும்படி எதுவும் கூறவில்லை.

திரித்துவக் கொள்கையால் கிறிஸ்துவத்திற்கு ஏதே னும் அநுகூலம் உண்டா? எனச் சிலர் கேட்கின்றார்கள்.

மற்றெல்லாப் பிரதான போதகங்களை எடுத்துரைப் பார்க்கிலும் திரித்துவத்தைக் குறித்து போதிப்பது இதற்கு அனுகூலப்படும் என்றே பதில் கூறலாம். உதாரணமாக:-

1. கர்த்தத்துவத்தை உயர்த்தி அதன் பூரணத்துவத்தை வெளிப்படுத்துகிறது.

''ஐக்கியப்பாடில்லாத திரித்துவம்'' அதனை ஒரு எல்லைக்குட்படுத்தி அன்பு, மகிழ்ச்சி என்பவைகளின் உள்ளடக்கங்களை வெறுமையாக்கி விடுகிறது. திரித்துவ ஆலோசனையில் ஒருவருக்கொருவர் அன்பு பாராட்டுத லைக் காண்கிறோம். இது நித்திய பேரானாந்தத்திற்குரிய தகுதிகளை எல்லாம் கர்த்தத்துவத்தில் கொடுக்கிறது.

2. தம்முடைடய படைப்புகளுக்கு தேவன் தம்மை வெளிப்படுத்துவதற்கு திரித்துவம் ஒரு வழியாயி ருக்கிறது.

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொருவ ரும் ஒரே பொருளானவர்கள். குமாரன் பிதாவைப் பற்றி எல்லாம் அறிந்திருப்பதனால் அவரைப் பூரணமாக வெளிப்படுத்த முடியும். கர்த்தத்துவத்தின் சாராம்சமாக பரிசுத்த ஆவியானவர் இருப்பதனால் அவர் அதனை வெளிப்படுத்த இயலும்.

மூவர் வாயிலாக தேவன்தாமே தமது படைப்புகளி டம் சமீபிக்கின்றார். இத்தகைய அணுகுமுறை இல்லை யென்றால் நமது அறிவாற்றல் திரையிடப்பட்டு, நமது அனுபவத்திலிருந்து துண்டிக்கப்பட்டு தேவனானவர் தூரத் திலிருப்பார்.

3. மீட்பின் செயலாற்றத்தில் அதன் எல்லாத் தேவைக ளையும் திரித்துவத்தின் வாயிலாகத் தேவன் நிறைவேற்றினார்.

இரண்டாமவர் மாம்சமாகி நமது பாவங்களுக்கு பிரயாச்சித்தம் செய்தார். அவர் நமக்கு மத்தியஸ்தராகவும் பரிந்துரைப்பவருமானார். நீதிக்கும் ஒப்புரவாகுதலுக்கும்

காரணமானார். ''தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புர வாக்கினார்'' என்று பவுல் கூறுகிறான். (2. கொரிந்தியர் 5:19).

மூன்றாமவராகிய பரிசுத்த ஆவியானவருடைய கிரி கைகளைக் கூறுங்கால், அவர் நம்முடைய இருதயங்க ளைப் புதுப்பித்து, மனதைத் தெளிவுபடுத்தி, பரிசுத்தத்தால் சுத்திகரித்து, நம்மை தேவசமுகத்தில் பிரவேசிக்கச் செய்கி றார். மெய்யாகவே திரித்துவமில்லாத தேவனானவர் மீட்பராகவும், இரட்சகராகவும், தூய்மையாக்குபவராகவும், நீதிபதியாகவும், பாவத்தினிமித்தம் சாபக்கேடுக்குட்பட்ட பாவிகளுடைய தேவைகளை நிறைவுபடுத்துபவராகவும் தோன்றியிருக்க முடியாது.

4. மனித வாழ்க்கைக்கு தேவனை ஒரு வடிவமைப் பாக திரித்துவம் முன்வைக்கிறது.

அன்பின் பெருமிதமான சமூக உறவுகளில், குடும்ப இசைவில் முதல்வராகிய பிதாவின் தத்துவத்திலமைந்திருக் கும் உண்மை இயல்பை நாம் பார்க்கின்றோம். மனிதர் மத்தியிலே பிதா தத்துவத்தையும் புத்திர நிலையையும் உயர்த்திவைக்கும் பக்குவத்தை இரண்டாமவருடைய உண் மையான புத்திரத் தத்துவ நிலையிற் கண்டறிகின்றோம்.

கர்த்தத்துவத்தை எல்லா அன்பின் உணர்வுகளிலி ருந்து வெறுமையாக்கினால் நமக்குத் தேவனானவர் வல்ல மையும் உக்கிரமுமான ஆண்டவராகி அவரது வல்லமை யும் உக்கிரமும் நிச்சயமாக நம்மை அவரிடமிருந்து பிரித்துவிடும்.

அன்புள்ள வாசகரே! இந்தப் புத்தகத்தை வாசித்த பின் உங்கள் மனதில் எழுந்த சந்தேகங்கள் மன எழுச்சிகள் யாவற்றையும் மனம் திறந்து எங்களோடு பகிர்ந்து கொண்டு இன்னும் பல காரியங்களை கற்றுக் கொள்ள எங்களுக்கு எழுதுங்கள். உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கை வளம் பெற பரிசுத்த வேதாகமத்தை வாங்கி வாசியுங்கள். உங்களுக்கு அனுப்பித் தர எங்களுக்கு மகிழ்ச்சி உண்டு.

## உங்களை சோதித்துப் பாருங்கள்!

குர்ஆனிலும் சுவிசேஷத்திலும் கிறிஸ்துவின் ஆள் தத்துவம்.

இச்சிறு நூலை கவனமாகப் படித்திருப்பீர்களானால் பின்வரும் கேள்விகளுக்கு எளிதாய் விடை கூறலாம்.

1. இஸ்லாத்திலும் குர்ஆனிலும் கிறிஸ்துவின் இயல்பைக் குறித்துக் காட்டும் சமமான சில கருத்துக்கள் என்ன?

2. திரித்துவத்தின் கிறிஸ்தவப் போதனையை முஸ்லிம்கள் மறுப்பதற்கு காரணங்கள் என்ன?

3. உமது கருத்தின்படி, முகம்மது ஒரு தீர்க்கதரிசியென்று சுவிசேஷங்கள் குறிப்பிடாததிருப்பதனால் அவை திரித்துக் கூறப்பட்டவைகளென்று சொல்ல முஸ்லீம்களிடம் போது மான காரணங்கள் உண்டா?

4. குர்ஆனிலே காணப்படும் கிறிஸ்துவின் சிறப்புள்ள குணநலன் என்ன?

5. சுவிசேஷத்தில் நிகழாத ஆனால் நிகழ்ந்துள்ளதாக இஸ்லாம் இயேசுவுக்கு உரிமைப்படுத்தும் அற்புதம் என்ன?

6. குர்ஆன் வாசகங்களிலே கிறிஸ்துவின் கர்த்தத்துவத்தை ஒருவர் காண முடிகிறதா?

7. உமது கருத்தின்படி தேவனுடைய பிதா தத்துவத்தை மறுப்பதற்கு வழிவகுத்த காரணங்கள் யாவை?

8. கிறிஸ்துவின் கர்த்தத்துவத்தைப் பற்றி இஸ்லாத்தின் தீர்மானங்கள் என்ன?

9. கிறிஸ்துவின் போதனைகளை மறுத்துக்கூறும் இமாம் அராசிக்கு எவ்வாறு பதில் கூறுவீர்?

10. "கிறிஸ்து ஒரு அடிமை" என்று இஸ்லாம் கூறும் வாசகத்துக்கு எவ்வாறு மறுப்பு தெரிவிப்பீர்?

11. கிறிஸ்துவின் தெய்வீகத்தை பரிசுத்த வேதாகமத்திலிருந்து விளக்க சாட்சியத்தை சுருக்கமாய்க் கூறுக?

12. சுவிசேஷத்தின் கர்த்தத்துவத்தில் தமது உறவு நிலையை கிறிஸ்து கூறியது உண்டா? குறிப்பீடுகள் தருக?

13. பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகள், புதிய ஏற்பாட்டின் அப்போஸ்தலர்கள் ஆகியவர்களிடமிருந்து, கிறிஸ்துவின் கர்த்தத்துவத்தைப் பற்றி கொடுக்கப்பட்டுள்ள நிருபணம் என்ன?

14. பிதாவைக் கனம் பண்ணுவதைப் போல் தம்மையும் கனம் பண்ண வேண்டுமாறு கிறிஸ்து மக்களைக் கேட்டுக் கொண்டது உண்டா?

15. மதகுதர்க்கவாதிகள், அரியூசுகள் போன்றோர் கிறிஸ்துவின் ஆட்தன்மை இல்லையென்ற மறுப்பினைக் காட்டும் நோக்கங்களை எவ்வாறு தெளிவுபடுத்த முடியும்?

16. கர்த்தத்துவத்திலே கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும் வெளிப்பாடுடைய சங்கீதம் ஒன்றிருக்கிறதா?

17. திரித்துவத்திலே தேவன் ஒன்றானவர் என்ற உண்மையை நீங்களே எவ்வாறு விளக்கப்படுத்தக் கூடும்?

18. ''பரிசுத்த திரித்துவம்'' எனப்படுவது மூன்று தேவர்கள் என்று கூறுபவர்களுக்கு உமது விடை என்ன?

19. ''பரிசுத்த திரித்துவம்'' என்பதற்கு பரிசுத்த புத்தகங்களிலே (குர்ஆன், வேதாகமம் - பைபிள்) அடிப்படைகள் உண்டா?

20. பரிசுத்த திரித்துவ சிறப்பியல்பைக் காட்டும் பரிசுத்த வேதாகம வாசகத்தைக் குறிப்பிடுக?

மேலே கொடுக்கப்பட்டிருக்கும் இருபது கேள்விகளில் பதினைந்து கேள்விகளுக்கு சரியான பதில் எழுதினால் எங்களிடம் உள்ள வேறொரு புத்தகம் உங்களுக்கு அனுப்பி வைப்போம்.

எங்களுக்கு கடிதம் எழுதும்பொழுது உங்கள் தெளிவான முகவரியை எழுதுங்கள்.

எங்கள் முகவரி

MARKAZ UL BISHARAH
MANJERI 676 121
KERALA, INDIA

NURUL HAYAHT
AMBIHAPURAM
TRICHY 620 004
TAMILNADU.

ஜீவ ஒளி
த. பெ. எண்: 10,
திருநெல்வேலி - 627 011.